# பண்டைத் தமிழரசர்.

4 - NOV 1924

இது

மதுரைக் காலேஜ் தலைமைத் தமிழாசிரியர்

சு. ஸ்ரீநிவாசையங்காரவர்கள்

எழுதியது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

புக்ஷாப், புதுமண்டபம், மதுரை.

1924.

காபிரைட்]

[விலை அணா 10.

181826

Printed at the Excelsior Press, Madura.

# பொருளடக்கம்.

4 - NOV 1924

| | பக்கம். |
|---|---|
| முகவுரை:— | |
| பொற்கையான் மாறன். | 1 |
| மனுவேந்தன். | 9 |
| காந்தமனும் ககந்தனும். | 19 |
| கோப்பெருஞ்சோழன். | 24 |
| பாரி. | 34 |
| குமணன். | 48 |
| இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன். | 60 |
| பல்யானைச்செல் கெழுகுட்டுவன். | 62 |
| செங்குட்டுவன். | 64 |
| களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல். | 81 |
| ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். | 84 |
| செல்வக் கடுங்கோ வாழியாதன். | 85 |
| பெருஞ்சேர லிரும்பொறை. | 87 |
| இளஞ்சேர லிரும்பொறை. | 92 |
| தொண்டைமானிளந்திரையன். | 95 |
| சோழன் செங்கணான். | 101 |
| சோழன் கரிகாலன். | 107 |
| பாண்டியன் மாகீர்த்தி. | 115 |
| குறிப்புரை:— | |

# முகவுரை.

நான் "பண்டைத் தமிழரசர்" என்னும் இந்நூலுக்கு முகவுரையெழுதுமுன் இந்நூலை யெழுதுவதற்கு யார் உபகாரிகளாக இருந்தார்களோ அவர்களை முதலில் கூறிவிட்டுப் பின்னர்மேலே செல்வேன். அருந்தமிழ்நூல் வெளிப்படுத்தாராகிய மஹாமஹோபாத்தியாய, வே. சாமிநாத ஐய்யர், அவர்கள் அருகிக்கிடந்த தமிழ்நூல்களையெல்லாம் அச்சேற்றி வெளிப்படுத்தாராயின் இக்காலத்துத் தமிழர் யாவரும் கண்ணற்றவராகவே இருக்கவேண்டும். ஐயர் அவர்கள் செய்த பேருதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிதாயின், தமிழர், அவர்களுக்கு யாதுகைமாறு செய்துவிட முடியும்? ஐயாவர்களால் வெளிப்படுத்தப் பட்ட பண்டைத்தமிழ் நூல்கள் நான் எழுதிய இச்சிறு புத்தகத்திற்குப் பேருபகாரமாக இருந்தன. இத்தகைப் பேருபகாரிக்கு யான் செய்யும் கைம்மாறு யாது?

அன்றியும், பேராராய்ச்சியாராகிய, வித்வான், மு. இராகவையங்காரவர்களுடைய ஆராய்ச்சி நூல்களாகிய, வேளிர் வரலாறு, சேரன் செங்குட்டுவன் முதலியனவும் செந்தமிழில் அவர் வெளிப்படுத்தியுள்ள விஷயங்களும் இச்சிறு நூலுக்குத் தக்கதுணைபுரிந்தன. முதன்முதல் நான் தமிழ் நூல் கற்பதற்கு எனக்கு ஆசிரியாக இருந்தவர் இவர். இவருக்கு என்னால் யாது கைப்மாறு செய்ய முடியும்? நிற்க,

பண்டைத் தமிழரசர் என்னும் இந்நூல், இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்டு விளங்கிய கடைச்சங்க காலத்தும், அதற்குச் சிறிது முன்காலத்தும் இத் தமிழ் நாடாண்ட பேரரசர்கள் சிற்றரசர்கள் முதலியவர்களுடைய சரித்திரப் பகுதியைத் தொகுத்தெழுதியதாகும். முன்னர் யான் கூறியபடி கடைச்சங்க காலத்து நூல்களே இதை யெழுதுவதற்குப் பெருந் துணையாக இருந்தன.

தமிழர்கள் "தங்களுடைய முன்னோர்களின் வரலாறுகளைத் தொகுத்து வைக்கவில்லை" என்று கூறுவார், பண்டைத்தமிழ் நூல்களாகிய புறநானூறு, அகநானூறு, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, சிலப்பதிகாரம், மணிமேகலை, பழமொழி, கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களை ஆராய்ந்தால் தாங்கள் கூறுவது தவறு என்று உணருவார்கள்.

தமிழ்கற்பவர்கள், தங்களுடைய முன்னோர்களுடைய வரலாறுகளை யறிந்து கொள்வதற்கு இந்நூல் ஒரு சிறந்த கருவியாக விளங்கும் என்பது எனது துணிபு. இவ்வுரைநடை நூலில் சிற்சில கொள்கைகளை யாதரித்துச் செல்வதற்கு, பழந்தமிழ்நூல்களிலிருந்து மேற்கோள்களாகச் சிற்சில செய்யுட்களும், முன்னோர்களுடைய உரைகளும் ஆங்காங்கே எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இந்நூலில், அரசர்கள் வைக்கப்பட்டுள்ள முறை, ஓரடைவு கருதி வைக்கப்பட்டதன்று. இந்நூலைத் தமிழுலகம் விரும்பி யேற்றுக் கொள்ளும் என்று நான் கருதுகின்றேன்.

இந்நூலைத் தாம் பதிப்பதாக ஒப்புக்கொண்ட மதுரை, புத்தகவியாபாரம், இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனரவர்களுடைய உதவி என்னால் மறக்கற்பாலதன்று.

இங்ஙனம்,

ச. ஸ்ரீநிவாசன்.

ஸ்ரீ

# பண்டைத்தமிழரசர்.

## பொற்கையான்மாறன்.

"உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி
புதவக் கதவம் புடைத்தனன் ஓர்நாள்
அரச வேலி யல்லதி யாவதும்
புரைதீர் வேலி யில்லென மொழிந்து
மன்றத் திருத்திச் சென்றீ ரவ்வழி
இன்றவ் வேலி காவா தோவெனச்
செவிச்சூட் டாணியிற் புகையழல் பொத்தி
நெஞ்சஞ் சுடுதலி னஞ்சி நடுக்குற்று
வச்சிரத் தடக்கை யமரர் கோமான்
உச்சிப் பொன்முடி யொளிவளை யுடைத்தகை
குறைத்த செங்கோல் குறையா கொற்றத்து-இறை"

---

"குன்றிலிள வாடைவரும் பொழுதெல்லா
மலர்ந்ததிருக் கொன்றை நாறத்
தென்றல்வரும் பொழுதெல்லாஞ் செழுஞ்சாந்தின்
மணநாறுஞ் செல்வ வீதி
நன்றறிவார் வீற்றிருக்கு நான்மாடக்
கூடல்வள நகரி"

ஆகிய மதுரைமாநகரின்கண் பாண்டியர் மரபிலுதித்த தோன்றலொருவன் அரசுசெய்து வருவானாயினன். அவனது குடிமக்கள் யாதொரு கவற்சியுமின்றி இன்பமுடன் வாழ்ந்து வந்தனர். அவன்,

“ஒற்றிற் றெரியா சிறைப்புறத் தோர்துமேனப்
போற்றா டுணையாத் தெரிதந்துங்—குற்றம்
அறிவரிதேன் றஞ்சுவதே செங்கோன்மை”

என்னும் வாக்கிற் கமையத் தன் நகரத்தில் நடக்குங் காரியங்களைத் தானே நேரில் அறிவதற்கெண்ணி, இரவுகள் தோறும் மாறுவேடம்பூண்டு அவ்வவ்விடங்களில் நிகழும் இரகசியங்களை அறிந்து, அதற்குத்தகச் செங்கோல் செலுத்தி வந்தனன்.

இங்ஙனம் நிகழுநாட்களில், ஒருநாளிரவில் இம்மாறன், அந்தணர்வீதி யொன்றன் வழியாக வருகையில், நிசிவேளையில் கீரந்தை யென்று பெயர்வாய்ந்த அந்தணன் ஒருவன் மனையில், விளக்குவெளிச்சம் இருக்கக் கண்டு, ‘இவ்விடத்தில் இவ்வேளையில் வெளிச்சம் இருக்கக் காரணம் யாது? அறிவோம்’ என நினைத்து, அவ்வீட்டின் வாயிற்புறத்தையடைந்து, மறைவிருந்து பார்த்தனன். அவ்வேளையில் அவ்வீட்டிலுள்ள அந்தணனாகிய கீரந்தை தன் மனைவியைப் பார்த்து, “பெண்ணே! நான் காசிக்குச்சென்று, கங்கையில் நீராடிச் சுவாமி தரிசனமும் செய்துவர நினைத்தனன். அதுவரை நீ கவலையின்றி யிருப்பாய்” என, மனைவி, “நாயக! தாங்கள் போய்வருவதற்கு யான் யாதொரு தடையுஞ் சொல்லவில்லை. ஆயினும் தாங்கள் இல்லாத வேளையில் என்னைப் பாதுகாப்பவர் யாவர்? யான் எவ்வண்ணம் தனித்து உறைவேன்?” என்று கூறினள். அதற்கு அந்தணன் “பேதாய்!

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவ லின்றேனி னின்று"

என்பதை யறியாயோ? ஆதலின் உன்னைக் காப்பாற்றுபவன் யாவன் என்னும் கவற்சியொழிக; இவ்வுலகத்தை யொருகுடைநிழலின்கண் ஆளும் நம்மாறன் உன்னைக் காப்பாற்றுவான்; குடிகளுக்கு அரசவேலியின்றி வேறு வேலியுமுண்டோ? ஆதலால் எனக்கு விடையளிப்பாய்" என்று கூறினன். மனைவி "அங்ஙனமாயின் தாங்கள் சென்று, கூடிய விரைவில் மீண்டுவருவீர்களாக" என்று விடையளித்தனள். இவற்றையெல்லாம் மறைவிருந்து கேட்ட மாறன் மிகவும் வியப்புற்றவனாய் அவ்விடம் விட்டுப் பெயர்ந்து, வேற்றிடம் சென்றனன். அந்தணன் தன் மனைவிக்குத் தேறுதல் கூறிக் காசிக்குப் புறப்பட்டனன்.

அரசன் விடியுமுன் அரமனையை யடைந்து, அப்பார்ப்பனியைக் காக்கும் பொறுப்பு இனித் தன்னைச் சார்ந்துவிட்டமையால், அவளைக் காக்கு முறையைச் சூழ்ந்து அறிந்து, அன்றுமுதலாக அவ்வீதியிலுள்ள வீடுகள் எல்லாவற்றிற்கும் அரிசியும், அதற்குச் செல்லும் மற்றைப் பொருள்களும் அளிக்கும் வண்ணம் கட்டளை யிட்டனன்.

"நல்லா ரொருவ ருளரே லவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யு மழை"

என்பதே போல அப்பார்ப்பனியின் பொருட்டு அவ்வீதியிலுள்ளாரெல்லாரும் நன்மையை யடைந்தனர். அரசன் இங்ஙனம் செய்யாமல் அப்பார்ப்பனிக்கு மாத்திரம் படித்தனம் அளித்துவந்தால் அவ்வூராரனைவரும் "இவள் தன் கணவனை யூரைவிட்டுப் போக்கி, அரசன் உறவை நாடினள்" என்று அவளைப் பழிப்பதுடன் "அயலான் மனைவி

யை அவனில்லாத வேளையில் பொருள் முதலியன கொடுத்துத் தன் வசப்படுத்திக்கொண்டனன்" என்று தன்னையும் பழிப்பார்களாதலின் இவ்வண்ணம் செய்து வந்தனன். பகற்பொழுது இங்ஙனமாக, இரவில், தான் வழக்கப்படி நகர் சுற்றி வருவதேபோல் வந்து, அவள் வீட்டுத்திண்ணையில் வழிப்போக்கன்போல் படுத்திருந்து, அவ்வந்தணன் மனைவிக்கு யாதோரிடையூறும் நேரிடாவண்ணம் பாதுகாத்து வருவானாயினன்.

இங்ஙனம் பலநாட்கள் செல்ல, ஒருநாளிரவில் மாறன் வழக்கமேபோல் அவ்வீட்டுத் திண்ணையிற் படுக்க வந்தனன். அப்பொழுது இரவு பதினைந்து நாழிகையிருக்கும். அவன் அவ்வீட்டுத் திண்ணையை யடைந்தவுடன் தன் காப்பில் ஒருநாளுமில்லாத ஆண்மகன் குரலை அவ்வீட்டில் கேட்டனன்; நடுக்கமெய்தினன். 'ஆ! ஆ! மகளிர்களுள்ளத்தை யறியவல்லார் யாவர்? இவள் தன் கணவனிடத்தில் மிகுந்த பக்தியுள்ளவள்போல அவனெதிரில் நடித்தனளே! இப்பொழுது இவளது செய்கை எங்ஙனமாயிற்று! நாமும் ஒவ்வொரு நாளும் இவ்விடத்தில் வந்து காத்தோமே; யாது பயன்?

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை"

என்றபடி, சிறைக்காவல் நிறைக்காவல் என்னும் காவலிரண்டினும் நிறைக்காவல் இல்லாவிடத்துச் சிறையாற் காப்பது பயனில்லை' என்று தன் மனத்தில் நினைத்து, ஆற்றுக் கோபமுள்ளவனாய்க் கதவண்டை சென்று ஓங்கித் தட்டினன்.

இஃதிங்ஙனமாக, காசிக்குச் சென்ற கீரந்தை அன்று பொழுதுசாயும் வேளை வந்தனன். இரவில் தன் மனையாளுடன் தான் போய் வந்த யாத்திரையைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனன். இருவரும் நெடுநாள் பிரிந்திருந்தமையால் மிகவும் ஆவலுடன் அளவளாவிக்கொண்டிருந்தனர். அவ்வேளை தான் மாறன் கதவைத்தட்டினதும். இவன் கதவைத் தட்டினதும் உள்ளேயிருந்த அந்தணன் 'தட்டுபவன் யார்' என்று மிகவுந் துணிகரமாகக் கேட்டனன். அதனேடுமமையாமல் தன்மனைவியிடத்தும் ஐயங்கொண்டு, அவளை நோக்க, அவள், "அன்புடையவரே! என்னை ஐயப்படவேண்டாம். நீர் அக்காலத்தில் 'அரசவேலி காக்கும்' என்று கூறிச்சென்றீர். அங்ஙனம் என்னை இதுவரையும் அரசவேலிகாத்தாங்கு, இன்றும் நீர் அடைந்த ஐயத்தினின்றும் நீக்கி, என்னைக் காவாதோ" என்று கூறினுள். அதனைக்கேட்ட மாறன் மிகவுங் கலக்கமெய்தி, "ஐயோ! வந்திருப்பவன் அவள் கணவன் ஆயிற்றே; நாம் அதனை அறியாமற் சென்று கதவைத் தட்டிக்கெட்டோமே; இப்பெண்மணியிடத்தில் நாம் இப்பொழுதுகொண்ட சந்தேகத்தை யவள் புருஷன் கொள்ளும்படி செய்துவிட்டோம். அப்பெண்ணே அரசவேலி காக்கும் என்று பொறுப்பையெல்லாம் நம்மேல் ஏற்றிவிட்டாள். நாம் அவளை இந்நிலைமையினின்றும் எவ்வாறு காப்பாற்றுவது; இப்பொழுது நாம் தர்ம சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டோம். நாம் இன்னார் என்று அந்தணனுக்குத் தெரிந்தால் நாம் ஒவ்வொருநாளும் வந்து தன் மனைவியுடன் சம்பாஷிப்பதாக நினைத்துக் கொள்வன். நாம் வாளா ஏகின், தன் மனைவியிடத்தில் தப்பெண்ணம் கொள்வன்; ஆதலால் யாது செய்யலாம்" என்று ஏங்கிப்

பின் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றத் தேறினன். தன் மனத்திற் றோன்றியவண்ணம் அவ்வீட்டைவிட்டு நீங்கி, அடுத்துள்ள மற்றை வீட்டுக் கதவுகளையும் அவ்வண்ணமே தட்டிவிட்டு, அரமனை போய் நித்திரை செய்தனன்.

இவன் செய்கையிங்ஙனமாக, நீரந்தை தான் கேட்டதற்கு விடை வாராமையால் வெளியில் வந்து பார்த்தான். அப்பொழுது அடுத்த வீட்டு அந்தணன் தன் வீட்டுக் கதவைத் தட்டியது யார் என்று பார்ப்பதற்கு வெளியில் வந்தனன். இவ்வண்ணமே மற்று முள்ள அந்தணர்களும் தங்கள் கதவுகளைத் தட்டியது யார் என்று அறிய வெளியில் வந்தனர். தங்களைத்தவிர அவ்விடத்தில் வேறு ஒருவரையுங் காணமையால் அவர்களனைவரும் ஒன்றுகூடி "நம் அரசன் ஆணையில் ஒருநாளுமில்லாத செய்கை இன்று நிகழக் காரணம் யாது? என்று ஆராய்வாராய் ஒன்றும் தோன்றுமல், இவ்வநீதியை நாளையரசனிடத்துச் சொல்லி, இன்று வந்த கள்வனைப் பிடிக்கும்படி செய்யவேண்டும்" என்று யோசித்துத் தங்கள் தங்கள் விடுதிகளை யடைந்து உறங்கினர்.

சூரியன் உதயமானவுடன் அவ்வந்தணர்கள் நித்திய கருமானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, அனைவரும் ஒன்றுதிரண்டு பாண்டியன் அரசிருக்கை மண்டபத்தை அடைந்து, அங்குள்ள காவலனொருவனுல் தங்கள் வரவை அரசனுக் கறிவிக்கும்படி செய்து, அங்குள்ள ஆதனங்களில் அமர்ந்தனர். காவலனுல் இவர்கள் வரவை யறிந்த அரசனும், அமைச்சனை யழைத்துவரும் வண்ணம் ஏவலனொருவனைப் போக்கித் தான், ஆடையணி முதலியவைகளை யணிந்துகொண்டு, அரசிருக்கை மண்டபத்தை யடைந்தனன். அதற்குள் அமைச்சனும் வந்தனன். அரசன்

கொலுவீற்றிருந்தவுடன், வந்த அந்தணர்கள் தங்கள் பிரதிநிதி மூலமாய்த் தங்கள் வீதியில் இரவில் நிகழ்ந்த செய்தியை வெளிப்படுத்தினர். இதைக்கேட்ட அமைச்சர் முதலிய அங்கத்தினர் திகைத்தனர். அரசனும் வியப்பெய்தினவன்போற் றன்னைக் காண்பித்து, அமைச்சர்களை நோக்கி, "அக்கள்வனை யறிவோமாயின் அவற்கு ஏற்படுந் தண்டம் யாது என்பதை நீதி நூல்களால் ஆராய்ந்து சொல்லுக" என்றனன். அதற்கு அமைச்சர் முதலாயினோர் 'அவற்குத் தண்டமாவது, அத்தீமை செய்த அவனது கையைக் குறைப்பதே' என்றனர். உடனே அரசன் இருக்கையினின்றும் எழுந்து, உடைவாளையுருவித் தன் வலக்கரத்தைத் துணித்துக்கொண்டனன்.

கண்டோரனைவருங் கலக்கமெய்தினர். 'என்னே நம்மரசன் செய்கை யிருந்தவாறு' என்று கதறினர். அரசன் அவர்களைப்பார்த்து "மறையவர்களே! இவ்வடாத காரியத்தைச் செய்தவன் யானே; அதை நீங்கள் ஐயுறவேண்டாம்" என்று கீரந்தை காசிக்குப் போகும்போது தன் மனைவியிடத்தில் கூறியதும், அதற்காகத் தான் அவள் பொருட்டு அவ் வீதியிலுள்ளா ரனைவர்க்கும் படியளித்ததும், இரவில் அவள் வீட்டில் காவலிருந்ததும், காசிக்குச் சென்ற கீரந்தை திரும்பிவந்து, அவளுடன் பேசிக்கொண்டிருப்பதைச் சந்தேகித்துக் கதவைத்தட்டினதும், பிறகு அவன் அவள் கணவன் என்பதறிந்து, அவன் ஐயுறுவண்ணம் மற்றுமுள்ளார் வீடுகளின் கதவுகளைத் தட்டினதும் ஆகியவற்றை யெல்லாம் அவர்கட்கு விளங்கக்கூறினன். இவற்றைக் கேட்ட மறையோர் அரசன் செங்கோற்றிறத்தை வியந்து ஆ! ஆ! அரசனைவான் இவனொருவனே! இவன் அரசாட்சியின் கீழுள்ள நாமே மக்கட் பிறப்பெடுத்

தவர்களுள் மாண்புடையோம்; என்று பல் பல கூறி, அர சனுக்குற்ற தீங்கை நினைத்து வருந்தினார்கள்.

பிறகு, ஒருவாறு தேறி, அவ்வந்தணர்களனைவரும் வேள்வி யொன்றியற்றி, அதனாற் கடவு ளருள்பெற்று, அவனது குறைந்தகை பொற்கையாமாறு செய்தனர். அதுமுதல் அவன் "பொற்கையான்மாறன்" என்னும் பெயரெய்தினன்.

"கோற்கையான் மாறன் குலசேகரப்பெருமான்
பொற்கையா னகதை போதாதோ—நற்கமல
மன்றலே வாரி மணிவா சலையசைக்கத்
தென்றலே யேன்வந்தாய் செப்பு"

(கம்பர்)

கையரிந்தான் மாறன் கதவிடித்த குற்றத்தால்
எய்யுஞ் சிலைக்கை யிரங்கேசா—பையத்
தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.

(இரங்கேச வெண்பா)

# மனுவேந்தன்.

4 - NOV 1924

"வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத்
தான்றன் அரும்பெறற் புதல்வனை யாழியின்மடித்தோன்

சோழநாட்டில் திருவாரூரிலே சோழர் குலத்து உதித்த 'மனு' என்னும் வேந்தன் அரசர்கள் தன்னைப் போற்றும் வண்ணம் மறங்கடிந்து, இவ்வுலகத்தைக் காக்கின்ற நாட்களில், தனக்குப் பெறும் பேறுகளுள் மிகச் சிறந்த பேறாகிய மக்கட்பேறென்ப தொன்றின்மையால் மிகவும் மனம் வருந்தித் தானும் தன் மனைவியும் நாடோறும் பூங்கோயிலின்கண் எழுந்தருளியுள்ள தியாகராஜப் பெருமானடிகளை வணங்கி வழிபடுவாராயினர். இங்ஙனம் பலநாட்கள் செல்ல விடங்கப் பெருமானருளினால் மனுவேந்தன்மனைவி கருத்தரித்தனள். கருத்தரித்த அவள் பத்துமாதங்கள் சென்றபிறகு குழந்தை யொன்றனைப் பெற்றெடுத்தாள்.

மலரிலிருந்து மணம் தோன்றுவதே போலத் தான் பிறந்த குலத்தை விளக்கத் தோன்றிய மைந்தனுக்குத் தகுந்த பருவங்களில் செய்யவேண்டிய ஜாதகர்மம், நாமகர்மம் முதலியவற்றை மனுவேந்தன் செய்து, வளர்த்து வந்தான். விடங்கப் பெருமானருளினால் பிறந்தமையால் 'விடங்கன்' என்று பெயர் பூண்ட அம்மைந்தன் பிரமசரிய விரதம்பூண்டு, தகுந்த ஆசானையடைந்து, வேதம், சாஸ்திரம், புராணம், இதிஹாசம் முதலியவற்றையும்; தன் மரபுக்குரிய யானையேற்றம், குதிரையேற்றம், தேர் செலுத்

தும் வன்மை, படைக்கலங்களையாளுந்திறம் முதலிய கலை களையும் மிகவும் ஆர்வமுடையவனாய்க் கற்றுத்தேர்ந்தான்.

இங்ஙனம் பலவாற்றானும் மேன்மையடைந்து வளர்ந்து வரும் மைந்தனைக்காணப் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சி சிறக்காமலிருக்குமோ? தன் மைந்தனைக் காணுந்தோ றும் உவகையடைந்த மனுவேந்தன் அவனுக்கு மணப்பரு வம் வந்தடைந்ததையறிந்து, தக்கதோரிடத்தில் கலியாண மும் செய்துவைத்துத் தன்னால் ஆளப்பட்டுவரும் உலக பாரத்தையும் அவன் ஏற்றுக்கொள்ளும்படி செய்து, தான் கண்குளிரக்கண்டு மகிழ்ச்சியடைந்து இளைப்பாறுவதாக எண்ணியிருந்தான்.

"ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல"

என்னும் ஆன்றோர் வாக்கிற்கமையச் சோழன் எண் ணங்கள் யாவும் பழுதாயினவே: இவ்வண்ணமே மனிதர் களிற் பெரும்பாலார் இன்பங்கள் எல்லாவற்றையும்தாமே யனுபவிக்குமாறும், அங்ஙனம் அனுபவித்தற்கு முதற்கா ரணமான பொருளையடையுமாறும், அப் பொருள் தான் முயற்சியானும் என்று நினைத்து முயலுமாறும், அம் முயற்சிக்குவரும் இடையூறுகளை நீக்கித் தாம் அடையுமா றும், அதனைப் பிறர் கொள்ளாமல் காக்குமாறும், அப் பொருளால் தன்னைச்சேர்ந்தாரை உயர்த்துமாறும், தம் பகைவரை யழிக்குமாறும், பிறகு தாம் அவ்வின்பங்களை யனுபவிப்பதும் ஆகிய பலவித நினைவுகளை நினைக்கின்றனர். இவர்கள் நினைக்கும் வண்ணம் முடியுமோ? அங்ஙனம் கடவுளொருவர்க்கல்லவா முடியும்! கடவுள், மனுவேந் தன் எண்ணியவண்ணம் கடைக்கூட்டாமல் அவன் செங்

கோலைப் பரிசோதிக்க நினைத்தனர். அந்நினைவிற்கேற்ப ஒருநாள் இளவரசன் தன்தந்தையை யடைந்து, அவர் பாதங்களில் வணங்கிநின்று, 'ஐய! அடியேன் தேவரீரிடத்தில் விண்ணப்பம் ஒன்று செய்துகொள்ள வந்தனன். அதற்குத் திருச்செவி சாய்த்தருளவேண்டும்' என்று குறையிரந்து நிற்ப, அரசன் புன்சிரிப்புடன் தன் மைந்தனைப்பார்த்து, "மைந்த! நின் உள்ளத்தில் கொண்டது யாது? வேட்டமேற்செலவோ; அன்றித்தேசங்கடோறும் திரிந்து அவ்வவ்விடத்துக் குடிகளின் நடையுடைபாவனைகளை யறிந்துவந்து நாகரிகம் மிகுக்கவோ; எங்ஙனமாயினும் உரைத்தருள்க" என, வீதிவிடங்கன், "அண்ணலே! அவையெல்லாம் யான் கொண்ட கருத்துக்களல்ல, கமலாலயத்தின்கண் எழுந்தருளியுள்ள ஸ்ரீதியாகராஜப் பெருமானடிகளை வழிபட்டேத்தி வருவான் நினைத்தனன்; இஃதொன்றே யான்கொண்ட கருத்து" என்றனன். மனுவேந்தன் இம்மொழிகளைச் செவி குளிரக்கேட்டு உளம்பூரித்து, மைந்தனை வாரியெடுத்து மார்போடணைத்து, மதிமுகந்துடைத்து, 'ஐயனே! நின் வடிவம குறுகியவாறு என்னே; நின் அறிவு மிக்கவாறு என்! வறியவனொருவனிடத்து மிகுந்த நிதியினைக்குவித்து, நீ வாரியெடுத்துக்கொள்' என்றால் அவன் யாது கூறுவான்; நீ தியாகராஜப்பெருமானை வணங்கச்செல்லுமிடத்து யார் மறுப்பது? நீ சுகமே சென்று மீள்க, என்றனன். மைந்தன் தந்தையிடத்து விடைபெற்றவாறே தாயின் அந்தப்புரத்தை யெய்தி, அவ்விடத்திலும் விடைபெற்றுத் தன் மாளிகை யடைந்து, தன் ஏவலாளரிடத்துக் கோயிலுக்கு வேண்டிய திருமஞ்சன திரவியம், நிவேதனப்பொருள், ஆடை அணிமுதலியவைகளைச் சித்தப்படுத்தச் சொல்லித் தான் நீராடி யாடையுடுத்து, விபூதியணிந்து கோயிலுக்குச்

செல்ல ஆயத்தமாயினன். அவன் அப்பொழுது வாயிலின்கண் வந்துநின்ற தேரிலேறி, அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் முதலியோரும், மெய்க்காவலர் மந்திரி பிரதானி முதலியோரும் தன்னைச்சூழ்ந்துவரவும், நால்வகைப் படையும் நன்றாயமைந்து, பாதுகாத்துவரவும் சுவாமி தரிசனத்திற்குக் கோயிலை நோக்கிப் புறப்பட்டான்.

அரசிளங்குமரன் இங்ஙனம் பலவித ஆடம்பரங்களுடன் வீதிகளையெல்லாம் கடந்துசென்று, கோயிற்புறத்தையணுகும் வேளை, 'தருமதேவதையே மனுவேந்தனது செங்கோலின் திறத்தைச்சோதிக்க நினைத்தது' என்னும்படி, ஈன்றணிமையையுடைய இளங்கன்று ஒன்று மனிதர்கள் தன்னைக் காணுவண்ணம் துள்ளிக்குதித்தோடிவந்து, தேர்க்காலிலகப்பட்டு, நசுக்குண்டு இறந்தது. இறந்த கன்றைப் பார்த்த பரிஜனங்கள் அரசிளங்குமரனுக்கறிவிக்க அவன் தேரினின்று மிறங்கி, இறந்தகன்றையும் அதனைத்தேடியலறிக்கொண்டு தூரத்தில் வரும் பசுவையுங்கண்டு மூர்ச்சையடைந்தனன். பிறகு ஒருவாற்றால் தெளிவிக்கத்தெளிந்து, "மாசற்ற சூரியகுலத்திற்கு நானோர் மாசாக வந்து பிறந்தேனே; ஐயோ! 'குலத்தைக்கெடுக்க வந்த கோடரிக்காம்பு' என்பது என்னை நினைத்தே பிறந்தது போலும்! மலர்தலையுலகம் காக்கும் மனு என்னும் எங்கோமானுக்கு இப்பழி உலகில் வந்தெய்துவதற்கோ நான் வந்து பிறந்தது" என்று பலவிதமாக இரங்கும்வேளை, பக்கத்திலிருந்த பெரியோர்கள் "குமர! இது தெய்வச்செயலால் நேர்ந்தது; இதனை விலக்க யாரால் முடியும்; விதிவலிது என்பதை அறியாயா? ஆதலாலிதைக்குறித்து வருந்தாதொழிக; இதற்குத்தகுந்த பரிஹாரத்தைத் தேடுவதே முறை" என்று பிராயச்சித்தத்தைச்செய்து கொள்ளும்படி சொல்ல, அவன், " நீங்கள்

கூறியவண்ணம் செய்வது அறமேயாகில், இதையென் தந்தை யறியுமுன் செய்து கொள்ளுவேன்," என்று சொல்லித் தனது புரோஹிதரை நாடிச்சென்றனன்.

இஃதிவ்வண்ணமாக, கன்றினைப்பிரிந்த பசு அதைத் தேடிக்கொண்டே அஃதிறந்துகிடக்குமிடத்தை யடைந்து, தன் கன்று உயிர் நீங்கிக் கிடப்பதைக்கண்டு மிகவும் துயர முற்று, "ஐயோ! என் கன்றைக்கொன்றவன் யாவனோ தெரியவில்லையே; யாதொன்றுமறியாத இச்சேங்கன்று அவனுக்கு யாது துன்பம் செய்ததோ? தேரை இதன் மேலூர்ந்து கொன்றனனே! இது என்ன அநீதி; மனுவேந் தன் அரசியலிலும் இவ்விதம் நடப்பதுண்டோ?" என்று பலவாறு கூறி இரங்கியழுது, இதனை நெறிமுறை தவறாது உலகம் காக்கும் மனுவேந்தனுக்கு அறிவிப்பதே முறை என்று கருதிப்போய் அரமனை வாயிலை யடைந்து, அவ்வி டத்தில் கட்டித்தூங்குகின்ற ஆராய்ச்சிமணியின் கயிற்றை இழுத்து அடித்தது. அப்பொழுது உண்டாகிய ஓசையை அரசனும் அமைச்சரும் மற்றை நகரமாந்தரும் யாவரும் கேட்டு நடுக்கமெய்தினர். இடியொலி கேட்ட அரவம் போல் அஞ்சியொடுங்கினர். ஒருநாளும் அசைக்கப்பட்டு ஒலிசெய்யாத அந்த மணி இன்று ஒலிப்பதற்குக் காரணம் யாதென்று ஆராய்வாராயினர். அவ்வோசையைப் பழிப் பறைமுழக்கு என்று கூறலாமோ, அன்றிப் பாவத்தின் ஒலி என்னலாமோ வேந்தனது வழித்திருமைந்தனுடைய ஆவியைக்கொள்வதற்கு வருகின்ற மறலிதன் ஊர்தியின் கழுத்தில் தொங்குகின்ற மணியின் ஆர்ப்பு என்று பேச லாமோ; அதனை எவ்விதம் சொல்வது! அதனை யரசன் கேட்டு, நடந்ததை அறிவதற்கு அரியணை யிழிந்து வாயி லுக்குச் செல்லத்தொடங்குகையில் வாயில் காவலர், அரச

னெதிரில் வந்து வணங்கிவாழ்த்தி, 'இறைவனே! ஒரு பசு வந்து வாயிலிற் கட்டித்தூங்கும் மணியைத் தன் கொம்பினால் அசைத்து அடித்தது. அது கண்ணீர்பெருக அவ்விடத்தில் நிற்கின்றது; அதன் காரணம் யாதென்று நாங்களறிந்து கொள்ளவில்லை' என்று விண்ணப்பம் செய்தனர்.

காவலர் கூறியவற்றைக் கேட்டுக்கொண்டே வாயிலையடைந்து, அங்குக்கண்ணீர் பெருக்கிக்கொண்டு நிற்கும் பசுவைக்கண்டு இரங்கி, "அமைச்சர்களே! இதற்குற்றது என்? இது என் மணியை யடிக்கவேண்டும். கண்ணீர் பெருக்கிக்கொண்டே நிற்கின்றதே, என் அரசியலில் இதற்குக் கொடுமைசெய்தவன் யாவன்? கூறுங்கள்" என்று வினவினான்.

அப்பொழுது அவர்களில், முன்னுற நிகழ்ந்தவெல்லாம் அறிந்துளானாகிய அமைச்சன் ஒருவன் மன்னன் தாளிணைதொழுது, "வளவனே! நின்புதல்வன், ஓர்மணி நெடுந்தேர் மேலேறி, நால்வகைப்படையும் புடைசூழ்ந்து வரப் பூங்கோயிலை நோக்கி அரசுலாம் தெருவிற் போகுங்காலத்தில், இப்பசுவின் இளங்கன்றானது, 'இளங்கன்று பயமறியாது' என்றாங்குத்துள்ளிக்குதித்துத் தேர்க்காலிடையில் புகுந்து, அகப்பட்டு இறந்துவிட்டது. அதனைப்பொறாது தளர்வுற்று வருந்துகின்ற இத்தாய்ப்பசு நீதியை வேண்டி மணியையடித்தது" என்றுதெரிவித்துக்கொண்டான். அம் மனுவேந்தன் அதனைக் கேட்டான்; அப்பசுவுற்ற துன்பத்தை அவனும் உற்றான்; விடம் தலைக்கொண்டாற்போல் வேதனை யடைந்தான். 'இவ்வினை எவ்வாறு விளைந்தது' என்று கூறிக்கொண்டான். 'செவ்விது என் செங்கோல்' என்று புலம்பினான். 'என்னசெய்தால் இப்பசுவின் துன்

பம் நீங்கும்' என்றான். இவ்வாறு அப்பொழுது அரசனுற்ற துயரம் ஓரளவிற்றன்று.

மந்திரிகள் வேந்தன்படும் துயரத்தைக் கண்டனர். அவர்களுள் முதன்மைவாய்ந்தவன் நம்மரசனை இவ்விதம் மேலும் மேலும் துன்பப்படவிடலாகாது என்று அவ்னைத் தேற்றக்கருதி, மன்னவனடிவணங்கி, "அண்ணலே! இதற்காகச் சிந்தை தளர்ந்தருளுவதால் தீர்வுண்டாகுமோ; தேவரீர் மனத்தளர்ச்சியைவிட்டு, இளவரசனைக் கோவதை செய்தார்க்கு விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தின் வழியில் செலுத்துவதுதான் அறிவுடைமையாம். அங்ஙனம் செய்தருளும்படி பிரார்த்திக்கிறோம். இதுவே எங்கள் தீர்மானம்" என்று மொழிந்தான்.

மனுவேந்தன் அதனைக்கேட்டு, "அமைச்சர்களே! நீங்கள், பிராயச்சித்தம் செய்துவைப்பது வழக்கு என்று கூறுகின்றீர்கள்; அது இருப்புலக்கையை விழுங்கினவனுக்குச் சுக்குநீர் கொடுத்துப் பருகச்சொல்வதனேடொக்கும்; அதனால் பசுவின் கன்றைக்கொன்ற பாவம் தீருமா? நான் நேர்மையான தண்டத்தை விதிப்பதினால் என் மைந்தனை இழந்துவிடுவேன் என்று கருதியோ நீங்கள் இவ்விதம் உரைத்தீர்கள்! நீங்கள் கூறியவற்றிற்கு உடன்பட்டால், இவ்வளவுநாளும் என்னைப் பற்றிநின்ற தருமமும் சலித்துவிடுமே! அன்றியும்,

"மாநிலங்கா வலனுவான் மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னுற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த் தறங்காப்பா னல்லனே"

அமைச்சர்களே! என் மகன் செய்த பாதகத்திற்குப் பிராயச்சித்தம் முதலியவற்றைச் செய்துவைத்து, ஆந்நியன் ஓருயிர்கொன்றால், அதற்குப்பதில் அவ்வந்நியனைக் கொல்வேணுைல் 'மனுதர்ம சாஸ்திரம் ஆதியில் ஒரு மனுவினால் ஏற்படுத்தப்பட்டது, பின்னால் அப்பெயர் வாய்ந்த வேறொரு மனுவினால் அது அழிக்கப்பட்டது' என்று உலகத்தார் கூறும் பழிமொழிக்கு நான் ஆளாவேனே யன்றி வேறல்ல; ஆதலால் இவ் விஷயத்தில் நீங்கள் கூறியது தகுதியற்றதாகவே எனக்குப் புலனாகின்றது" என்று கூறினான்.

அப்பொழுது அமைச்சர்கள், அரசனை நோக்கி, "எம்பெருமானே! இதுபோன்ற விஷயங்கள் இதற்குமுன் இவ்வுலகத்தில் எவ்வளவோ நிகழ்ந்துள்ளன. அப்பொழுதெல்லாம், இவ்விதம் கொலைக்குக் கொலை செய்ததாகத் தெரியவில்லை. ஆதலால் தொன்றுதொட்ட நெறியாகிய வேதம் முதலிய நூல்களிற் சொல்லிய வண்ணம் பிராயச்சித்தம் செய்து வைப்பதே மரபாம்" என்று கூறினார்கள்.

மனுவேந்தன் இவ் வண்ணம் கூறிய அமைச்சர்களை இகழ்ந்து கூறி, "அறிவுடையவர்களே! 'அறம் மிகவும் நுட்பம் வாய்ந்தது' என்பதை நீங்கள் அறியவில்லை. இவைபோல் முன் நிகழ்ந்தது என்று கூறினீர்களே! எவ்வுலகில் எப்பசு இத்தகைய இடரையடைந்தது; அன்றியும் 'வேந்தன் வாயிலில் கட்டித்தூங்கும் மணியினைக்கொம்பினால் எறிந்தால் நியாயம் கிடைக்கும்' என்று எந்தப் பசுவாவது இதற்குமுன் நினைந்து அடித்ததுண்டா? இப் பசுவினிடத்தில், அவ்வறிவு பொருந்தியிருப்பதால் இது மற்றைப் பசுக்களைப் பார்க்கிலும் சிறந்தது என்று அறியவேண்டியதில்லையோ?

"தக்க வின்ன தகாதன வின்னவென்(று)
ஒக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்குமபுத் தேளிரே"

என்று சிறந்த நூல் வல்லார் கூறுவா ராதலினல் இதனை விலங்கென்றுன்னுதீர்; மக்களினும் சிறந்த பிறப்பையுடையது என்று கருதுமின். ஆதலின் 'அப் பசுவின் கன்றைக் கொன்றவனைக் கொல்லுவதே துணிவு' என்று நீங்கள் கருதுங்கள். இதனல் அப் பசுவின் துக்கத்தைத் தீர்க்கமாட்டாமல் போயினும் நான் கடமையைச் செய்தவனுவேன். அன்றியும் என்மகன் அக் குற்றத்தைச் செய்தானுதலின் நானும் அதனுடன் தொடர்புடையவனுயினேன். அப் பசு தன் கன்றையிழந்து வருந்துதல் போல நானும் என்மகனையிழந்து வருந்தினுல்தான் அறக் கடவுளுக்கு மனவமைதி யுண்டாகும். ஆதலால் இவ் விஷயத்தில் நீங்கள் குறுக்கிட்டுத் தடுப்பது கூடாத காரியமாம். நான் துணிந்தவண்ணமே செய்து தீர்க்கவேண்டியதுதான் முடிவு" என்று கூறினுன்.

அப்பொழுது அமைச்சர்கள் அரசன் துணிவுக்கு அஞ்சினர். மேல் ஒன்றும் கூற அறியாராய் அவ்விடத்து நின்றுமகன்றனர். பின்னர் மனுவேந்தன் அமைச்சர்களில் ஒருவனை விளித்து, அங்கு வந்து நின்ற தன் மகனைக் காட்டி 'நீ இவனை அழைத்துச்சென்று கன்று தேரானூரப்பட்டு இறந்து கிடக்கும் இடத்தில் இவனைக்கிடத்தி, இவன்மேல் தேரை ஊர்ந்து கொல்க' என்று கட்டளையிட்டான். அதனைக்கேட்ட அவ்வமைச்சன் தான் அக்கொடுந்தொழிலைச்செய்து, உயிர் வைத்துக்கொண் டிருப்பதினும், அத் தொழிலைச் செய்யாது தன் உயிரை விடுவதுமேல்

என்று கருதி, அவ்விடத்து நின்றும் அகன்று தன்னுடைய உயிரைப் போக்கிக்கொண்டு இறந்தான். மனுவேந்தனுக்கு அச்செயலும் தெரியவர அவன் அளவிட்டுக் கூறரிய துயரத்தை யடைந்து, தன்னுடைய மகனைக் கொலை செய்வதற்கு மற்றவர்களை ஏவினால் இன்னும் இவ்விதமே மேலும் மேலும் நிகழும் என்றறிந்து, தன்னுடைய குலமகனைத் தானேகொண்டு அம்மறுகு அணைந்தான்.

"ஒருமைந்தன் தன்குலத்துக் குள்ளானென் பதுமுணரான்
தருமந்தன் வழிச்செல்கை கடனென்று தன்மைந்தன்
மருமந்தன் தேராழி யுறவூர்ந்தான் மனுவேந்தன்
அருமந்த அரசாட்சி யரிதோமற் றெளிதோதான்"

அவ் வேளையில் அறவாழி யந்தணனாகிய கடவுள் வெளிப்பட்டு, மனுவேந்தனுக்குக் காட்சிகொடுத்து, இறந்த கன்றும், அமைச்சனும், இளவரசனும் உயிர்பெற்று எழும் வண்ணம் அருள் செய்தார். அவ்விதமே அவர்கள் உயிர் பெற்றெழுந்தனர். அதனைக்கண்டு, யாவரும் இன்பமெய்தினர். பசு, தன் கன்று உயிர் பெற்று எழுந்ததால் அதற்குத் தன் தீம்பாலை ஊட்டி மகிழ்சிறந்தது. மனுவேந்தன் தனக்கு வந்த இடையூறுகளெல்லாம் நீங்கினமையால் உயிர்பெற்றுப் பாவத்தினீங்கிய தன் மைந்தனையெடுத்து, மார்போடணைத்து மகிழ்ச்சி கூர்ந்து இனிதே தன்னரசியலை நடத்திச் சென்றான்.

"ஈசன் பசுவாக வேமனிளங் கன்றாக
வீசுபுக ழாரூர் வீதிவந்தா ரம்மானை
வீசுபுக ழாரூர் வீதிவந்தா ராமாகில்
காசளவு பால்தான் கறந்ததோ வம்மானை
கன்றை யுதைகாலி கறக்குமோ வம்மானை"

# காந்தமனும் ககந்தனும்.

காவிரிப்பூம்பட்டினத்தில் முற்காலத்தில் காந்தமன் என்னும் அரசன் ஒருவன் இருந்தனன். அவன் அப்பட்டினத்தைத் தலைநகராகக்கொண்டு, சோழநாட்டை ஆண்டு வந்தனன். அவன் சோழர் குடியிலுதித்தோன். அவனுக்குக் குலகுருவாகவும், சூழ்ச்சித்துணைவராகவும் அமைந்தவர் அகத்தியமுனிவராவர். அரசன் அவரனுமதியின்றி அரசியலில் யாதொருகாரியமும் செய்யான்.

அவ்வரசன் தன்னாட்டில் ஆறு ஒன்று இருக்குமாயின் விவசாயம் முதலியன செய்து, அதனைச் செழுமையுறச் செய்யலாம் என்று கருதி அகத்தியரிடம் சூழ்ந்தனன். அவர் அவனது வேண்டுகோளுக்கு இரங்கிக் காவிரியைச் சோழநாட்டிற் பெருகிவரும்வண்ணம் செய்தனர்.

காவிரிநதி சோழநாட்டிற் பெருகிவருவதற்குக் காரணமாயிருந்தவர் அகத்தியரே என்பது பண்டைத்தமிழ் நூல்களால் அறியப்படும். அது:—

மணிமேகலையுள்,

"செங்கதிர்ச் செல்வன் றிருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமரமுனிவ னகத்தியன் றனாஅது
கரகங் கவிழ்த்த காவிரிப் பாவை" என,

பதிகம், 9—12, அடிகளில் காந்தமன் என்னும் அரசன் நீர்வேட்கையால் (தன்னாட்டிற்கு ஆறு ஒன்று வேண்டும் என்னும் அவாவால்) அகத்தியமுனிவரைவேண்ட அவர் தம் கரகத்தைக்கவிழ்க்க, அதினின்றும் காவிரியாறு பெரு

கிற்று என்று கூறுவதாலும், தொல்காப்பியப் பாயிரச்சூத் திரவிசேடவுரையில் நச்சினார்க்கினியர், "கங்கையாருழைச் சென்று காவிரியாரைவாங்கிக்கொண்டு" என்று கூறுவதா லும், இன்னும் கந்தபுராணம் முதலிய நூல்கள், சோழ நாட்டில் இந்திரன் தான் வைத்துவளர்த்த நந்தவனத் திற்கு நீர்வேண்டும் என்று கருதி, விநாயகரை வழிபட அவர், சகியமலையிற் றவஞ்செய்துகொண்டிருந்த அகத்திய முனிவர் கரகத்தைக் காக்கையுருக்கொண்டு கவிழ்த்தனர்; அதினின்றும் காவிரியாறு பெருகிற்று என்று கூறுவதா லும் அகத்தியராலேயே காவிரியாறு தென்னாட்டிற் பெரு கிவந்தது என்பது தெளிவாம். அதுவும் மணிமேகலையிற் காந்தமன் என்னும் அரசன் அகத்தியரை வேண்ட அவர் தம் கரகம் கவிழ்த்தனர்; என்பதனால் காவிரியாறு சோழ நாட்டிற்குக் காந்தமன் என்னும் அரசன்காலத்தில் வந்த தாகக் கூறுவது பொருத்தமாம்.

இவ் வரசன் சோழநாட்டை யாளுங்காலத்திற் பரசு ராமன் என்னு முனிகுமாரர் சூரியவம்சத்து அரசர்களைக் கருவறுத்துவந்தனர். காந்தமன் என்னும் அரசனும் சூரி யகுலத்துதித்தவனாதலின் தன்னையும் பரசுராமன் வந்து பிடிக்கக்கூடும் என்று அஞ்சித் துர்க்காதேவியையடைந்து அவளிடத்துக்கூற அவள் "நீ இது பொழுது பரசுரா மன் முன்னின்று போர்செய்வது தகுதியன்று; நீ எங்கா வது சென்று மறைந்து வசிப்பாய்" என்று கூறினள்.

காந்தமன் துர்க்காதேவி கூறியதை அகத்தியரிடம் கூறி "நான் பரசுராமன்பொருட்டு மறைந்துறையுங்காலத் தில் இந் நகரத்தைக் காப்பதுயார்" என்று சிந்திக்க அகத் தியர் "நீ மறைந்துறையுங்காலத்தில் இந் நகரத்தை உன் னுடைய காதற்பரத்தைமகன் ககந்தன் என்பவன் காக்

கட்டும்; அவனிடத்தில் அரசாள் உரிமை இல்லை; ஆதலால் அவன் பரசுராமனிடத்து அச்சங்கொள்ள வேண்டுவ தில்லை" என்று கூறினர்.

அதுகேட்டுக் காந்தமன் தன் காதற்கணிகைமகன் ககந்தனையழைத்து "யான் பரசுராமனிடத்து அச்சத்தால் வேற்றுருக்கொண்டு மறைந்து திரிவேன். பின்னர் யான் வருமளவும் நீ இந்நகரைக்காப்பாய்; பரசுராமனிடத்து நீ அஞ்சவேண்டுவது இல்லை; என்று கூறி, அவனிடத்து அரசியலை ஒப்புவித்துத் தான் அகத்தியர் வசிக்கும் பொதிய மலையை யடைந்து கரந்து உறைந்தனன்.

பின்னர், ககந்தன் சோழநாட்டை ஆண்டுவந்தனன். அவனுக்கு மக்கள் இருவர் இருந்தனர். அக்காலத்து மருதி என்னும் பெயர்பூண்ட பார்ப்பனியொருத்தி காவிரியில் நீராடித் தனிமையாகவந்தனள். அப்பொழுது ககந்தனு டைய இளையபுதல்வன் அவள் தனிமையாகச்செல்வதைப் பார்த்து, அவள்மீது விருப்புற்றுத் தன் கருத்தை வெளி யிட்டனன். அவள் அதுகேட்டு நடுநடுங்கி "ஐயோ! இவ்வுல கத்திற் கற்புள்ளபெண்கள் மழை பெய்யென்றுற் பெய்யும் என்று கூறுவார்களே! அத்தகைய பெண்கள் பிறர்நெஞ்சு புகார்களே! யான் அங்ஙனமின்றி இவன்மனத்திற் புகுந் தேன்; ஆதலால் என்னிடம் என் கணவனுடன்சேர்ந்து முத்தியைப்பெறும் தன்மை இல்லையாயது" என்று கூறிக் கொண்டே நேரே தன் வீட்டுக்குப் போகாது பூதசதுக்கம் என்னும் இடத்தை அடைந்தனள்.

அங்கேமருதி, பூதசதுக்கத்துத்தெய்வமே! யான் என் னைக்கொண்ட கணவனுக்கு யாதொரு குற்றமுஞ்செய்தறி யேன். அங்ஙனமிருந்தும் என்னைக்கண்ட ஒருவன் மனத்தில்

எளிதாகப்புகுந்தேன். ஆதலால் என்னிடத்து மழையைத் தரும்படியான கற்பு இல்லையாயது. இதற்கு யான்செய்தது யாதோ! நீ என்னைப்புடைத்துண்க; என்னை நீ இன்னும் வந்து அறைந்துண்ணவில்லையே; என்னிடத்து உன் சத்தி பொய்யாய்விட்டதோ! என்று அரற்றினள்.

அப்பொழுது அப்பூதம் அவள் எதிரிற்றோன்றிப் "பெண்ணே! உலகத்துக் கற்புடைப்பெண் தன்கணவனையே தெய்வமாகக்கருதுவதல்லது வேறு தெய்வம் கருதாள். கணவனையே தொழுவாள்; தெய்வம் தொழாள்; அத்தகையார் மழைபெய்யெனப் பெய்யும் என்று முன்னோர்கள் கூறுவர்; நீயோ அங்ஙனமன்றிக் கட்டுக்கதைகளையும், பரிகாச வார்த்தைகளையும் கேட்டு, அவற்றில் நம்பிக்கை கொண்டு, ஆனந்தமடைந்தும், கடவுளர்களுக்குச்செய்யும் விழாவினை விரும்பிச்சென்று கண்டும் உன் தன்மையை இழந்தாய். மற்றைக்கற்புள்ள பெண்களைப்போல நீ ஏவ மழை பெய்யாது. ஆயினும் தன் மனம்போனவண்ணம் நடக்கின்ற மற்றைப்பெண்களையே என் கையிலுள்ள பாசம் கட்டி இழுத்து வருமேயன்றி உன்னை என்கைப்பாசம் கட்டாது. குற்றம் செய்தவர்களை ஏழு நாளுள் அவர்செய்த குற்றத்தையறிந்து ஒறுப்பது அரசன் கடமையாம். அங்ஙனம் செய்யாவிடின் பின்னர் யான் அக் குற்றம் செய்தவரைப் புடைத்துண்பேன். இப்பொழுது உன்னைக் கருதிய அவனை அரசன் இன்று ஏழாம்நாள் ஒறுப்பன். ஆதலின் நீ உன்வீடு செல்க" என்று கூறிவிடுத்தது.

பின்னர்க் ககந்தன் தன் மகன்செய்த குற்றத்தைக் கேட்டறிந்து, ஏழுநாளைக்குள் அவனைத் தன் கைவாளால் கொன்றெறிந்தனன்.

இன்னும், தருமதத்தன் என்னும் வாணிகன், தன் மாமன்மகள் விசாகையுடன் இளம்பருவத்தில் விளையாடிக் கொண்டு, மிகவும் அந்நியோந்நியமாக இருந்தான். அதனைக் கண்ட ஊரார், "இவ்விருவரும் காந்தருவவிவாகத்தாற் கணவன் மனைவியாயினர்" என்று நிகழாததைக்கூறி அலர் தூற்றுவாராயினர்.

விசாகை, ஊரார்கூறும் பொய்மையைப் பொறாமல் உலகவறவியை அடைந்து, அவ்விடத்திலுள்ள கந்திற் பாவையை நோக்கிப் "பாவாய் நீ இவ்வுலகோர்கூறும் பொய்ப்பழியை ஒழிப்பாய்" என்று கூறினள். அக்கந்திற் பாவை முக்காலமுமுணர்ந்ததாதலின் அங்குவந்திருக்கும் ஊராரைநோக்கி "இவ்விசாகை நீங்கள்கூறும் பழிப்பிற்கு இலக்கு அல்லள்; இவள் யாதொரு தீச்செய்கையும் கருதிலள்" என்று தெரிவித்தது.

விசாகை கந்திற்பாவைத்தெய்வத்தால் 'பழியற்றவள்' என்று தெளிவிக்கப்பட்டு நகரத்தார் தன்னைச் சூழ்ந்துவர அவர்கள் நடுவில் வீதியில் வரும்பொழுது ககந்தன்மக்களில் முன் மருதிபொருட்டாக மடிந்தவனுக்குத்தமையன் விசாகையிடத்துப்பிரியங்கொண்டு, 'அவள் தன் மனைவியாயினள்' என்பதற்கு அடையாளமாக அவள்கழுத்தில் மாலை போடுவதற்குத் தன் குஞ்சியில் அணிந்துகொண்டிருந்த பூவை எடுக்கமுயன்றனன். அப்பொழுது பூவை எடுக்கச் சென்ற அவன்கை குடுமியை விட்டு விலகாதாயிற்று.

ககந்தன் தன் மகன்கை அவ்விதம் இருப்பது அந்த விசாகையிடத்துக்கொண்ட தகாக்காதலால் என்றறிந்து, மிகுந்த சினங்கொண்டு, அம்மகனையும் தன் கைவாளால் எறிந்துகொன்றனன்.

இங்ஙனம் ககந்தன், காந்தமன் என்னும் சோழனிட மிருந்து அரசுபெற்று, இவன் அடைந்தது தன் மக்களை இழந்ததேயாம். இத்தகைய அரசர்கள் நீதியைச்செலுத் துமிடத்து ஒருபாற்கோடாது யாவரையும் ஒப்பநாடிக் குற்றத்திற்குத் தக ஒறுப்பதே தங்களுக்குப் பெருமை என்று கருதினர். இவ்வாறு ககந்தன் என்பவனால் காக் கப்பட்டமையால் காவிரிப்பூம்பட்டினம் காகந்தி என்று மறுபெயர் பெற்று வழங்கலாயிற்று.

---

# கோப்பெருஞ்சோழன்.

கோப்பெருஞ்சோழன் என்பான் தமிழ்நாட்டுமூவேந் தருள் சோழர்குலத் துதித்தவன். அவன் சோழநாட்டை ஆளுங்காலத்து அவனுக்கு உறையூரானது தலைநகராய் விளங்கியது. அவன் கல்வி யறிவுமிக்கவன். அதற்கேற் பவே அவனுடன் உயிர்த்தோழராயும், அவனைச் சூழ்ந்தவ ராயும் கல்வி யறிவாளர்பலர் நிரம்பியிருந்தனர். அவருள் முக்கியமானவர் பொத்தியார், பிசிராந்தையார், புல்லாற் றூர் எயிற்றியனார், கருவூர்ப் பெருஞ்சதுக்கத்துப் பூத நாதனார், கண்ணகனார் முதலியோரும் இன்னும் பலசான் றோருமாவர்.

இவனுக்கு மக்கள் இருவர் இருந்தனர். அவர்கள் யாது காரணத்தாலோ தமதந்தையாய இச் சோழனுடன் மாறுபட்டுப் போர் தொடுத்தனர். கோப்பெருஞ்சோழன்

மிக்க அறிவுடையோனுயிருந்தும், தன்மேற்பகைகொண்ட தன் மக்களைச் சமாதானம் அடையும்வண்ணம் செய்து, அவர்களுடனுஞ் சேர்ந்து தன் நாளோலக்கத்தைச் சிறப் படையும்படி செய்ய அறியாதொழிந்தது ஒன்றே அவன் வாழ் நாட்களுக்கு மாசாக மருவியது. அத்தகையோனுக் கும் அறிவு விதிவழிச் சென்றதோ!

தன் எண்ணத்திற்கு மாறுபட்ட மக்களுடன் கோப் பெருஞ் சோழன் வஞ்சிசூடிப் போர்க்கு எழுந்தனன். அவன் தன் மக்களுடன் போர் தொடங்கியதை அவனுட னிருந்த புலவர் புல்லாற்றூர் எயிற்றியனார், புலவர்களுக்கு இயற்கையாக அமைந்த பெருந் தன்மையோடு, கோப் பெருஞ்சோழனது புகழை வியந்து "நீ நின்மக்களுடன் போர் செய்வதற்கு அவர்கள் உனக்கு இயல்பாகவந்த பகைவர்கள் அல்லர்; நீ இவ்வருஞ் செல்வத்தை ஒழித்து விட்டு மேலுலகஞ் செல்லுங்கால் இச் செல்வமெல்லாம் அவர்களையே சாரும்; இஃது உனக்குத் தெரியாத தொன் றன்று. அவர்கள் தோற்பின், அச் செல்வத்தை யார்க்குக் கொடுப்பை? போரில் வெற்றி ஒரு தலையன்றாதலின், நீ அவர்க்குத் தோற்பின் உலகமெல்லாம் நின்னைப்பழிக்கும்; ஆதலின் நீ போரை யொழித்துச் செல்லுந்தேயத்துக்குறு துணை தேடுவை" என்று அவனைச் செவியறிவுறுத்திப் போரை ஒழித்தனர். இங்ஙனம் புலவர்கூறியதைக்கேட்ட வுடன் கோப்பெருஞ் சோழன் மனம், போரை விரும்பிற் றிலது. புலவர்கூறிய வண்ணமே அரசன் தன் மக்களிடத் துச் சினந்தவிர்ந்து, அரசியலை அவர்க்கீந்து, தான் மறு மைக்குரியதைச் செய்யவேண்டிச் சிந்திப்பானுனன்.

கோப்பெருஞ்சோழன் தன்மக்களால் நேர்ந்த மானக் கேட்டைக் கருதிக்கருதிப் பெரிதும் வருந்தி, "சீ! சீ! இது

வோ உலகத்தியற்கை; கெட்டது!" என்று கூறி, இவ்வுலகி யலைத்துறப்பதற்கு மனங்கொண்டு வடக்கிருப்பானானான்.

அக்காலத்தே பாண்டிநாட்டில் பிசிர் என்னும் ஊரில் ஆந்தையார் என்று பெயர்பூண்ட புலவர் ஒருவர் இருந்த னர். அவரைப் பிசிராந்தையார் என்றாவது இரும்பிசிராந் தையார் என்றாவது அழைப்பது வழக்கம். அவர் கோப் பெருஞ்சோழனைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தனர். அவ னுடைய நற்குணங்கள் புலவருடைய மனத்துக்கு ஒத்ததா யிருந்தன. அதனால் அவர் அவனைப் பெரிதும் விரும்பி னர். அங்ஙனமே கோப்பெருஞ் சோழனும் புலவருடைய குண விசேடங்களைக் கேள்வியுற்று, அவரிடத்துத் தன் அன்பைச் செலுத்தினன். அதுமுதல் அவ்விருவருக்கும் உணர்ச்சியொத்தது.

இவ்வுணர்ச்சியொத்தலாகிய நட்பே மற்றைப் புணர்ச்சி நட்பு, பழகுதல் நட்பு ஆகிய இரண்டினும் சிறந்ததாம். அவற்றுள் புணர்ச்சி ஒரு தேயத்தராதல், பழகுதல் பல காற்கண்டும் சொல்லாடியும் மருவுதல் ஆம்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்."

என்னும் அருமைக்குறளின் விசேடவுரையிற் பரிமே லழகர் உணர்ச்சி ஒத்தலாகிய சிறந்த நட்பினுக்குக் கோப் பெருஞ்சோழன் பிசிராந்தையார் இவர்களுடைய நட்பி னையே விதந்து கூறினர்.

இங்ஙனம் இவ்விருவரும் உணர்ச்சி ஒத்ததனாற் பெரு நட்பாளராயினர். இன்னும் இவ்விருவரும் ஒருவரையொரு வர் நேரிற் கண்டாரில்லை. புலவர் பாண்டிய நாட்டிலேயே யிருந்தனர்; அரசன் சோழநாட்டினன்; ஆயினும் அரசன்

யாதொரு எண்ணத்தை மனத்தின்கண் நினைப்பானே அது புலவர் மனத்தின் கண்ணுந் தோன்றும். அங்ஙனமே புலவர்மனத்தின்கண்தோன்றுவன அரசன் மனத்தின் கண்ணதாம். இத்தகைய நட்பு உலகத்தின்கண் காணப்படுவது அருமையன்றோ?

இச்சிறந்த நட்பாளர்களான இவர்களிற் பிசிராந்தையாரை 'நும் இறைவன் யார்' என்று வினவின் அவர்களுக்குப் புலவர் தாம் பாண்டிநாட்டினராயிருந்தும், சோழநாட்டரசனையே (கோப்பெருஞ்சோழனையே) தம் தலைவனாகக்கூறுந்தன்மையினையுடையவர். அதனால் அவர் அத்துணை முதிர்ந்த அன்பு கோப்பெருஞ்சோழனிடத்துக் கொண்டவர் என்பது தெளிவாம். அன்றியும், தமது பெயரைப் பிறர்க்குக்கூறும்பொழுது 'கோப்பெருஞ்சோழன்' என்றே கூறுவர். இவற்றாலெல்லாம் கோப்பெருஞ்சோழனிடத்துப் புலவர் மிக்க அன்புகொண்டவர் என்று கூறுவதே பொருத்தமாம்.

இங்ஙனம் இவ்விருவருஞ் சேய்நாட்டினராய் மனத்தான் ஒற்றுமையுடையவராய் விளங்கியகாலத்துத்தான் கோப்பெருஞ்சோழன் இவ்வுலகியலைத் துறந்து, வடக்கிருந்தான்.

அப்பொழுது கோப்பெருஞ்சோழன் தன்னருகிலுள்ள சான்றோரை நோக்கி "நான் இப்பொழுது வடக்கிருக்கப்போகின்றேன்; அதனையுணர்ந்து பிசிராந்தையார் என்னும் என் அருமை நண்பினர் இதுபொழுது வருவார்" என்று கூறினன். அதுகேட்டுச் சான்றோர் "நீ கூறிய அப் பிசிராந்தையார் உன்னை நேரிலறியார்; அன்றியும் அரசாட்சிச் செல்வத்தில் நீ வீற்றிருக்கும்பொழுது யாவ

ரும் நட்பாவது உலகியல்பு; அதனைக்கொண்டு, நீ அச் செல்வத்தைத் துறந்து செல்கையிலும் அவ்விதமே இருப்பர் என்று கருதுவது எவ்வாறு பொருந்தும்?" என்றனர். கோப்பெருஞ்சோழன் "சான்றோரே! நீங்கள் கூறுவது பொதுவான உலகியல்பேயாம். எங்கள் நட்பு அத்தன்மைத்தன்று; இது அதனினுஞ் சிறப்புடைய நட்பு. அப்பிசிராந்தையார் நான் செல்வமுடையனாய் விளங்குங் காலத்துவாராதொழியினும், நான் இடருறுங்காலத்து வராமலிரார். புலவீர்!

"கவைக்கதிர் வரகி னவைப்புறு வாக்கல்
தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்டயிர் கொளீஇ
ஆய்மக ளட்ட வம்புளி மிதவை
அவரை கொய்யுந ரார மாந்துந்
தென்னம் பொருப்ப னன்னாட் டுள்ளும்
பிசிரோ னென்பவே னுயிரோம் புநனே
செல்வக் காலை நிற்பினும்
அல்லற் காலை நில்லலன் மன்னே"

இதனை நீங்கள் அறிவீர் என்று கூறினன்.

பின்னர்க் கோப்பெருஞ்சோழன் வடக்கிருந்ததை இருவர் மனமும் ஒன்றுகலான் அறிந்த பிசிராந்தையார், தம் மனமொத்த அரிய நண்பினன் இறந்த பிறகு, தமக்கு அத்தகைய நட்பாளனைப் பெறுவது அரிது என்று கருதித் தாமும் அவனுடன் வடக்கிருக்க நினைத்துத் தம் நாட்டினின்றுஞ் சோழநாடு நோக்கி வந்துகொண் டிருந்தனர். அதனைச் சோழன் தன் மனத்தான் அறிந்து அருகிலுள்ள சான்றோரை நோக்கி—

"கேட்டன் மாத்திரை யல்லதி யாவதுங்
காண்ட லில்லா தியாண்டுபல கழிய
வழுவின்று பழகிய கிழமைய ராயினும்
அரிதே தோன்ற லதற்பட வொழுகலென்று
ஐயங் கொள்ளன்மி னாரறி வாளீர்
இகழ்வில னினிய னியாத்த நண்பினன்
புகழ்கெட வரூஉம் பொய்வேண் டலனே
தன்பெயர் கிளக்குங் காலை யென்பெயர்
பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த
காதற் கிழமையு முடைய னதன்றலை
இன்னதோர் காலை நில்லலன்
இன்னே வருகுவ னொழிக்கவவற் கிடமே"

என்று கூறிச் சான்றோர்களுடைய ஐயத்தை நீக்கித் தன்னை நோக்கி வருகின்ற பிசிராந்தையார்க்குத் தான் வடக்கிருந்த இடத்திற்கு அடுத்து, இடனொழித்துவைக்க அவர்க்குக் கூறினன்.

மேலே கூறிய செய்யுளால் அவ்வரசன் தானும் அவரும் ஒருவரை யொருவர் கேட்டிருக்குமளவல்லது காண்டலில்லை என்றும், புலவர் தன்னிடம் கொண்டுள்ள நட்பு இத்தன்மையது என்பதை "இனைய ரிவரெமக் கின்னம்யாமென்று, புனையினும் புல்லென்னு நட்பு" என்னும் மறைமொழி அறிவுறுத்தங் கருத்தினை நன்கு அறிந்து, தாம் வேறு சோழன்வேறு என்றுகருத மனமிலராய்ச் சோழன் பெயரையே தம்பெயராகக் கூறிக்கொள்வதனால் அறியலாம் என்றும், புலவர் இக்காலை வராமல் நில்லார் ஆதலின் அவருக்கு இடன் ஒழித்துவைக்க என்றுங் கூறித் தன்கருத்தை வெகு லளிதமாக விளக்கியிருப்பது யாவரும் அறிந்து மகிழற்பாலதே.

பின்னர், கோப்பெருஞ்சோழன் கூறியாங்கே அவனை அடுத்துள்ள சான்றோர்கள் பிசிராந்தையார்க்கு இடனொழித்து வைத்தனர்.

பிசிராந்தையார் உறையூரை அடைந்து சோழன் வடக்கிருக்குமிடஞ் சென்றனர். அவ்விடத்துள்ள சான்றோர், இவர்க்கு யாண்டு பல சென்றும இவர் கிழத்தன்மைக்குரிய நரைதிரை ஒன்றுமின்றி இருப்பது கருதி வியந்து, அவரை நோக்கிப் "புலவீர்! நுமக்குக் காலம் பலவாலோ நரை நுமக்கில்லையாலோ" என்று வினவப்புலவர்:-

"யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியோடு மக்களு நிரம்பினர்
யான்கண்ட னையரென் னிளையரும் வேந்தனும்
அல்லவை செய்யான் காக்கு மதன்றலை
ஆன்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே"

என்று தமக்கு யாண்டு பலவாகியும் நரைவாராததன் நுட்பத்தை அவர்களுக்கு விளக்கிக்காட்டினர்.

புலவர் கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும் இடமடைந்து, தம் உயிர்த்துணைவனைக்கண்டு, மனம் வருந்தித் தம் மனமொத்த நண்பனுடன் தாமும் வடக்கிருந்தனர். அதனைக்கண்டு கோப்பெருஞ் சோழனுடைய மற்றுமுயிர்த்துணைவரும், அவனுக்கு அமைச்சுக் கடம் பூண்டவருமாகிய பொத்தியார் என்னும் புலவர் வியந்து:—

"நினைக்குங் காலை மருட்கை யுடைத்தே
எனைப்பெருஞ் சிறப்பினோ டீங்கிது துணிதல்
அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுத்

தோற்றஞ் சான்ற சான்றேன் போற்றி
இசைமரபாக நட்புக்கந் தாக
இனையதோர் காலை யீங்கு வருதல்
வருவ னென்ற கோனது பெருமையும்
அதுபழு தின்றி வந்தவ னறிவும்
வியத்தொறும் வியத்தொறும் வியப்பிறந் தன்றே
அதனல், தன்கோ லியங்காத் தேயத் துறையுஞ்
சான்றே னெஞ்சுறப் பெற்ற தொன்றிசை
அன்னேனை யிழந்தவிவ் வுலகம்
என்னு வதுகொ லளியது தானே''

என்று இரங்கிக் கூறினர்.

அவ்வரசன் ஒருவருந் துறந்துசெல்வதற்கு அருமையான அத்துணைப் பெருஞ்செல்வம் எய்தியிருந்தும் அதனை அவன் துறக்கத்துணிந்தது பெருவியப்பானது என்றும் அதனினும் பெருவியப்பினைத் தருவதாம் வேற்றரசன் நாட்டுச் சான்றேனொருவன் நட்பேகாரணமாகக்கொண்டு, இத் தன்மையான ஓர் இன்னுக்காலத்து ஈங்குவருதல் என்றும், அதனல் அவ்விதம் தன் நாட்டுவாழும் குடிகளின் மனத்தைக் கவர்ந்தமையே யன்றி வேற்று நாட்டுவாழும் குடிகளின் மனங்களையுந் தன் மனமொத்து வாழப்பண்ணிய அத்தகைய அரசனை இழந்த இவ்வுலகம் மிகவும் அளிக்கத்தக்கது என்றும் கழறிப் பொத்தியார் வருந்தியது இப்பொழுதும் அக்காட்சியை நம் கண்ணெதிரில் காட்டி மனத்தை உருக்குகின்றது.

கோப்பெருஞ்சோழன் வடக்கிருக்கும்போது பொத்தியாரும் வடக்கிருக்கச் சென்றனர். சோழன் அவரை நோக்கிப் புலவீர்! நீவிர் இப்பொழுது என்னுடன் வடக்

கிருத்தல் கூடாது. 'மகப்பெறு மானுடர்கள் வானவர் தம்மூர்க்குப் புகப்பெறார்' என்பது அறவுரையன்றோ? ஆதலின் நீர் உமக்கு மகப்பிறந்த பின்னர் வாலாம் என்று கூறித் தவிர்த்தனன். பொத்தியார் அரசன் கூறியதை மதித்து, அங்ஙனமே மகப்பிறந்த பின்னர் வடக்கிருப்ப தாகக்கருதிச் சென்றனர். சென்றவர் உறையூரில் அரசனில்லாமைகண்டு, யானையை யிழந்தபாகன் கலங்குவது போலப் பெரிதும் கலங்கி:—

"பெருஞ்சோறு பயந்து பல்யாண்டு புரந்த
பெருங்களி றிழந்த பைதற் பாகன்
அதுசேர்ந் தல்கிய வழுங்க லாலை
வெளில்பா ழாகக் கண்டுகலுழ்ந் தாங்குக்
கலங்கினே னல்லனே யானே பொலந்தார்த்
தேர்வண் கிள்ளி போகிய
பேரிசை மூதூர் மன்றங் கண்டே"

என இங்ஙனம் கையற்றுக்கூறி வருந்தினார்.

பின்னர், சிறிதுகாலஞ் சென்றபிறகு பொத்தியார் தமக்கு மகன் பிறந்தானைக் களிப்பெய்தி, முன் சோழன் 'உமக்கு மகன் பிறந்த பின்னர் வருக' என்று கூறியதை நினைந்து, அவன் வடக்கிருந்த இடத்தை அடைந்து, "நினக் கறிவுடைமகன் பிறந்தபின் வாவெனச்சொல்லி என்னை இவ்விடத்தினின்றும் போக்கிய என்னோடு உறவில்லாத வனே! நினக்கும் எனக்கும் முன்னிருந்த நட்பைக் கருதா திருப்பையல்லை; ஆதலின் யான் வடக்கிருக்கக் குறித்த இடம் யாது? நீ சொல்வாயாக" என்று சோழனது நடுகல் லைக்கண்டு கூறினர். இக் கருத்தமைந்த செய்யுள் புலவர் கூறியிருப்பது உண்மை நட்பாளர் கருத்தினைக் கவரும் என்பது திண்ணம். அது:—

"அழலவிர் வயங்கிழைப் பொலிந்த மேனி
நிழலினும் போகா நின்வெய்யோள் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென
என்னிவ ணொழித்த வன்பி லாளா!
எண்ணா திருக்குவை யல்லை
என்னிடம் யாதுமற் றிசைவெய் யோயே."

என்பதாம்.

பொத்தியார் இங்ஙனம் கூறவுங் கோப்பெருஞ்சோழன் தான் நடுகல்லாகியும் புலவர்க்குத் தானிருந்த இடத்திற் சிறிதுவிலகி இடங்கொடுக்க, அவ்விடத்திற் பொத்தியாரும் வடக்கிருந்தனர்.

இத்துணையும் கூறியவாற்றாற் கோப்பெருஞ்சோழன் நாவீற்றிருந்த கலைமாமகளொடு நன்பொற்பூ வீற்றிருந்த திருமாமகளுமாம் இருபெருந்திருவுமுடையோனாய் வாழ்ந்தவன்-புலவர் பெருமக்களையே தன் சூழ்ச்சிச் சுற்றமாகக் கொண்டிருந்தவன்- தன் இனிய குணத்தாற் றன்னொடு பல புலவர்கள் உயிர்விடுந் தன்மை வாய்ந்தவன்- "எல்லார்க்கு நன்றாம் பணிதல் அவருள்ளும், செல்வர்க்கே செல்வந்தகைத்து" என்னும் மறைமொழியின் கருத்தினை நன்கறிந்து, செருக்கின்றி அடக்கமுடையோனாய்த் தன்னைக்கூறுங்காலத்துப் பேதைச்சோழன் என்று இழிவாகக் கூறிக்கொள்ளும் பெருந்தன்மை வாய்ந்தவன்-என்பனவும், தம்மை ஆதரித்தவர் அல்லது தம்மால் நட்புக்கொள்ளப்பட்டவர்கள் இடருறுங்காலத்துத் தாமும் இடருற்று, அவர்கள் உயிர் நீங்கின் தாமும் உடனுயிர் நீங்கும் பெருந்தன்மை வாய்ந்த பெரும் புலவர்களைத் தன்னிடத்தேயுடையதாயிருந்தது தமிழ்நாடு-என்பதும் இன்னும் பலவும் நன்கறியக் கிடக்கின்றன

---

# பாரி.

"பாரி பாரி யென்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகு புரப்பதுவே"

பாரி என்னும் வள்ளல் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர்த் தமிழ் நாட்டை ஆண்ட சிற்றரசர்களில் ஒருவனுவான். அவன் பறம்பு என்னும் மலைநாட்டுக்குத் தலைவன். அப் பறம்புநாடு முந்நூறு ஊர்களையுடையது. அப் பறம்புநாடு பாண்டிய மண்டலத்தின்கண் உள்ளதென் பது நூலாராய்ச்சியில் நுண்ணுணர்வுடையோர் துணிபாம்.

இவன் அக்காலத்தே பெருங்கொடையினுல், முடியுடை மூவேந்தரும் அழுக்காறு கொள்ளுமாறு மிக்க புகழை ஈட்டினுன். அவன் கொடையானது பழுமரம் வௌவாலால் விரும்பப்படுவது போல் புலமை மிக்க பெரியோர்களால் விரும்பப்பட்டு, அவர்கள் அவனைச் சூழ்ந்திருக்குமாறு செய்தது. "வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்" "புலனழுக்கற்ற அந்தணாளன்" "பொய்யா நாவிற்கபிலன்" என்று புலவர்களாலும் புகழப்பட்ட புலவர்பெருமானுன கபிலரையே 'பாரியின் கொடை பண்புடனழைத்தது' என்ருல் அவன் கொடையினைப்பற்றிப் புகழ யாவரால் முடியும்? இன்னும், தமிழகத்தில் பெருங்கொடையாளர் எவ்வளவினரோ பலர் இருக்கக் கொடைக்கு வரம்பாகக் "கொடுக்கிலாதானைப் பாரியே யென்று கூறினுங் கொடுப்பாரிலை" என்று இவன் சைவசமயாசாரியரால் புகழப்பட்டனன் என்ருல் இவனது கொடைத்திறத்தினைக் கூறவல்லார் யாவர்?

இப்பாரி ஒருக்கால் தன் தேரில் ஏறி, வேற்றூர் சென்று திரும்பி வரும்பொழுது, நடுவழியில் ஒரு முல்லைக் கொடி கோல்தேடி யோடும் கொழுந்தாக நின்று, காற்றால் அலைந்து வருந்தித் தன் தேரைத்தொட்டுத் தடவுவதைக் கண்டு "அவ் வோரறிவுயிரும் தான் படர்ந்தேறுவதற்குத் தன் தேரைக் கேட்கின்றது" என்று கருதி, அத்தேரை அக்கொடி படர்ந்தேறும் வண்ணம் அவ்விடத்தில் விட்டு வைத்துத் தான் கீழிறங்கித் தன் காலாலே நடந்து சென்று, தன்னூரை யடைந்தான். இவ்வரலாற்றை:—

"பூத்தலை யறு அப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி"
"ஊருடன் இரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி"
"சுரும்புண, நறுவீ யுறைக்கும் நாக நெடுவழிச்
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்ளருவி வீழுஞ் சாரல்
பறம்பிற் கோமான் பாரி"

என்பனவற்றால் அறியலாம்.

இப்பாரி தனது பறம்புநாட்டின் கண்ணுள்ள முந்நூறு ஊர்களையும் தன்னைப்பாடிவரும் பரிசிலர்க்குக் கொடுத்து, இறுதியில் எஞ்சிய பறம்புமலையைத் தன் னிருப்பிடமாகக் கொண்டிருந்தனன். இதனை:—

"முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டு "

என்னும் கபிலர் பாட்டாலறியலாம்.

இவன் முந்நூறு ஊர்களையும் பரிசிலர்க்கு ஈந்து உவக்கும் இன்பத்தினை யறிந்த பிறகே முல்லைக்குத்தேர் கொடுத்தான் என்பதை மேலே காட்டிய "ஊருடன் இரவலர்க்கருளி என்னும் புறப்பாட்டாலறியலாம்.

பிற்பட்ட கர்ணபரம்பரை வரலாறுகளால் ஔவையாரும் பாரியின் புகழைப்பரிந்து பாடிப் பரிசில் பெற்றனர் என்று அறியப்படுகிறது. முற்பட்ட சங்கநூல்களில் அத்தகைய வரலாறு இருப்பதாகத் தெரியவில்லை. ஔவையார் பாரியிடத்துப் பரிசில்பெறக் கருதிச்சென்ற காலையில், பாரி ஔவையாரது அரும்பெறற் புலமையால் ஆட்கொள்ளப்பட்டவனாய் அவரைப் பிரிய மனமில்லாமல் வெகு நாட்கள்வரையும் பரிசில் நல்காதிருந்தனன். ஔவையார் தாம் இன்னும் பலவிடங்கட்கும் செல்ல வேண்டும் என்று எண்ணிப் பலகாலும் பாரியைப் பரிசில் நல்குமாறு வலியுறுத்திக் கேட்டனர். பாரிதான் பரிசில் நல்காதிருந்தால் புலவர் பெருமாட்டியின் மனம்நோகும்; நல்கினால் அவர் அவனைவிட்டுப் பிரிந்தேகுவார். இதற்கு யாது செய்வான் வள்ளல்? அவர் புலமையைத் தான் நுகருமாறு தன்னை அவர் பிரியாதிருக்கவும், அவர்மனம் நோகாதவாறு பரிசில் நல்கவும் தகுந்த சூழ்ச்சியொன்றினை மனத்தினாராய்ந்து, ஔவையாருக்குப் பலவாய பரிசில் ஈந்து விடுத்தனன். பரிசில்பெற்ற ஔவையாரும்,

பாரியை நீங்கி, வேற்றுத்தேயம் சென்றனர். பாரி முன்னர்த் தான் சூழ்ந்தவாறே ஔவையார் செல்லும் வழியில் அவர் தன் ஊரிலிருந்து நீடித்ததூரம் செல்லுமுன்பே தன் ஏவலர் சிலரை யனுப்பி, ஔவையாரிடத்திலிருந்த பொருள் முழுவதையும் பறித்து வருமாறு செய்தனன். ஔவையார், பொருள்கள் பறிக்கப்பட்ட பிறகு, அருகிலுள்ள பாரியின் ஊருக்கே திரும்பவும் வந்து, அவனால் கொடுக்கப்பட்ட பொருள்முழுதும் பறிபோயிற்று என்று தெரிவித்தனர். உட்பனித்து, மேல்வெயிலால் வெதும்பும் நீர்போலப் பாரி, ஔவையார் பொருள் பறிக்கப்பட்டதற்கு மிகவும் வருந்துபவன்போல வெளிக்கு நடித்தான். பின்னர், அது ஔவையார் தன்னைப்பிரிந்துசெல்ல மனமில்லாமையால் தான் செய்த சூழ்ச்சியென்று தெரிவிக்கவே, ஔவையார் அவனுக்குப் புலவர்களிடத்திலுள்ள அளவுகடந்த ஆதரத்திற்கு மனம் கசிந்து, அவன்பால் நீடித்த நாட்கள் தங்கியிருந்து, அவனது, நாளோலக்கத்தை நலம்பெறச் செய்தனர். இதனை:—

"பாரிபறித்த பறியும் பழையனூர்க்
காரியன்றீந்த களக்கோலும்—சேரமான்
வாராயே என்றழைத்த வார்த்தையும் இம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்"

என்று தமிழ்நாவலர் சரிதையில் ஔவையார் பாடியதாகவுள்ள வெண்பாவாலறியலாம்.

பாரியினது வரையா ஈகையால் உண்டாகிய புகழுக்குமுன் தமிழ் நாட்டையாண்ட முடியுடை மூவேந்தர்புகழும், மற்றைச் சிற்றரசர் புகழும் இரவிமுன் மின்மினிபோல ஒளிமழுங்கலாயிற்று. அதுகண்ட அவ்வேந்தர்கள் பாரி

யிடத்துப் பொறாமைகொண்டு, அவனை வெல்லக்கருதி இருந்தனர். தாங்கள் கருதியவாறே அம் முடியுடை மூவேந்தரும் தங்களது படையினை ஒன்றுதிரட்டிப் பாரி பறம்பின்மேற் படையெடுத்துச்சென்று, அப்பறம்பினை முற்றுகை செய்தனர். இவர்கள் பறம்புமலையை முற்றி யிருந்த காலத்துத் தனது பறம்புநாட்டு முந்நூறு ஊர் களையும் பரிசிலர்க்கு நல்கி எஞ்சிய புறம்புமலை என்னும் சிற்றிடப்பரப்பைக் கொண்டிருந்தனன். மற்றவர்களோ இத்தமிழ்நாடு முழுமையும் தம் குடைக்கீழ்வர ஆண்ட சேர பாண்டிய சோழ அரசர்களாவார். இவர்களுடைய இடம் படை இவற்றையும், பாரியினது இடம்படை இவற் றையும் ஒத்திட்டுப் பார்க்குமிடத்து மலையும் அணுவும் தம்முள் ஒப்பு நோக்கப்படுவது போலாம். இத்தகைய பெரும் படைக்குப் பாரியின் படையும் ஊரும் உடனே வயப்பட்டிருக்கவேண்டும்; ஆனால் அங்ஙனமன்றி:—

"சிறுபடையான் செல்லிடம் சேறின் உறுபடையான்
ஊக்க மழிந்து படும்"

என்றாங்குப் பாரி சிறுபடை சிறிதும் தளர்ச்சியின்றி மூவேந்தர் படையையும் தாக்கிப் போர்செய்ய வல்லதா யிற்று. தாங்கள் நீடித்த நாள் முற்றுகை செய்திருந்தால் "பாரியும் பறம்புமலையும் உணவின்றி வாடித் தம்வயமா வர்" என்பது மூவேந்தருடைய உள்ளக்கிடக்கையாகும். அங்ஙனமே அவர்கள் நீடித்தநாள் முற்றுகையிட்டிருந்தும் பறம்புமலையின் உள்ளிடம், உழவர்கள் பாடுபடவேண்டா மலே, தானே தனதுவளத்தைத் தன்னிடத்து வாழ்வா ருக்கு முற்பட்டுவிரைந்து கொடுக்கக்கூடிய தன்மையை யுடையதாயிருந்தது. அதனால் படைவீரர்களும் ஊரில் வாழ்வாரும் தமக்குவேண்டிய உணவுப்பொருளைப்பெறுவ

தற்கு, யாதொருகவற்சியும் அடையாததினல் உள்நாட்டில் அமைதியும், பகைவர் முற்றுகையில் அலட்சியமும், போருடற்றுவதில் ஊக்கமும் அங்கே காணப்பட்டன. அப்பாரியின் மலையில் மூங்கிலினது நெல்லும் இனியசுளையையுடைய பலாவினது பழமும், வள்ளிக்கிழங்கும் தேனும் ஆகிய இந்நான்கும் ஒருவரால் விளைவிக்கப்படாமல் தாமேவிளைந்து பயன்தரத்தக்கனவாயிருந்தன. அன்றியும் புலவர்பெருமாளுகிய கபிலர், முற்றுகையிடப்பட்ட மதிலினுள்ளே யிருந்துகொண்டு, தாம் வெகுநாட்களாகப் பழக்கிவைத்திருந்த கிளிகளை வெளியில் அனுப்பி, அவ்விடத்து நன்செய் நிலங்களிலிருந்து நெற்கதிர்களை மூக்கினுற் கொணருமாறு செய்து, அதனுல் யாவருக்கும் உணவுகொடுத்தனர். ஆகவே மூவேந்தரும் பலநாள் முற்றியிருந்தும் பாரி பறம்புகொள்ளற்கு அரிதாயிற்று. அவர்கள் தம்முயற்சி வீணே கழியத் தத்தம்மூர்க்குச் சென்றனர். இதனை:—

“அளிதோ தானே பாரியது பறம்பே
நளிகோண் முரசின் மூவிரு முற்றினும்
உழவ ருழாதன நான்குபய னுடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே
மூன்றே, கொழுங்கொடி வள்ளிக் கிழங்குவீழ்க்கும்மே
நான்கே, அணிநிற வோரி பாய்தலின் மீதழிந்து
திணிநெடுங் குன்றந் தேன்சொரி யும்மே
வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தோறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தோறும் பரப்பிய தேரினிராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் ருரலன்

யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தல்நும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்றும் ஒருங்கீ யும்மே''

என்றும்,

"கடந்தடு தானை மூவிருங் கூடி
யுடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே."

என்றும்,

"அளிதோ தானே பேரிருங் குன்றே
வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே
நீலத் திணைமலர் புரையும் முண்கண்
கிணைமகட் கெளிதாற் பாடினள் வரினே."

என்றும்பாடிய கபிலரது பாடல்களால் நன்குபுலனும்.

மேலேகாட்டப்பெற்ற பாடல்கள், "மகண்மறுத்தல்" என்னும் புறப்பொருள் துறையின்கீழ்க் காணப்படுவதால் அத்துறை, "விம்முரணுன்மகள்வேண்ட - இம்மதிலோர் மறுத்துரைத்தன்று" என்று விளக்கப்பட்டிருத்தலால், தமிழ்நாட்டு மூவேந்தரும் தனித்தனியோ ஒன்றுகூடியோ பாரியின் மகளை மணம்செய்துகொள்ள விரும்பினர் என்றும் பாரி யாதுகாரணத்தாலோ தன்மகளை அவர்களுக்குக் கொடுக்க உடன்படவில்லையென்றும் அதுபற்றியே அவ்வரசர் பாரியுடன் பகைக்க நேர்ந்து, மதிலைமுற்றுகையிட்

டனர் என்றும், அவர்களால் போரில் அது கைக்கொள்ளப் படமாட்டாது எனக் கபிலர் கூறினர் என்றும் புலனுகின்றது.

பாரியுடன் அவ்வரசர்கள் பகைகொள்வதற்கு அவனது புகழோ அன்றி மகண்மறுத்தலோ அன்றி அவ்விரண்டுமோ காரணமாக இருந்தன என்று கூறலாமாயினும், போர்ப்புறத்து அவனை வெல்லுதல் அவர்களுக்கு முடிவில் அரிதாயிற்று. ஆகவே அவர்கள் ஏதோ ஓர் வஞ்சனையான சூழ்ச்சிசெய்து, அவ் அரும்பெருங்வள்ளலின் ஆருயிரைக் கவர்ந்தனர் என்று புறநானூற்றுச்செய்யுட்களால் அறியக் கிடக்கின்றது.

இவன் எவ்வாறு பெருங்கொடைவள்ளலாக விளங்கினனே அவ்வாறே குடிகளைக்காத்தோம்புவதில் கோல்கோடாமல் காத்துவந்தனன் என்றும் பொய்யாநாவிற்கபிலர் கூறியுள்ளார். அவன் அங்ஙனம் செங்கோலனுயிருந்தமையின், அவன் நாடு, உலகத்திலேயே பெரும்பஞ்சம் உண்டாகக்கூடிய குறிகள் தோன்றிய காலத்தும், மழைவளங்குன்றுமல் மிக்க செழிப்புள்ளதாகவே இருந்தது என்பது தெரிகின்றது. இவற்றை:—

"மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்கண்
ஆமா நெடுநிரை நன்புல் லாரக்
கோஒல் செம்மையிற் சான்ருேர் பல்கிப்
பெயல்பிழைப் பறியாப் புன்புலத் ததுவே
பிள்ளை வெருகின் முள்ளேயிறு புரையப்

பாசிலை முல்லை முகைக்கும்
ஆய்தொடி யரிவையர் தந்தை நாடே."

என்பதனால் அறிந்து கொள்ளலாம்.

இங்ஙனம் கொடைத்திறனாலும், செங்கோலாலும் தன் புகழைப் பரப்பிய அரசன் வஞ்சனையாற் கொல்லப்பட்டமைக்குக் கபிலர் பெரிதும் வருந்திக் கையற்று, அவனுடன் தாமும் இறக்கக் கருதினர். அப்பொழுது பாரி விலக்கினமையாலும், அவனுடைய மகளிர் கதியற்று நிற்பதாலும் அதைத் தவிர்ந்து, அப் பாரியின் மகளிரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு, அம்மலையைவிட்டு நீங்கினர். அங்ஙனம்விட்டு நீங்கும் கபிலர் அப் பறம்பை நோக்கி, "மதுவிருந்த சாடியை வாய் திறப்பவும் ஆட்டுக்கிடாயை வீழ்ப்பவும் அடப்பட்டு அமைந்தொழியாத கொழுவிய துவையையும் ஊனையுமுடைய சோற்றையும் விரும்பிய பரிசே தரும் மிக்க செல்வமுதிர்ந்து எம்மோடு நட்புச்செய்தாய் முன்பு: இப்பொழுது பாரி இறந்தானாகக் கலங்கிச் செயலற்று, நீர்வார் கண்ணையுடையேமாய்த் தொழுது நின்னை வாழ்த்திச் செல்லுதும்; பெரிய பெயரையுடைய பறம்பே!" என இரங்கிக் கூறியுள்ளார்.

அவர் கூறியதுபோலவே அப் பாரி மகளிரும் அம்மலையை விட்டு நீங்கும் காலத்து,

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையு முடையேம் எங்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர்எம்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே."

என்று தங்களுடைய பரிதாபமான நிலையைக்கண்டு, யாவரும் இரங்கும் வண்ணம் கூறியுள்ளார்கள்.

பாரி யிறந்தபின் அவனது மகளிர்கள் பற்றுக்கோடற்று நின்றமையான் கபிலர், அவர்களுக்குப் பற்றுக்கோடாக நின்று, அம்மகளிரை மணம் புணர்க்கக் கருதினர். பாரியின் மகளிர் மிக்க வறிய நிலையிலிருப்பதாலும், வேந்தரோடு பாரிக்குண்டாகிய பகைமையாலும் தமிழ் நாட்டரசர் ஒருவரும் அம்மகளிரைமணஞ்செய்துகொள்ள மனங்கொள்ளவில்லை. கபிலர், அப் பாரி மகளிரைத் தம் முடனழைத்துக் கொண்டு,விச்சிக்கோன் என்னும் சிற்றரசனிடத்துச் சென்று "குளிர்ந்த மலையின்கண் ஓங்கிய பசிய இலையையுடைய பலாவினது பழத்தைக் கவர்ந்துண்ட கரிய விரலையுடைய கடுவன் சிவந்த முகத்தையுடைய தனது மந்தியுடனே சேர்ந்து சேய்மைக் கண்ணே விளங்கி, முகிலாலும் உச்சியறியப்படாத உயர்ந்த மலைப் பக்கத்து மூங்கிலுச்சியின்கண் துயிலும் மலையகத்துத் தாழ்ந்த வரையை யுடையோய்! நிணத்தைத் தின்று களித்த நெருப்புப்போலும் தலையையுடைய நெடியவேலினையும், களத்தைத் தனதாக்கிக்கொண்டு காயும் தறுகண்மையையுடைய யானையினையும், விளங்கிய மணிகளாற் செய்யப்பட்ட வளைந்த ஆபரணத்தினையும் உடைய விச்சிக் கோவே! இவர்கள்தாம், பூவைத் தனது தலையின்கண் மாறுதலங்கரித்தாற்போலும் கொடிமுல்லை தான், நாத் தழும் பேறப் பாடாதாயினும் 'ஒலிக்கும் மணியையுடைய நெடியதேரைக்கொள்க' என்று சொல்லிக்கொடுத்த பரந்து மேம்பட்ட தலைமையினையுடைய பாரிக்கு மகளிர். யான் பரிசிலன்; அதுவன்றியும் நிலைபெற்ற அந்தணன்: நீ பகைவரைப் போர்செய்யு முறைமையாற் பொருது தாழ்விக்

கும் வாளான் மேம்படுபவன். ஆதலால், நினக்கு யான் தரக் கொள்வாயாக. சினத்தையுடைய போராலே பகை வேந்தரை மிகையடக்கும் மடக்கப்படாத மிக்க விளைதலை யுடைய நாட்டையுடையோய்'' என்று கூறிப் பாரி மக ளிரை மணந்துகொள்ளுமாறு வேண்டினர். அவன் அதற்கு உடன்படவில்லை. பின்னர் அவர் இருங்கோவேள் என்னும் மற்றொரு சிற்றரசனிடஞ்சென்று,

"இவர்யா ரென்குவை யாயி னிவரே
ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமான்
நெடுமாப் பாரி மகளிர் யானே
தந்தை தோழ னிவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே
நீயே, வடபான் முனிவன் தடவினுள் தோன்றிச்
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை
யுவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே விறற்போ ரண்ணல்
தாரணி யானைச் சேட்டிருங் கோவே
ஆண்கட னுடைமையிற் பாண்கட னாற்றிய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்
யான்றர விவரைக் கொண்மதி வான்கவித்(து)
இருங்கட லுடுத்தவிவ் வையகத் தருந்திறல்
பொன்படு மால்வரைக் கிழவ வென்வேல்
உடலுநர் உட்குந் தானைக்
கெடலருங் குரைய நாடுகிழ வோயே''

என்று, பாரியினது பெருந்தன்மையும் கொடைத்திறனும்

புலப்படுமாறும், இருங்கோவேளது சிறப்புத்தோன்று மாறும், தாம் பாரிமகளிரை அவனுக்குக் கொடுத்தற் குரியாரென்பது விளங்குமாறும் இனிய செய்யுளால் தம் கருத்தைப் புலப்படுத்தினர்.

அவ்விருங்கோவேள், பாரிக்கும், மூவேந்தருக்கும் உள்ள பகைமை கருதிப் பாரி மகளிரைத் தான் ஏற்றுக் கொள்ள உடன்படவில்லை. ஆயினும் கபிலருடையவேண்டு கோளுக்கு அவன் இணங்காததால் அப்புலவர் பெருமா னுக்கும், 'தன் உயிர் நண்பினனான பாரியின் மகளிரை இவன் ஏற்றுக்கொள்ளாதிருப்பதோ' என்று சிறிது மனத்தாங் கல் உண்டாயிற்று; அவ்வேளையில் அவர், அவ்விருங்கோ வேளை நோக்கி "வெட்சியையுடைய காட்டின் நடுவண் வேட்டுவரலைப்பத் தனக்குப் புகலிடம் காணாத கடமாவி னது நல்ல ஏறு வரைச்சாரல் மணி மேலே கிளம்பவும் சிதறியபொன் விளங்கவும் விரைய ஓடும் நெடியமலைப் பக்கத்து வெற்றிநிலைபெற்ற சிறந்த புகழ் பொருந்திச் சிற்றரையம் பேரரையம் என இருகூற்றாற் பெயர்பெற்ற உட்குப் பொருந்திய பழைய ஊரின்கண் பலகோடியாக அடுக்கப்பட்ட பொன்னை நுங்களுக்கு உதவிய நீடிய நிலையையுடைய அரையத்தினது கேட்டையும் இனிக் கேட்பாயாக; அது கெடுதற்குக் காரணம்—நினது தா ளால் தரப்பட்ட பொருளையன்றி நுந்தையுடைய உரிமை யை நிறையப்பெற்ற தழைத்த கண்ணியையுடைய புலி கடிமாலே, நும்மையொக்கும் அறிவினையுடைய நுங்குடியு ளொருவன் புகழ்ந்த செய்யுளையுடைய கழாஅத்தலையா ரென்னும் புலவரை அவமதித்ததனா லுண்டாய பயன்; இயற்றப்பட்ட தேரையுடைய தலைவ! இவர் எவ்வியுடைய பழைய குடியிலே படுவார்களாக; பின்னை இவர் கைவண்

மையையுடைய பாரிமகளிரென்று சொல்லிய எனது தெளியாத புன்சொல்லைப் பொறுப்பாயாக; பெருமானே! யான் நின்னை விடைகொண்டேன்; நின்வேல் வெல்வதாக; அரைமலையில் முகையற மலர்ந்த கரிய காலையுடைய வேங்கையினது கரிய புறவிதழையுடைய ஒள்ளிய பூப்பரந்த பொற்றைக்கல் பெரும்புலியினது வரியையுடைய புறத்தை யொக்கும் பெரிய மலையிடத்து ஊர்களையுடைய நாட்டையுடையோய்" என்று அவன் பெரியோரது நன்மொழியை அலட்சியம் செய்வதனால் கேட்டையடைவான் என்பதைக் கழாஅத்தலையார் என்னும் புலவர் பெருமானை இகழ்ந்து கேட்டையடைந்த அவன் குடியில் முன்னோனொருவனுடைய பழங்கதையை யுதாரணமாக எடுத்துக்காட்டி, அவனை வெறுத்துச்சென்றனர்.

பின்னர், அப்புலவர் பெருமான் பாரி மகளிரை வேந்தர் எவரும் வேட்க மறுத்தமையால் அவர்களைப் பார்ப்பார் சிலரிடத்தில் அடைக்கலமாக ஒப்பித்துவிட்டுத் தமது ஆருயிர் நண்பினனாகிய பாரி இறந்தமைக்கு ஆற்றுராய்த் தம்முடைய அரிய உயிரைத் துறக்கக்கருதி வடக்கிருப்பாராயினர். அக்காலை அவர் "முசுக்கலை கிழித்து உண்டலாற்பீறிய முழவுபோலும் பெரிய பலாப்பழம் வில்லையுடைய குறவர்க்கு அதன் பெருமையாற் சில நாளைக்கு இட்டுவைத்துண்ணும் உணவாம் மலையையுடைய நாட்டை யுடையோய்! பெரிய வண்மையை யுடைய பாரி, நீயும் யானும் கலந்த நட்பிற்குப் பொருந்த ஒழுகாயாய் நீ என்னை வெறுத்தாயாகக் கடவை. நீ எனக்கு உதவிசெய்த யாண்டுகளும்; பெருமை தக்க தலைமையினையுடைய நட்பிற்குப் பொருந்தாமல் யானும் நின்னோடு கூடப் போதுதற்கு இயையாது நீ ஈண்டுத்தவிர்க எனச்

சொல்லி, இப்படி வேறுபட்ட தன்மையை யுடையை யாதலின், நினக்கு யான் பொருந்தினேனல்லாமையான் இங்ஙனம் பொருந்திற்றிலேனாயினும் இப்பிறப்பின்கண் நீயும் யானும் கூடி, இன்புற்றிருந்தவாறுபோலக் காட்டி, மறு பிறப்பினும் இடைவிடாத காட்சியினையுடைய நின்னோடு கூடி வாழ்தலை உயர்ந்த விதிகூட்டுவதாக." என்று பாரியைக்கருதி இரங்கித் தம்முயிரை நீத்தனர்.

இங்ஙனம் பாரியினது பெருங்கொடையும் குணங்களும், கபிலர்போன்ற புலவர் பெருமக்களுடைய மனங்களையும் கவரும்வண்ணம் இனிமை வாய்ந்தது எனப் புலனாகின்றது.

"மிடுக்கி லாதனை வீம னேவிறல்
விசயனே வில்லுக் கிவனென்று
கொடுக்கி லாதனைப் பாரி யேயென்று
கூறி னும்கொடுப் பாரிலை
பொடிக்கொள் மேனியன் புண்ணி யன்புக
லூரைப் பாடுமின் புலவீர்காள்
அடுக்கு மேலம ருலக மாள்வதற்
கியாது மையுற வில்லையே"

(சுந்தரமூர்த்தி நாயனார்.)

# குமணன்.

குமணன் என்னும் இவ்வரசன் தமிழ் நாட்டை யாண்ட முடியுடையரசர் மூவராகிய சேர பாண்டிய சோழ அரசர்களின் வேருகிய சிற்றரசரின் வகையைச் சார்ந்தவனுவன். இவனது நாடு முதிரமென்று பெயர் வாய்ந்த வளம் மிகுந்த மலையை யடுத்துள்ள நாடாகும். இக் குமணன் என்னும் அரசன் பெருங் கொடையாளனுயிருந்து, தன்புகழைத் தமிழகமெங்கும் பரவச்செய்தனன். இத் தமிழகத்தில் தமது கொடையா லுண்டாகிய புகழுடம்பால் நிலைபெற்றவர்களான 'பாரி, ஓரி மலையன், எழினி, பேகன், ஆய், நள்ளி' என்னும் எழுவர் காலத்துக்குப் பிறகு தமிழகத்தில் இக்கொடையாளன் பரந்தபுகழை ஈட்டியவன். இவன் அவ்வெழுவரும் விளங்கிய காலத்துத் திகழ்ந்திருப் பானுயின் இவன் கொடைமுன்னர் அவர்கள் கொடை, இரவிமுன்னர் மின்மினியெனவாகும். அவ்வெழுவரும் தம்மை மிகுத்து வைத்துக்கொண்டு மற்றுள்ள தமதுடைமைகளை இரவலர்க்கீத்தனர். இவ்வேந்தனே, இரப்பவர்க்குத் தன்னையே கொடுத்து நின்றனன். ஆதலின், இவன் 'அவர்களினும் ஒருபடி மேம்பட்டவன்' என்றே கூறவேண்டும். இவன் அவ்வெழுவருக்கும் பின்னர்ச் சிறந்தவன் என்பதை,

"முரசு கடிப்பு அறையவும், வெள்ளிய சங்கு முழங்கவும், வேந்தருடனே பொருத தலைமையையுடைய நெடிய மலைக்கண் ஒலிக்கும் வெளிய அருவி கல்லை யுருட்டியோடும் பறம்பிற்கு வேந்தனகிய பாரியும், உயர்ந்த உச்சியையுடைய கொல்லிமலையையாண்ட வலிய வில்லையுடைய ஓரியும், காரியென்னும் பெயரையுடைய குதிரையைச் செலுத்

திப் பெரிய பூசலை வென்ற மாரிபோலும் வண்மையையும் மிக்க போரினையுமுடைய மலையனும், செலுத்தப்படாது உயர்ந்த குதிரையென்னும் மலையையும், கூரிய வேலையும், கூவிளங் கண்ணியையும், வளைந்த ஆரத்தையு முடைய எழினி அதியமானும், மிகக்குளிர்ந்த மலையின்கண் இருள் செறிந்த பெரிய முழைபினையும் மலைத்தற்கரிய வலியினையு முடைய தெய்வங்காக்கும் உயர்ந்த சிகரங்களையுடைய பெரிய மலைநாடனாகிய பேகனும், திருந்திய சொல்லையு டைய மோசியென்னும் புலவன் பாடப்பட்ட ஆயும், ஆசைப்பட்டுத் தன்னை நினைந்து வருவாருடைய வறுமை மிகவும் நீங்கத் தவிராது கொடுக்கும் கூறுபாடமைந்த வண்மையினையுடைய பகைவரைத் துரத்திய நள்ளியும் எனச்சொல்லப்பட்ட எழுவரும் இறந்தபின்பு கண்டார்க்கு இரக்கம் வரப் பாடிவருவாரும் பிறரும் கூடி இரங்தோரது துன்பத்தைத் தீர்க்கக்கடவேன் யான் என்று நீ இருத்த லால் விரைந்து இவ்விடத்தே பரிசில் பெற நினைந்து வந் தேன் யான்..... ...................... ......தளராத புது வருவாயையுடைய முதிரமென்னு மலைக்குத்தலைவ! உலக முழுவதினும் விளங்குகின்ற தலைமையினையும இயற்றப் பட்ட தேரினையுமுடைய குமணனே! புகழ் மேம்பட்ட வண்மையுடனே பகையிடத்து உயர்க நீ எடுக்கப்பட்ட வேல்" என்று பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் கூறி யிருப்பதால் விளக்கமுறும்.

இப்பெருஞ்சித்திரனார் ஒருகாலத்தில் தமது வறுமை யைத் தீர்த்துக்கொள்ளக் கருதி வெளிமான் என்று பெயர் வாய்ந்த சிற்றரசனிடத்துச் சென்று, பரிசில் கேட்க, அவன் அக்காலை இறக்குந் தறுவாயிலிருந்தனன். ஆயினும் அவன் தன்னை நோக்கி வந்த புலவரை வாளாசெல்ல விடு

வதற்கு வருந்தித் தன் தம்பி இளவெளிமானை நோக்கி, இப்புலவரது வறுமை தீரப் பரிசிலீந்து விடுக்க என்று கூறி இறந்தனன். பின்னர் இளவெளிமான் தன் முன்னோனுக்குச் செய்யவேண்டிய கடன்களையெல்லாம் தீர்த்துவிட்டு, அரசியலைக் கைக்கொண்டு, அப்புலவருக்குப் பரிசில் கொடுக்கக்கருதி அவரைச் சாமானியர் என்று நினைத்து, ஏதோ சிறிது கொடுக்க, அவர் அதனைப்பெறாது அவனை விட்டு நீங்கி, முதிரத்திலுள்ள குமணனையடைந்து "வென்றி மிக்க தலைவனே, பெருமானே, வறுமையால் துன்பமுழலும் எனது மனைவி நினது முயற்சியாலுண்டாகிய செல்வத்தைக் காணுந்தோறும் வியப்பப் பனையை யொக்கும் பெருங்கையுடனே முத்துப்படும்படி முதிர்ந்த உயர்ந்த கொம்பேந்திய மலையையொக்கும் வலியகளிற்றை ஒளி விளங்கும் பட்டம்பொலியப் பக்கத்தே யொலிக்கும் மணி ஒன்றற்கொன்று மாறி ஒலிப்ப ஏறித் தலைமைதோன்ற இருந்துபோதலை விரும்பினேன்; எனது வறுமை பின்னே நின்று துரத்த நின்புகழ் கொடுவர வந்து நினது கைவண்மையிலே சிலவற்றைத் தொடுத்த என்னைக் காதலித்துக் கேட்பாயாக; சிலவற்றைச்சொல்ல அறிவேனாயினும் அறியேனாயினும் விரைய என் கல்வியளவை ஆராய்ந்தறிந்தனையாய் ஆராயாது சிறந்த நின்னளவை அளந்தறிவாயாக; எனது மிகுதியைக்கண்டு அரசர் நாணும்படி பெயர்வேன்" என்னும் கருத்துத் தோன்றப் பாடி அவனிடத்தில் யானையைப் பரிசிலாகக் கேட்க அவன் அவர் விரும்பியவாறே சிலயானைகளும் அவற்றை வைத்துக் காப்பதற்கு வேண்டிய நிலமும் பொருளும் ஈந்து உபசரித்து அனுப்பப் புலவர் அவ் யானைகளுடன் திரும்பவும் இளவெளிமானிடம் சென்று, அவன் ஊரிலுள்ள காவல் மரத்தில் தம்முடைய யானைகளைக் கட்டி வைத்து, அவனை நோக்கி:—

"இரவலர் புரவலை நீயு மல்லை
புரவல ரிரவலர்க் கில்லையு மல்லர்
இரவல ருண்மையுங் காணினி யிரவலர்க்கு
ஈவோ ருண்மையுங் காணினி நின்னூர்க்
கடிமரம் வருந்தத் தந்தியாம் பிணித்த
நெடுநல் யானையெம் பரிசில்
கடுமான் றோன்றல் செல்வல் யானே"

என்று மிகவும் பெருமிதத்துடன் அவனை நோக்கிக்கூறித் தம்முடைய பரிசிலுடன் தம்மூர் சென்று தமது மனைவியைநோக்கி, "நின்னைக் காதலித்துறையும் நின்சார்வாய மகளிர்க்கும் நீ அன்புசெய்தொழுகப்பட்ட மகளிர்க்கும் பலகுணங்களும் மாட்சிமைப்பட்ட கற்பினையுடைய நினது சுற்றத்து மூத்தமகளிர்க்கும் நமது சுற்றத்தினது மிக்கபசி நீங்க நினக்கு நெடுநாட்படக் குறித்த எதிர்ப்பை தந்தோர்க்கும் மற்றும் இன்னதன்மையாரென்று கருதாது, என்னொடுகூடி உசாவுவதுஞ் செய்யாது, சதுரப்படக்குடி வாழ்க்கை வாழக்கடவே மென்று கருதாது, நீயும் யாவர்க்கும் வழங்குவாயாக, எனது மனைக்குரியோயே, பலாப்பழம் முதலாயின தூங்கும் முதிரமென்னும் மலைக்குத்தலைவனாகிய திருந்திய வேலையுடைய குமணன் நல்கிய செல்வத்தை" என்று யாவருக்கும் தாம் வழங்கும்படியான தமது நிலைமைதோன்றும்படி கூறித் தம்மனைவியோடுமின்புற்று வாழ்ந்தனர்.

இங்ஙனம் குமணன் யாவர்க்கும் வரையாது கொடுத்துவந்ததால், அவனது புகழ், நாடெங்கும் பரவிற்று. அப்புகழால் யாவரும் அவனை வந்தடைந்து, தமதுவறுமையை மாற்றிக் குமணனை மேம்படுத்திக்கூறிப் புகழ்வாராயினர். இக்குமணனுக்குத் தம்பியாகிய இளங்குமணன் என்பவன்,

தன் மூத்தோனுக்கு உண்டாகிய புகழில் வெறுப்புக்கொண்டதோடமையாது, அவனைப் பகைக்கவும் தொடங்கினன். அதனால் அவன், சிறுபடையொன்று சேர்த்துக்கொண்டு, தன் தமையனோடு போர்தொடுத்தனன். போரில் தம்பிக்கு ஆற்றாது தோற்று நாட்டை விட்டுவிட்டுக் குமணன் காட்டையடைந்தனன். இளங்குமணன் தன் அண்ணன் இழந்து சென்ற நாட்டையடைந்து, அரசியற்றத் தொடங்கினன். அவன் அரசியற்றுங் காலையில் இழந்த தன் நாட்டைப் பெறுவதற்குக் குமணன் உயிருடனிருந்தால் எவ்விதத்திலும் முயற்சிசெய்து தன்னை வெருட்டுவான்; ஆதலின் அவனுயிரைத் தான் எவ்விதத்திலும் கவர்ந்துவிடவேண்டும் என்று கருதி, அதற்கேற்ப, அவனது தலையை யாவனொருவன் வெட்டிக்கொண்டுவந்து தனக்குக் காட்டுகின்றனனோ, அவனுக்கு மிக்க பொருள் கொடுப்பதாகத் தன் நாட்டில் பறையறையுமாறும் செய்தனன். அவ்வாணையைக்கேட்ட சான்றோர்கள் இளங்குமணனது கயமையை வெறுத்தனராயினும் அவன் நாட்டை விட்டகலாது "தான்நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்—கோல்நோக்கி வாழுங்குடி" யாக அவ்விடத்திலேயே தங்கியிருந்தனர். இளங்குமணனையொத்த கீழ்மக்களோ, அவன் செயலில் உவகைகொண்டவர்களாய்க் குமணனைத்தேடிப்பிடித்து, அவனது தலையைக் கொண்டுவரவும் முற்படுவாராயினர்.

குமணனுக்கு இச்செயல் தெரியவர அவன் இத்தீயவர்களிடமிருந்து தன்னைக்காப்பதற்காக வெயில் நுழைய இடமில்லாமல் உலகத்திலுள்ள இருளெல்லாம் ஒன்று திரண்டு குடிகொண்டுள்ள மரமடர்ந்த காட்டில் மறைந்து

வதிவானுயினன். அவனைக் கண்டு பிடிப்பது அத்தியவர்களுக்கு அரிதாயிற்று.

அக்காலத்து, பெருந்தலைச்சாத்தனுர் என்னும் புலவர் வறுமையால் மிகவாடிக் குமணனது கொடைத்திறத்தைக் கேள்விப்பட்டு அவனிடம் சென்ருல் பரிசில் பெற்று வரலாம் என்று கருதி, குமணன் இன்னும் அரசாட்சி செய்துகொண்டிருப்பதாகவே நினைத்து அவன் நாட்டை நோக்கிச் சென்றனர்.

செல்லுங்கால் குமணன் மறைந்து வசித்துக் கொண்டிருக்கும் காடு குறுக்கிட்டது. புலவர் தெய்வக் குறிப்பிஞல் அதற்குள் நுழைந்து செல்லுகையில் குமணனை எதிர்ப்பட்டு அவன் நாட்டையிழந்து நிற்பதை யறியாராய் அவனிடத்தில், " அடுதலை மிகவுமறந்த புடையோங்கிய அடுப்பின்கண் காளாம்பிபூப்ப உடம்பு மெலியும் பசியான் வருந்திப் பாலின்மையால் தோலாந்தன்மையுடனே திரங்கித் துளைதூர்ந்த பொல்லாத வறிய மார்பை வறிதே சுவைக்குந்தோறும் அழுகின்ற தனது பிள்ளையது முகத்தைப் பார்த்து நிரானிரம்பிய ஈரிய இமையையுடைய குளிர்ந்த கண்ணையுடைய என் மனைவியது வருத்தத்தைப் பார்த்து இவ்வருத்தந் தீர்த்தற்குரியாய் நீயென நினைந்து நின்பால் வந்தேன்; நல்ல போரையுடைய குமண! எனது வறுமை நிலையை நீ அறிந்தாயாயின் இவ்வாறு வறுமையுற்று நின்ற நிலைமைக்கண் வளைத்தாயினும் பரிசில் கொள்ளாது விடேன்; பலவாக அடுக்கப்பட்ட பண்ணுதலமைந்த நரம்பினையுடைய தோலாற் போர்க்கப்பட்ட நல்ல யாழையும் மார்ச்சனை நிறைந்த மத்தளத்தினையுமுடைய கூத்தரது, மிடியைக் கெடுக்கும் குடியின்கட் பிறந்தோயாதலால்' என்று கூறிப் பரிசில் தரும்வண்ணம் கேட்டனர்.

அப்பொழுது குமணன் புலவருடைய வறுமையைக் கேட்டு, புலவரிடத்தில் தான் தன் தம்பியால் நாடு கொள்ளப்பட்டுக் காட்டிலிருப்பதாகவும், இந்நிலைமையில் தான் அவரது வறுமையைப் போக்க இயலாத தன்மைக்கு வருந்துவதாகவும் கூறினான்.

அப்பொழுது புலவர்,

"ஆறுபெருக் கில்லா தருந்திடர்தான் பட்டாலும்
ஊற லமையாதோ வுலகாற்றத்—தேற
வறியைநீ யானுலு மேன்வறுமை மாற்றச்
சிறியையோ சீர்க்குமண செப்பு"

என்னும் பாடலைக் கூறி, அவன் இயலாத நிலையிலிருப்பினும் உயர்ந்தகுடிப் பிறந்தவர்கள் மனமிசைந்து இல்லையெனமாட்டார்கள் என்பதை எடுத்துக்காட்டி, எவ்விதத்திலும் தம்முடைய வறுமையைப் போக்கவேண்டும் என்று மன்றாடினார்.

புலவரைக்கண்டவுடனேயே—புலவரது வறுமையையறிந்தவுடனேயே—அதனைத் தீர்க்கவேண்டிய குமணன் தன் வறுமை நிலையால் புலவர் மன்றாடும் வரையும் அவரது இன்மையைத்தீர்க்க வகையறியானாய்த் திகைத்தனன். அவன் புலவரது வறுமையைத் தீர்க்கும்வகை யாதென்று தன்னுள் ஆராய்வானாயினன். 'மனமுண்டானால் இடமுண்டு' 'வேண்டுமென்றால் வேரிலும் காய்க்கும்' என்பவாகலின், குமணன் மனமாரப் புலவரது வறுமையைத் தீர்ப்பது எவ்விதம் என்று சிந்தித்தபடியால் அவனுக்கு அதற்குரியவழி புலப்படலாயிற்று. தன் தம்பி தனது தலையினைக்கொண்டு வருபவர்களுக்கு அளவற்ற பொருள் கொடுப்பதாக வாக்களித்திருப்பது அவ்வேளையில் அவ

னுக்கு நினைவிற்குவர அவன் மிக்க களிப்பெய்திப் புலவரை நோக்கிப் "புலவீர்!

"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கோள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை"

இத்தகைய இழிந்த மக்கள் யாக்கையை உயிர்நீங்கியபின் புலையனும் விரும்பான். என்னுடைய இளவல் என்னுடன் பகைதொடுத்து என்னைக் காட்டில் துரத்தினும் என்னிடத்தில் மிக்க மதிப்புள்ளவனாய், யாவரும் அருவருக்கத்தகுந்த இவ் வென்னுடைய உடலினுக்குச் செம்பொன் கோடி விலையெனச் செப்பியுள்ளான். ஆதலின், நீர், என் உடைவாளை எடுத்து என் தலையினை யரிந்து அதனைக் கொடுபோய் என் தம்பி கைக்கொடுத்து அதற்கு அவன் ஏற்படுத்திய விலையினைப் பெற்றுப்போய் நுமது வறுமைநோய் களைந்து, இன்புற்று வாழ்ந்திருப்பீராக" என்று கூறித் தன் தலையினைக் கொடுப்பதுபோல உடைவாளை யவர் கையிலீந்தான்.

புலவர் யாது செய்வார் பாவம்! அவ்வுடைவாளால் குமணன் தலையை யரிந்து, தமது செல்லல் நோயைத் தீர்க்கக் கருதினரோ! அன்று; அன்று; அங்ஙனம் செய்வது புன்மக்க ளியல்பல்லவா! குமணன் கையிலிருந்த வாளை மாத்திரம் பெற்றுக்கொண்டனரே யொழிய அவன்

கூறிய வண்ணம் செய்ய உடன்படவில்லை. அவர் வாளினைப் பெற்றுக்கொள்ளாதொழியின் அக் குமணன் புலவரது வறுமையை நீக்க அவ்வாளால் தன் தலையினைத்தானே யரிந்து புலவரிடம் கொடுத்திருப்பான். அங்ஙனம் அவன் செய்யாதிருக்கவேண்டும் என்று கருதியே, அவர் வாளினைப் பெற்றுக்கொண்டனர். அவர் இளங்குமணனது அறியாமைக்குப் பெரிதும் இரங்கினர்; அவனுக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்த நாடினர். அவர் குமணனை அங்கிருக்க எனப்பணித்து, வாளினைத் தம்முடன்கொண்டு இளங் குமணனை நோக்கிச் சென்றனர்.

இளங்குமணனோ, தன் மூத்தோனை நாடுவிட்டுத் துரத்திய பிறகு அரசியலைக் கைக்கொண்டு, அவனால் தனக்கு யாதோரிடையூறும் நேரிடாது என்று கருதிக் கவலையற்றுத் தன் மனம் போனபடி நடந்து வந்தனன். பெருந்தலைச்சாத்தனர் குமணன் கொடுத்தவாளைக் கையிற் கொண்டு இளங் குமணனது அரசிருக்கையை யடைந்து குமணன் கொடுத்த வாளை அவனுக்குக் காட்டி,

"மன்னு வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பி னுயர்ந்த செல்வர்
இன்மையி னிரப்போர்க் கீஇ யாமையிற்
றொன்மை மாக்களிற் றொடர்பறி யலரே
தாடாழ் படுமணி யிரட்டும் பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க் கருகாக்
கேடில் நல்லிசை வயமான் றோன்றலைப்
பாடி நின்றனெ னாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினு நனியின் னாதென

வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன் றின்மையின்
நாடுமெலி யுவகையொடு வருவல்
ஓடாப் புட்கைநின் கிழமையோற் கண்டே"

என்று கூறித் திரும்பவும் அவனை நோக்கி, அரசனே! நீ, குமணனைக் காட்டில் துரத்தியதுமல்லாமல் அவன் தலையினைக்கொண்டு வருபவர்க்கு மிக்க பொருளளிப்பதாகவும் கூறியுள்ளாய், அவனைக் கண்டுபிடிப்பது ஒருவருக்கும் முடியாது. நான் என் வறுமை காரணமாக அவனைப் பாடிச்சென்றேன். நீ அவனுக்கு இழைத்த கொடுமைகள் யாவற்றையும்கூறி, அவன் தன்னிடத்தில் எனக்குக் கொடுப்பதற்கு யாதொன்றையுங் காணாமையால் தன்னையே எனக்குக் கொடுப்பதாகக் கருதித் தன் கைவாளை எனக்குக் கொடுத்தான். இப்பொழுது உன் மூத்தோனுடைய தலை என் கையிலிருக்கின்றது. நீ உன் தமையனை இழந்துவிட்டால் பின்னர் அடைவது முடியாது என்பது திண்ணம். 'உடற் பிறப்பில்லா உடம்பு பாழ்' 'எம்பியை ஈங்குப் பெற்றேன் என் எனக்கு அரியது' 'துணையுடையான் படைக்கஞ்சான்' இவை முதலிய வாக்கியங்கள் சகோதரனுடைய அருமையைக் கூறுவனவாம். அவன் மிக்க குணசாலி, இவ்வாள் என்னிடமன்றி வேறு யாரிடமாவது கிடைத்திருப்பின் நீ இப்பொழுது உயிருடன் கூடிய நின் மூத்தோனது உடலினைக் காண்பது கூடாத காரியமாம். உயிரிழந்த அவனது தலையினைக் காணலாம். ஆதலால் அரசனே! நீ உன் தமையனிடம் கொண்ட பகைமையினை விடுத்து, அவனை நாட்டிற்கு அழைத்து வந்து, முன்போல ஒற்றுமை பெற்று வாழுவாயேயாயின், நினக்குப் புகழுண்டாம். நான் கூறுவனவற்றைக் கூறியாயிற்று; பின் நின் எண்ணப்படி செய்க" என்று கூறினர்.

இளங்குமணன் பெருந்தலைச்சாத்தனார் கூறியவற்றைக் கேட்டான். உள்ளம் உருகினான்; கண்ணீர் பெருக்கினான்; "அன்பிற்கு முண்டோ வடைக்குந்தாழ் ஆர்வலர், புன்கணீர் பூசல்தரும்" என்பது அவனிடத்தில் மெய்மையாயிற்று. "தானுடாது போனாலும் தன் தசை யாடும்" அல்லவா? புலவர் பாதங்களில் வீழ்ந்தான். அவரை நோக்கிப் "பெரியோரே! நான் இக்காரியத்தை அறியாமையாற் செய்து விட்டேன். நான் என் மூத்தோனை இழந்து விட்டேன். அவனது உயிரை வாங்க நினைத்தேன். இப்பொழுது அவனது உயிர் உம்மிடத்தில் இருக்கின்றது. அதனைக் கொடுத்து என்னைக் காப்பாற்றும். இனி அரைக்கணமேனும் என் தமையனைப் பாராமலிருக்க மாட்டேன், நீர் தாம் எனக்கு அருள்செய்ய வேண்டும். அவன் யாவர்க்கும் கற்பகம்போல விளங்கினன். நான் அக் கற்பகத்தை வேருடன் வெட்டிச்சாய்க்கும் கொடியோனாய் இவ்வுலகத்தில் தோன்றினேன். "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" போலாயினேன். புலவரே, நீர் தாம் காத்தருளவேண்டும்." என்று கண்ணீர் பெருக்கி நின்றான்.

புலவர், இளங்குமணன் உண்மையிலேயே தன் மூத்தோனிடத்தில் அன்புகொண்டு மனமுருகுகின்றான் என்று கண்டு, அவனைத் தேற்றித் தாம் குமணனை நாட்டிற்கு அழைத்து வருவதாகக்கூறி அவனை அங்கிருக்கும் வண்ணம் பணித்துத் தாம் குமணனிருக்கும் காட்டை யடைந்து, அவனை நோக்கி, "அண்ணலே! நின் தம்பி உனக்குச்செய்த தீமையின் பொருட்டு, இப்பொழுது கழிவிரக்கம் கொள்கின்றான்; உன்னைப் பாராமல் இனி அரைக்கணமும் அவன் உயிர் வாழான். நான் உன்னை நாட்டிற்கு அழைத்து வருவதாக உறுதி கூறியதன்மேல் அவன் பொறுத்துக் கொண்

டிருக்கின்றான். நீ உன் தம்பி செய்ததை மனக்கொளாது எல்லாவற்றையும் மறந்துவிட்டு, என்னுடன் நாட்டை யடையவேண்டும் என்று உன்னை நான் கேட்டுக்கொள்கின்றேன். நீ அவ்விதம் செய்தால் எனக்குப் பரிசில் நல்கினவனாக ஆவாய்,'' என்று கூறினார்.

குமணன் புலவர் கூறியதற்குடன்பட்டான். அவருடன் தன் நாடு செல்லத் தொடங்கினான். புலவர் அவனை அழைத்துக் கொண்டு நாட்டை யணுகுவதை இளங்குமணற்குத் தெரியப்படுத்தினார். இளங்குமணன் தன் தமையனைக் காணலாமெனு மாசையால் படைகள் புடை சூழ்ந்துவரக் குமணனை முகமன் கூறி அழைக்கச் சென்றான் நாட்டின் எல்லையில் குமணனைப் புலவருடன் கண்டான், கண்ணீர் ஆறாகப் பெருக்கினான், ஓடித் தன் தலைமயன் பாதங்களில் அடியற்ற பனைபோல வீழ்ந்தான். குமணனும், கண்ணீர்பெருக்கித் தம்பியைத் தூக்கி மார்புடனணைத்துக் கொண்டு ஒருடல்போல வெகு நாழிகை யிருந்தனன். அதனைக் கண்டவர் யாவரும் மிகவும் வியப்பெய்தினர். புலவர், அவ்விருவரையும் தேற்றி அழைத்துக்கொண்டு அரமனை வந்தெய்தினர். புலவர், அரமனையையும் நகரையும் அணிபெறச்செய்வித்து நல்ல நாளொன்றில் குமணனை அரியணையேற்றி மணிமுடி கவித்து அரசியல் கைக்கொளளும் வண்ணம் செய்தனர். இளங்குமணன், அரியணையின் பக்கத்திலிருந்து இளவரசாக விளங்கித் தன் மூத்தோனது ஏவலின் வழுவாதொழுகி வந்தனன். புலவரும, அவர்களிடம் மிக்க பரிசில் பெற்றுத் தம் வறுமை நோய் களைந்து, மனைவி மக்களுடன் இன்பமாய் வாழ்ந்து வந்தனர்.

---

# இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.

இவன் சேரநாட்டை யாண்ட சேரவரசர் மரபைச் சார்ந்தவன். உதியஞ்சேரல் என்னும் அரசனுக்கு அவன் மனைவியான நல்லினி என்பவளிடம் பிறந்தவன். இவன் தனது வீரத்தால், குமரிமுதல் இமயமலைவரை வென்று தன்னடிப்படுத்துத் தான் இமயம்வரை வென்றதற்கு அறிகுறியாக வில் அடையாளமுடைய இலச்சினையை (முத்திரையை) அவ்விமயமலையில் தீட்டியவன்.

இந்நெடுஞ்சேரலாதன், தன்னால் வெல்லப்பட்ட தமிழ் நாடு முழுதும் தன்கோலே செல்லுமாறு ஆண்ட பெருந்தகையாவன். இவன் தமிழரசரை வென்றதோடமையாது ஆரியவரசரையும் வென்று, அவர்களைத் தன்னடியில் வணங்கித் திறைகட்டி வருமாறும் செய்தவன்.

இச்சேரலாதன் யவனர்கள் என்று கூறப்படுகிற மேற்றிசையவர்களோடு போருடற்றி, அவ் யவனர்களைப் போரில் அகப்படுத்தி, அவர்களது கையைப் பின் கட்டாகக் கட்டி, அவர்கள் தலையில் நெய்யைப்பெய்து, அவர்களிடத்துள்ள அரியவிலைபெற்ற நல்ல கலன்களையும், வயிரம் முதலிய மணிகளையும், அவர்களிடத்திலிருந்து கொள்ளும் தண்டப்பொருளாகக் கொண்டு, அவற்றையெல்லாம் தனதூருக்குக் கொணர்ந்து யாவர்க்கும் வரையாது கொடுத்தனன்.

கடலிடையே தீவொன்றில் வசித்த தன் பகைவர் மேல் கப்பற்படையுடன்சென்று, அவரது காவன் மரமான கடம்பை வெட்டி யெறிந்து, அப்பகைவரைப் போரில்

தொலைத்தவன். இவன் தனக்குப் பகைவரான ஏழு அரசரை வென்று, அவர்களது ஏழு முடியாலும் செய்ததோராரத்தைத் தன் மார்பின்கண் அணிந்து கொண்டுள்ளவன்.

இவ் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் என்ற புலவர், பதிற்றுப்பத்துள் இரண்டாம் பத்தால் (பத்துப்பாடல்களால்) பாடினார். அவர் அக்கோவைப் பாட அவன் அவருக்குத் தன் நாட்டின் கண்ணுள்ள உம்பற்காட்டில் ஐஞ்ஞூறூர் பிரமதாயமாகக் கொடுத்ததோடு, முப்பத்தெட்டு யாண்டு தென்னாட்டுள் வருவதனிற்பாகமும் கொடுத்தனன். இச்சேரலாதன் ஐம்பத்தெட்டு யாண்டு அரசாண்டனன்.

“மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசி னுதியஞ் சேரற்கு
வெளியன் வேண்மா ணல்லினி யீன்றமகன்
அமைவர லருவி யிமயம் விற்பொறித்து
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோ னிறீஇத் தகைசால் சிறப்பொடு
பேரிசை மரபி னாரியர் வணக்கி
நயனில் வன்சொல் யவனர்ப் பிணித்து
நெய்தலைப் பெய்து கைபிற் கொளீஇ
அருவிலை நன்கலம் வயிரமொடு கொண்டு
பெருவிறன் மூதூர்த் தந்துபிறர்க் குதவி
அமையார்த் தேய்த்த வணங்குடை நோன்றாள்
இமைய வரம்பன் நெடுஞ் சேரலாதன்”

# பல்யானைச்செல்கெழுகுட்டுவன்.

இவன் முன்னர்க்கூறப்பட்ட இமயவரம்பன் நெடுஞ் சேரலாதனுடைய தம்பியாவன். உம்பற்காடு என்பது இவ்வரசர்களுக்குரியதாக இருந்து, பின் வேறொருவருக்கு உரியதாக ஆயிற்று. அதனை இவ்வரசன் தன் வென்றி யால் தன்னதாகச் செய்துகொண்டு, அவ்விடத்துத் தன் செங்கோல் செல்லுமாறுசெய்தவன்.

இவன், தன் குலத்துள்ள முதியோர்கள் தமக்கு நாட் டிற் பங்கின்றிச் செயலற்று யாது செய்வது என்று இருந்த காலை அவர்களிடத்து மிகுந்த தண்ணளியுடன் அவர்களை யழைத்துத் தழுவிக்கொண்டு, அவர்க்குத் தன்னாட்டைப் பகுத்துக்கொடுத்து அவர்களை மகிழ்வித்தவன்.

இக்குட்டுவன், தனக்குச் சொந்தமாகிய மேல்கடல் நீரும், பிறருக்குச் சொந்தமாயிருந்து பின்னர்த் தன்னால் வென்றுகொள்ளப்பட்ட கீழ்கடல் நீரும் ஒரே பகலில் தன் னூர்க்கு வரும்படி யானைகளை இருகடலுக்கும் வரிசையா கச்செலுத்தி அக்கடல்களின் நீரைக்கொணரும்படிசெய்து, அவற்றால் அபிஷேகம் செய்து கொண்டவன்.

இவனுக்குப் புரோகிதராக வளங்கியவர் நெடும்பார தாயனார் என்பவர். அவர், இல்லறத்தைத் துறந்து, தவம் செயல் கருதி இக்குட்டுவன் அரசனாக வீற்றிருக்கும் பொ ழுது காட்டையடைந்தார். அதனைக்கண்ட இவ்வரசன் தானும் அரசாட்சிச் செல்வத்தைத் துறந்து, தவம்செய்ய அவரோடு காட்டையடைந்த அறிவுமிக்க அரசனாவான்.

இப்பல்யானைச் செல்கெழு குட்டுவனைப் பாலைக்கௌதமனார் என்ற புலவர் பதிற்றுப் பத்துள் மூன்றாம் பத்தால் பாடினார். அதற்கு அவ்வரசன் கௌதமனாரை நோக்கி 'நீர் வேண்டியது கொண்மின்' என்று கூற அவர் 'யானும் என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும். நீ எங்களைச் சுவர்க்கத்துக்கு அனுப்புவாயாக' என்றனர் அப்பொழுது அவ்வரசன் பார்ப்பார்களிற் பெரியோரையழைத்து, இவர்கள் சுவர்க்கம் புகுவதற்குச் செய்யவேண்டுவது என் என்று உசாவ, அவர்கள் ஆராய்ந்து 'சுவர்க்கம்புக வேண்டுவோன் வேள்வி செய்யக்கடவன்' என்று கூற இவ்வரசன் அக்கௌதமனார் பொருட்டுப் பெருவேள்விகள் பத்துச் செய்விப்பது என்று கருதி ஒன்பது வேள்விகள் வேட்பித்துப் பத்தாம் வேள்வி வேட்பிக்கையில் கௌதமனாரும் அவர் மனைவியும் உடம்போடே சுவர்க்கம் பெற்றனர். முற்காலத்தில் விசுவாமித்திரர் என்னும் முனிவர் வேள்விசெய்து திரிசங்கு என்னும் அரசனை உடம்போடு சுவர்க்கம் அனுப்பத் தேவர்கோன் அதனை ஏற்றுக் கொள்ளாமல் அவ்வரசனைக் கீழே செலுத்திவிட்டனன் என்னும் வரலாறு, இவ்விடத்தில் நோக்கத்தக்கது. இது அங்ஙனமன்றி, அம்முனிவராலும் செய்யமுடியாத அரியசெயலை இவ்வரசன் செய்து கௌதமனாரையும் அவர் மனைவியையும் உடம்போடு மேலுலகனுப்பியது வியப்பன்றோ! அக்காலத்துத் தமிழகம் வேள்வி முதலிய வைதிகச்சடங்கில் எத்துணைத்தூரம் ஆழ்ந்துகிடந்தது என்பது இதுபோன்ற வரலாறுகளால் நன்கு தெளியக்கிடக்கின்றது.

இவ் இமயவரம்பன் தம்பியாகிய பல்யானைச் செல்கெழு குட்டுவன் இருபத்தையாண்டு அரசாட்சி செய்து வீற்றிருந்தனன்.

"இமய வரம்பன் றம்பி யமைவர
வும்பற் காட்டைத் தான்கோல் நிறீஇ
அகப்பா வெறித்து பகற்றீ வேட்டு
மதியுறழ் மரபின் முதியரைத் தழீஇக்
கண்ணகன் வைப்பின் மண்வகுத் தீத்துக்
கருங்களிற் றியானைப் புணர்நிரை நீட்டி
இருகடல் நீரு மொருபக லாடி
அயிரை பரைஇ யாற்றல்சால் முன்போடு
ஒடுங்கா நல்லிசை யுயர்ந்த கேள்வி
நெடும்பார தாயனர் முந்துறக் காடுபோந்த
பல்யானைச் செல்கெழு குட்டுவன்"

---

## செங்குட்டுவன்

இவ்வரசன் மேலே கூறிய இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுடைய மக்களுள் சிறந்தவனாவன். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்குத் திகழொளி ஞாயிற்று எழ்பரி நெடுந்தேர்ச் சோழன் மகளான நற்சோணை என்பவளும், வேளாவிக் கோமானான பதுமன் என்பவனுடைய மகளும் மனைவியர்களாக வாய்ந்துள்ளார்கள். அவர்களுள் சோழன் மகள் நற்சோணையிடமாக நெடுஞ்சேரலாதனுக்குப் பிறந்த மகனாவன் இச்செங்குட்டுவன். இவனுக்கு இளங்கோவேந்தன் என்பவன் உடன் பிறந்தவன். இவனும், இளங்கோவேந்தனும், ஒருநாள், தமது தந்தை நெடுஞ்சேரலாதன் அத்தாணி மண்டபத்தில் வீற்றிருக்கும் காலத்து, அவனது பக்கத்தில் அமர்ந்திருந்தனர். அவ்வேளை வருவது கூறும் நிமித்திகன் ஒருவன் அரசவையையடைந்து, நெடுஞ்

சேரலாதனையும் அவனது மக்களையும் அடிமுதல் முடிவரையும் நோக்கி, "அரசே, நீ விண்ணுலகம் சென்ற பிறகு உன் மக்களிருவருள் இளையோனே இவ்வரசாட்சிச் செல்வத்திற் குரியவனாவன்" என்று கூற அதனைக் கேட்ட இளங்கோ வேந்தன், நிமித்திகனைச் சினந்து நோக்கி, "நீயாது கூறினை? இவ்வரசாட்சியைமுறைகேடாக யான் ஆளுவேன் என்று நீ கருதற்க" என்றுகூறி அவ்வத்தாணியின்கண்ணுள்ள யாவரும் பார்த்திருக்கையில் இவ்வுலகப் பற்றைத் துறந்து அந்தமி லின்பத்தையுடைய வீட்டுலகத்தை யாள்வதற்குரிய வேந்தனாக ஆயினன். இளங்கோவேந்தன் துறவெய்தியபிறகு இளங்கோவடிகள் என்று அழைக்கப்படுவாராயினர். அங்ஙனம் துறவெய்திய இளங்கோவடிகள், வஞ்சிமா நகரத்தின் கீழ் பாலுள்ள குணவாயிற்கோட்டம் என்னு மிடத்தில் வசித்து வருவாராயினர். நிமித்திகன் கூறியதால் மனமுளைந்து நின்ற செங்குட்டுவன், தனது இளவல், கூறியவற்றாலும், துறவு பூண்டமையாலும் மனந்தேறியிருந்தனன். பின்னர் நெடுஞ்சேரலாதன் இவ்வுலகத்தை நீங்கியபிறகு, செங்குட்டுவனே வஞ்சிமாநகரத்தின் அரசாட்சியைக் கைக்கொண்டனன்.

செங்குட்டுவன் தந்தையாகிய நெடுஞ்சேரலாதன், வேற்பஃறடக்கைப் பெருநற்கிள்ளி என்னும் சோழ வரசனுடன் போர்செய்ய, அவ்விருவரும் அப் போர்க்களத்தில் ஒருங்கிறந்தனர். அப்பொழுது செங்குட்டுவன் தாயும், நெடுஞ்சேரலாதன் மனைவியுமாகிய நற்சோணை யென்பவளும் அக்களத்திலே தன் கணவனுடன் கூடி உயிர் நீத்தனள். அங்ஙனம் தன் கணவனுடன் உயிர்நீங்கிய சிறப்புப் பற்றி அவளுக்கு நடுகல் உண்டாக்கவேண்டும் என்று செங்குட்டுவன் கருதி, அதற்காகச் சமைக்கப்பட்ட கல்லைக் கங்

கையில் நீராட்டித் தூய்மை செய்தற்பொருட்டு வடநாட்டிற்குச் சென்றனன். அப்பொழுது அவ்விடத்திலுள்ள ஆரிய வரசர் பலர் ஒன்றுதிரண்டு வந்து செங்குட்டுவனை எதிர்த்துப் பெரும் போர் விளைத்தனர். செங்குட்டுவன அக்கங்கைக் கரையில் தானொருவனாகவே நின்று, அவர்களனைவருடனும் போர்செய்து வெற்றிகொண்டனன். இதனை

"கங்கைப் பேர்யாற்றுக் கடும்புன னீத்தம்
எங்கோ மகளை யாட்டிய வந்நாள்
ஆரிய மன்ன ரீரைஞ் ஞூற்றுவர்க்கு
ஒருநீ யாகிய செருவெங் கோலம்
கண்விழித்துக் கண்டது கடுங்கட் கூற்றம்"

என்று இளங்கோவடிகள் கூறியதனால் அறியலாம்.

இச் செங்குட்டுவன், அங்ஙனம், தன் தாயாரின் பத்தினிக் கல்லைக் கங்கையில் நீராட்டச் செல்வதற்கு முன்னர் கடல் நடுவிலிருந்து அதனை அரணாகக்கொண்டு தனக்குப் பகைவர்களா யுள்ளவர்களை வெல்வதற்காக மரக்கலங்களில் வேல்களை யேற்றி, அவற்றைக் கடலிற் செலுத்தித் தன் பகைவர்களுடைய வலியைத் தொலைத்து, அவர்களை வெற்றி கொண்டான். அதனால் அவன், கடல் பிறக் கோட்டிய செங்குட்டுவன் எனவும் சேரமான் கடலோட்டிய வேல்கெழு குட்டுவன் எனவும் பெயர் குறிக்கப்பட்டனன்.

அறுகையென்னும் அரசனொருவன் சேண் நாட்டானாயிருந்துகொண்டு, செங்குட்டுவனுக்கு நட்பாளனாயிருந்தான். அவ்வறுகை யென்பவனுக்குப் பாண்டியன் படைத்தலைவனாகிப் பெருவீரனாக விளங்கிய பழையன் மோகூர் என்பவன் பகைவனாயிருந்தமையால், தன் நட்பினனாகிய

அறுகைக்குப் பகைவனுயுள்ள பழையனைத் தன் பகைவனுகக்கொண்டு, அப்பழையனுடன் செங்குட்டுவன் பெரும்போர் தொடுத்து, அவனைத் தோற்கச்செய்து, அவனது காவன் மரமாக விளங்கிய வேம்பினைத் துண்டம் துண்டமாகத் தறிப்பித்து. அப்பழையன் யானைகளையே கடவாகவும், அவன் மகளிரது கூந்தலை அறுத்துத் தறித்து, அதனையே கயிருகவும் கொண்டு வண்டியிலிட்டு இழுப்பித்தனன்.

இச் செங்குட்டுவன் சோழ வமிசத்துத் *தௌஹித்திரன் ஆதலின், அவனுக்கு அம்மானுகிய சோழன் இறந்ததும் அவனது மகன், இளம்பிராயத்தினனுக இருந்தமையின், சோழர் குடியிலுதித்த மற்றை யரசர்கள் அச்சிறுவனை நீக்கிவிட்டு, அவனது அரசியலைக் கைக்கொள்ள முயற்சித்தனர். அங்ஙனம் முயற்சி செய்தவர்கள் ஒன்பதின்மராவர். செங்குட்டுவன் தன் அம்மான் சேயாகிய இளஞ்சோழன் பட்டத்தைத் துறந்திருப்பது தகுதியன்று என்று கருதித் தன் அம்மான் சேய்க்காகப் பரிந்து அவ்வொன்பதின்மருடனும் உறையூருக்கு அடுத்துள்ள நேரிவாயில் என்னுமிடத்தில் பெரும்போர் நடத்தி, அதில் அவ்வொன்பதின் மரையும் வென்று, சோழ ராச்சியத்தைத் தன் அம்மான்சேய்க்கே உரியதாகச் செய்து, அவனுககுச் சோழராச்சிய பட்டாபிஷேகம் செய்து வைத்தான். இன்னும் இவ்வரசன் கொடுகூர், வியலூர், இடும்பிற்புறம் முதலிய இடங்களில் மற்றச் சோழபாண்டிய அரசர்களோடு போர் நிகழ்த்தி வெற்றி பெற்றிருக்கின்றனன்.

* தௌஹித்ரன் மகள்வயிற்றுப் பேரன.

இங்ஙனம் செங்குட்டுவன் என்னும் அரசனது போர்ப் புகழை விரிக்கின் மிகவும் பெருகும். அவன் காலத்து நடந்த பெருஞ் செயலொன்று மேலே கூறப்படும்.

சோழநாட்டில் காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்து வந்த வணிகர் தலைவனாகிய மாசாத்துவான் என்பவன் தன் மகன் கோவலனுக்கு மாநாய்கன் என்ற வணிகனது மகள் 'கண்ணகி'யை மணஞ்செய்வித்து, அவ்விருவரையும் தனியாக இல்லறம் நடத்திவரும் வண்ணம் வேறொரு மாளிகையில் இருத்த, அவர்கள் அங்கிருந்து இல்லறம் நடத்திவரும் நாட்களில், கோவலன் அவ்வூரிலுள்ள மாதவியென்னும் பரத்தையிடத்துக் காதல்கொண்டு, தன்மனை துறந்து அவளுடன் இன்பமனுபவித்து வந்தான். கண்ணகி தனித்து வாழ்ந்து வந்தாள். இங்ஙனம் பலநாட்கள் செல்ல மாதவிக்கும், கோவலனுக்கும் காரண மொன்றுமின்றி வினைவயத்தால் மனவருத்தமுண்டாகக் கோவலன் மாதவியை விடுத்துக் கண்ணகியை யடைந்து 'நான் மதுரை சென்று வாணிபம் செய்யப்போகிறேன்; நீயும் உடன் வருக' என்று கூறி, அவளையும் அழைத்துக்கொண்டு, அன்றிரவின் கடையாமத்திற் புறப்பட்டு வழிகளையெல்லாம் மிகவும் அரிதிற்கடந்து, மதுரையை யடைந்து இடைச்சேரியில் தங்கியிருந்தான். மறுநாள் கோவலன் கண்ணகியின் காற்சிலம்புகளுள் ஒன்றைக்கொண்டுபோய் விற்று வருவதாகக் கூறி, அதனை எடுத்துக்கொண்டு மதுரையின் கடைத்தெருவிற் புகுந்தான். அங்கே ஒரு பொற்கொல்லனைக் கண்டு, அவனிடம் தான் கொணர்ந்த சிலம்பைக் கோவலன் காட்ட, அவன் இவனை வஞ்சிக்கக்கருதி, அவ்விடத்தில் இருக்கும்வண்ணம் கூறிவிட்டுத் தான் அரமனை சென்று சிலநாட்களுக்குமுன் அரமனையில் திருட்டுப்போன சிலம்பு

தன்னிடத்தில் விலைமதிக்க வந்திருக்கிறதாகவும், இப்பொழுது காவலர் வந்தால் தான் திருடனைப் பொருளுடன் பிடித்துத் தருவதாகவும் அரசனிடம் கூறினன். அரசன் அப்பொழுது தகுந்த நிலைமையில் இல்லாதிருந்தமையால் இவன் கூறியதை யாராயாமல் சில காவலரை யழைத்து, இவன் காட்டும் கள்வனைக் கொன்று, அவன் கையிலுள்ள சிலம்பினைக்கொண்டு வாருங்களென்று கட்டளையிட்டனன். பொற்கொல்லன் அக்காவலர்களை யழைத்துக் கொண்டு, கோவலனிருக்குமிடம் வந்து, அவனையவர்களுக்குக்காட்ட, அவர்கள் அவனைக் கொலைசெய்து வீழ்த்திவிட்டனர். அது கண்ணகிக்குத்தெரிய அவள் மற்றொரு சிலம்புடன் புறப்பட்டுத் தன்கணவன் இறந்து விழுந்து கிடக்குமிடம் வந்து, அவனைப்பார்த்துவிட்டு, நேரே அரமனை வாயிலையடைந்து, தன் வருகையை அரசனுக்கு அறிவித்து, அவன் வருக என்று கூறினவுடன் உள்ளே சென்று, தன் கணவன் கள்வனல்லன் என்று வழக்காடி அவ்வரசனை வென்றனள். அரசன் தான் கோவலனைக் கொன்றது அநியாயம் என்று தெரிந்தவுடன் அந்நிலையே அரசுகட்டிலில் தன் உயிரை விடுத்தனன். அவன் மனைவியும் உடன் உயிர் நீத்தனள்.

கண்ணகி மதுரையைத் தீயூட்டிவிட்டு, மதுராதெய்வத்தின் வாக்கின்படியே வையைக் கரைவழியே மேற்றிசை நோக்கிச்சென்று, மலைநாடடைந்து செங்குன்றென்னும் மலையின் மேலேறி ஒரு வேங்கைமரத்து நிழலில் நிற்கக் கோவலன் இறந்த பதினான்காவதுதினத்தில் அவன் அவ்விடத்தே தெய்வ வடிவோடு தோன்றக் கண்ணகி அவனைக்கண்டு களித்து, அவனுடன் விமானமேறித் தேவர்கள் போற்றும்படி விண்ணுலகடைந்தாள்.

இந்நிகழ்ச்சியை நேரிற் கண்டு களித்த அக்குன்றத்துக் குறவர்கள் பெருவியப்பெய்தி 'இவள் தெய்வமாவாள்; இவள் பொருட்டுக் குரவையாடுவோம்' என்று ஆர்ப்பரித்தெழுந்து மலைநாட்டு முறைப்படி குரவைக்கூத்தாடியும் அதற்குரிய பாடல்களைப்பாடியும் பெருஞ்சிறப்புச் செய்தார்கள்.

பின்னர் அவர்கள் தங்கள் அரசன் செங்குட்டுவன் மலைவளங் காண்பானாய் அம்மலைக்குத் தன் பரிவாரங்களுடன் வந்திருப்பது தெரிந்து இச் செய்தியை அவனுக்கு அறிவிக்கவேண்டும் என்று கருதி,—

"யானை வெண் கோடு மகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும் சிந்துர கட்டியும்
அஞ்சனத் திரளும் அணியரி தாரமும்
ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்
கூவை நீறும் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனுந் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமும் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருகுலை வாழையின் இருங்கனித் தாறும்
ஆளியி னணங்கும் அரியின் குருளையும்
வாளவரிப் பறழும் மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியும் குடாவடி யுளியமும்
வரையாடு வருடையும் மடமான் மறியும்
காசறைக் கருவும் மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியும் தேமொழிக் கிள்ளையும்"

ஆகிய பலவகைப்பட்ட மலைபடு வளங்களை யெல்லாம் வாரிக்கொண்டு, செங்குட்டுவன் பாடி வீட்டையடைந்து, அவன் திருமுன்பே இவற்றையெல்லாம் வைத்து வணங்கி நின்று, "அண்ணலே! அரசர்க்கரசே! யாம் வாழும் இம் மலையின் கண்ணே ஒரு வேங்கைமரத்து நிழலில், பத்தினி யொருத்தி, தெய்வம் போல்வாள் பெருந் துயரோடும் வந்து நிற்கத் தேவர்கள் பலரும் அவளிடம் வந்து, அம் மங்கைக்கு அவள் காதற்கொழுநனைத் தெய்வ வடிவோடும் காட்டி அவளையும் உடனழைத்துக் கொண்டு, எங்கள் கண்முன்பே விண்ணுலகம் சென்றனர். அவள் எந்நாட்டாள் கொல்லோ; யாவர் மகளோ அறியோம். இச்செயல் எங்கட்குப் பெருவியப்பினைத் தராநின்றது. இது தேவரீர் நாட்டில் நிகழ்ந்தது; தேவரீருக்குத் தெரிவித்துக்கொண்டோம்" என்றனர்.

செங்குட்டுவன் அதுகேட்டுப் பெருவியப்பெய்தி, நாற்புறமும் நோக்க, அப்பொழுது அவனது அத்தாணியை அழகு செய்துகொண்டிருந்த சாத்தனார் என்னும் புலவர் பெருமான், செங்குட்டுவனை நோக்கி "வேந்தே! இதனை யானறிவேன்; மதுரையில் வெள்ளியம்பலத்து ஒருநாள் யான் நள்ளிருளில் கிடந்தேன். அப்பொழுது இப்பெண் தன் கணவனைக் கொலைசெய்தவன் என்று பாண்டியன் நெடுஞ்செழியனைச் சினந்து, மதுரையைத் தீயூட்டிய பொழுது, அம்மதுரைமா தெய்வம் அவளெதிரிற்றோன்றி, உங்களுடைய முன்னை யூழ்வினையின் பயன் இது; இதனை நீங்கள் அனுபவிக்கின்றீர்கள்; இதன் பொருட்டு வெறுப்படைய வேண்டா என்று தேற்றிச் சென்றது. இவற்றையெல்லாம் யான் நேரில் கேட்டுள்ளேன். இவள், காவிரிப்பூம் பட்டினத்துக் கோவலன் என்பவனு

டைய மனைவியாம். பெயர் கண்ணகியென்பது" என்று அவளுடைய வரலாற்றைத் தெளிவுபெறக் கூறினார்.

அதனைக்கேட்ட செங்குட்டுவன், சாத்தனாரை நோக்கிப் "புலவீர்! தான் செங்கோலினின்றும் வழுவிய செய்தி எம்மையொத்த அரசர் செவிகளிற்சென்றெட்டுவதற்கு முன்பே பாண்டியன் உயிர் நீங்கியதானது, அவனது தீவினையால் வளைக்கப்பட்ட கோலை உடனே நிமிரச் செய்து செங்கோலாக்கிவிட்டது. அரசராயுள்ளார்க்கு நாட்டில் மழை காலத்திற் பெய்யாதாயின் அச்சம்; உயிர்கள் தவறு செய்யுமாயின் அச்சம்; கொடுங்கோற்கஞ்சி மன்னுயிர்களைக் காத்தற்குரிய உயர்குடியிற் பிறத்தலால் துன்பமல்லது சுகமேயில்லை" என்று கூறிவிட்டுத் தன் தேவியை நோக்கி, "மாதராய்! தன் நாயகனாகிய பாண்டியன் இறந்தபொழுதே தானும் உயிர்நீத்த அவன் மனைவியும், தன் கணவனைக் கொலைசெய்தமையால் பாண்டியனிடத்து மிகுந்த சினத்துடன் நம் பதிக்கே வந்த கண்ணகியுமாகிய இவ்விரு பெரும் பத்தினியர்களுள்ளே யாவர் சிறந்தவர்?" என்று வினவ, அதற்குச் செங்குட்டுவன் மனைவியாகிய வேண்மாள் என்பவள், "தன் கணவனுயிர் நீத்தது பொழுதே தன்னுயிர் நீத்த பாண்டியன் பெருந்தேவி விண்ணுலகத்தே பெருந்திருவுறக்கடவள். அவள் வேற்று நாட்டாளாதலின் அவளுக்கு நாம் செய்யக் கடவதொன்று மின்று. வேற்று நாட்டவளாயிருந்தும் நம் நாடு நோக்கிவந்த இப்பத்தினிப் பெண்ணை வணங்கி வழிபடவேண்டும்" என்று கூறினாள்.

அரசன் அதனைக்கேட்டுத் "தன்மனைவி விரும்பியவாறே செய்வதற்கு யாது செய்யவேண்டும்" என்று அமைச்சரை நோக்க, அவர்கள் "இத்தகைய பத்தினிப்

பெண்டிர்க்குப் பொதிய மலையினின்றாயினும், இமயமலையி னின்றாயினும் கற்கொண்டுவந்து, படிவம் சமைத்து வழி படுவதே முறையாகும்; அங்ஙனம் பொதியமலையினின்று கொண்டுவந்த கல்லைக் காவிரியினும், இமயமலையினின்று கொண்டு வந்த கல்லைக் கங்கையினும் நீராட்டித் தூய்மை செய்யவேண்டும்'' என்று கூறினர்.

அதனைக்கேட்ட செங்குட்டுவன், ''பொதியமலையி னின்று கற்கொண்டுவந்து காவிரியில் நீராட்டுவது எம் போலும் பெருவீரற்கு எளிய செய்கையாம். ஆதலால், இமயத்தினின்றும் கற்கொணர்ந்து கங்கையில் நீராட்டிக் கொண்டு வருவதே தகுதியுடைத்தாம். அன்றியும், வட நாட்டரசனான பாலகுமரன் என்பவனுடைய மக்களாகிய கனகனும் விசயனும் விருந்தொன்றில் தமிழ் நாட்டரசரு டைய ஆற்றலை யறியாதவராய் இகழ்ந்துரையாடி யுள்ளார் கள். ஆதலால் இப்பொழுது பத்தினிக் கடவுளைப் பிர திஷ்டை செய்வதைக் காரணமாகக்கொண்டு அவ்வட ஆரி யரது செருக்கையும அடக்கி வரவேண்டும். ஆதலின் அமைச்சர்களே! நமது சேனைகளைச் சித்தப்படுத்தி நல்ல முகூர்த்தத்தில் வடநாட்டை நோக்கி யாத்திரை செய்த னுப்புக'' என்றனன்.

அதனைக் கேட்ட வில்லவன் கோதை என்னும் செங் குட்டுவன் சேனாபதி, அரசனையடிவணங்கி "வேந்தர் வேந் தே! தேவரீர் பத்தினிக்கடவுளைச் சமைப்பதற்கு இமவா னிலிருந்து கற்கொண்டு வரக் கருதியே வடதிசைச் செல்லு கிறீராதலின், தமது வருகையை அவ்வடநாட்டரசர் யாவ ரும் அறியும்வண்ணம், வில்கயல்புலி என்னுமிவற்றை இலச் சினையாகக்கொண்ட தேவரீரது திருமுகத்தை முன்னரே விடுத்தருள்க.'' என்று கூறினன். அப்பொழுது செங்குட்டு

வனது அமைச்சனாகிய அழும்பில்வேள் என்பவன் "அண்ணலே! இந்நாவலந்தீவில் அரசராயுள்ளாரனைவருடைய ஒற்றர்களும் இவ்வஞ்சிமா நகரின்கண் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். ஆதலின் நமது வடநாட்டு யாத்திரையை, அவ்வொற்றுக்களே தம் நாட்டரசர்களுக்குத் தெரியப் படுத்துவனவாம். நமது திருமுகத்தை அனுப்பவேண்டியதில்லை; இவ்வூரில் பறையறைந்து தெரிவித்தலே போதியது" என்று கூறச் செங்குட்டுவனும் அதற்குடம் பட்டனன்.

உடனே அவ்வஞ்சிமாநகரில் செங்குட்டுவனது வடநாட்டுயாத்திரையைப் பற்றியும், பகையரசர் வந்து பணியாவிடில் அவர்க்கு நேரும் கேடுகளைப்பற்றியும்,

"வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதோ றூழி யுலகங் காக்கென
விற்றலைக் கொண்ட வியன்பேரி மயத்தோர்
கற்கொண்டு பெயருமெங் காவலனாதலின்
வடதிசை மருங்கின் மன்னவ ரெல்லாம்
இடுதிறை கொண்டுவந் தெதிரீ ராயின்
கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையும்
கேட்டு வாழுமின் கேளீராயின்
தோட்டுணை துறக்குந் துறவொடு வாழுமின்
தாழ்கழன் மன்னன் தன்றிரு மேனி
வாழ்க சேனா முகம்"

என்று பறை யறையப்பட்டது.

பின்னர்ச் செங்குட்டுவன், யாத்திரைக்காக நல்ல முகூர்த்தம் குறிக்கும்படி சோதிடனிடத்தில் கூறச் சோதி

டம் வல்லாளுகிய மௌத்திகன் எழுந்து வணங்கி, "அரசே! நினக்கு மேலும் மேலும் வெற்றியுண்டாவதாக" என்று வாழ்த்தி "இவ்வுலகிலுள்ள பகையரசரெல்லாம் நின்னடி பணியத்தக்க நல்லோரை யிதுவேயாம். நீ கருதிய வட திசை யாத்திரைக்கு இது பொழுதே புறப்படுதல் சாலச் சிறந்ததாம்'' என்றுரைத்தனன். அதனைக் கேட்ட செங் குட்டுவன் அந்நன் முகூர்த்தம் தவறுமல் தனது வாளையும் குடையையும் நாட்கோள் செய்யும்படி கட்டளையிட்ட னன். அதனைக்கேட்டுச் செங்குட்டுவனது பெருஞ்சேனை மிக்க ஆரவாரத்துடன் ஒலித்தது. முரசங்கள் முழங்கின. அரசனது ஐம்பெருங்குழுவும் எண்பேராயமும் மற்று முள்ள பரிவாரங்களும் 'செங்குட்டுவன் வெற்றிபெறுக' என்று வாழ்த்துக் கூறினர். அப்பொழுது அரசனது வாளும் வெண் கொற்றக் குடையும், பட்டத்து யானையின் பிடரிமேலேற்றப் பெற்று, வஞ்சிநகர்க்குப் புறத்தேயுள்ள கோட்டையில் மௌத்திகன்கூறிய நல்வேளையில் கொண்டு போய் வைக்கப்பட்டன.

பின்னர்ச் செங்குட்டுவன், மறுநாட்காலையில் தான் செய்ய வேண்டிய கடமைகளை யெல்லாம் முடித்துக் கொண்டு, தான் புறப்படும் வேளையதுவாதலால் தனது வழிபடுகடவுளாகிய சந்திரசடாதரரது திருவடிப் பாதுகை களைத் தனது முடியால் வணங்கித் தரித்துக்கொண்டு, அந் தணர்களது வேள்வித்தீயை வலம் வந்து வணங்கித் தனது பட்டத்து யானைமேல் நல்ல முகூர்த்தத்தில் ஏறிப் புறப் படத் தொடங்கினன். அப்போது அவனை வாழ்த்திக் கொண்டு, ஆடகமாடம் என்னும் திருமால் கோயிலினின் றும் திருமாலினது பிரசாதத்தைச் சிலர் கொண்டு வந்து கொடுப்ப, அதனை வணங்கி யேற்றுத் தன் புயங்களில்

அணிந்துகொண்டு, நால்வகைப் படையும் புடைசூழ வட திசை நோக்கி வஞ்சிமாநகர் விட்டுப் புறப்பட்டனன்.

புறப்பட்டவன், அன்று நீலகிரி என்னும் மலையடிவாரத்தை யடைந்து, பாடிவீடு செய்வித்து, அங்குத்தங்கி இளைப்பாறுவானாயினன். அப்பொழுது அவ்விடத்தே சஞ்சயன் என்ற தூதர் தலைவன் தன் பரிவாரங்களுடன் வந்து, வாயில் காவலனால் தன்வரவைச்செங்குட்டுவனுக்கறிவித்து அரசனாணையால் உள்ளே புகுந்து, அரசனையடிவணங்கி "அண்ணலே! தாம் பத்தினிக்கல் சமைக்க இமயம் வருவதையறிந்த கங்கைக்கரையிலுள்ள தமது நட்பாளராகிய நூற்றுவர் கன்னர்கள் தாங்களே பத்தினிக்கடவுளைச் சமைப்பதற்குரிய கல்லை இமயமலையினின்றும் கொணர்ந்து, கங்கையில் நீராட்டித் தூய்மைசெய்து தருவதாகக் கூறினார்கள்" என்றறிவித்து நிற்கச் செங்குட்டுவன் "நாம் பத்தினிக்கல் ஒன்றற்காகமட்டும் வடதிசைச் செல்லவில்லை. தமிழரசரை யிகழ்ந்துரையாடிய கனகவிசயரது செருக்கையும் அடக்கச் செல்கின்றோமாதலின், நீ நின் பரிவாரங்களுடன் முன்னர்ச் சென்று நாமும் நமது சேனைகளும் கங்கையைக் கடப்பதற்குரியவற்றைச் செய்யுமாறு நூற்றுவர் கன்னர்களிடம் தெரிவிக்க" என்று கட்டளையிட்டனன். சஞ்சயன் அங்ஙனமே அவன் கட்டளையைத்தாங்கி வடதிசைச் சென்றனன்.

செங்குட்டுவன் நீலகிரிப் பாடியினின்றும் இமயம் நோக்கிப்புறப்பட்டுக் கங்கைக்கரையை யடைய அவ்விடத்தில் நூற்றுவர்கன்னர்கள், சஞ்சயனால் செங்குட்டுவன் வருகையை முன்னமே யறிந்துள்ளாராதலினால் செங்குட்டுவனும் அவனது சேனைகளும் கங்கையைக் கடப்பதற்கு

வேண்டிய உதவியைச் செய்ய, அவ்வுதவி பெற்றுச் செங்குட்டுவன் கங்கையாற்றைக் கடந்தனன்.

கங்கையாற்றைக் கடந்த செங்குட்டுவன் தனது பகைவர் நாடாகிய உத்தரகோசலத்தை நெருங்க அதனையறிந்த அந்நாட்டரசர்களான கனக விசயர்கள், தங்கள் நட்பாசர்களுடன் கூடிச் செங்குட்டுவனது சேனையை எதிர்த்துப் பொருதனர். இருதிறத்துச் சேனைகளும் மிக்க கடுமையுடன் சண்டை செய்தன. அதனைக் கண்டோரனைவரும், இது தேவாசுரயுத்தமோ, இராம இராவண யுத்தமோ என்று அஞ்சினர். யானைப்படையுடன் யானைப்படையும், தேர்ப்படையுடன் தேர்ப்படையும், குதிரை வீரருடன் குதிரைவீரரும், வில் வீரருடன் வில் வீரரும் எதிர்த்துப் போருடற்றினர். இறுதியில் ஆரியர்படை தோல்வியடைந்தது. தமிழர்படை வெற்றிகொண்டது. அப்பொழுது தமிழரசரை இகழ்ந்து கூறிய கனகவிசயர்களுடன், ஐம்பது தேர்வீரர்களும் செங்குட்டுவனிடம் அகப்பட்டுக்கொண்டனர். மற்றப்பகைவர்கள் தாம் கைக்கொண்ட ஆயுதங்களை யெறிந்துவிட்டுக் காட்டிலோடி யொளிப்பாராயினர்.

இங்ஙனம் செங்குட்டுவன் தான் கருதிவந்த செயல்கள் இரண்டினுள் ஒன்றாகிய ஆரியவரசரை யெளிதில் வென்ற பிறகு, பத்தினிக்கடவுளைப் பொறித்தற்குரிய சிலையை இமயத்தினின்று கொணருமாறு தனது தானைத் தலைவனாகிய வில்லவன் கோதையை ஒரு சிறு படையுடன் அனுப்பிக்கொணருவித்து, அதனைக் கனகவிசயரது கதிர்மணிமுடிமேல் ஏற்றிக்கங்கையில் கொண்டுபோய் நீராட்டி, முன்போலவே நூற்றுவர் கன்னருதவியால் கங்கையின் தென்கரையை நண்ணி, அவ்விடத்தில் அவர்களால் அமைக்கப்பெற்ற பாடிவீட்டில் தங்கி யினைப்பாறினன்.

பின்னர்ச் செங்குட்டுவன் தன் பொருட்டுப் போரில் உயிர்விட்டவர்களுக்கு உரியவர்களால் நீர்க்கடன் முடிப்பித்து, இறவாது தமது அருஞ்செயல்களைக் காட்டிய வீரர்களுக்கு வேண்டிய சம்மானங்களைச்செய்து இன்புற்றிருக்குமெல்லை, கோவலனது தோழனாகிய மாடலன் என்னும் பெயர்வாய்ந்த மறையவன் தமிழ்நாட்டினின்றும் கங்கையாடுதற்பொருட்டு அவ்விடம வந்து, சேரர்பெருமானைக் கண்டனன். சேரர்பெருமான் தான் வந்தபிறகு தமிழ்நாட்டில் நடந்தவை யாவையென்று வினவி, யறிந்து கொண்டு, தன்னைப்புகழ்ந்த அம்மறையவனுக்குத் தன்னளவு பொன் நிறுத்துத் தானம் பண்ணி, அவனை அனுப்பினன். அப்பொழுது சேரன் பெருங்கணி அவனை வணங்கி வாழ்த்தி, அரசே! தாம் வஞ்சிமூதூரினின்றும் புறப்பட்டு, இன்றோடு முப்பத்திரண்டு மாதங்களாயின வென்று அறிவித்தனன்.

அப்பால் செங்குட்டுவன், தனக்கு நட்பரசராயிருந்துதவிசெய்த நூற்றுவர் கன்னர்களுக்கும் முகமன் கூறியனுப்பிக் கனகவிசயர் முதலிய பகை யரசர்களைத் தமிழ்நாட்டிற்கு, முன்னே அழைத்துக்கொண்டு போமாறு செய்துவிட்டுத் தான் அவ்விடத்தினின்றும் புறப்பட்டனன்.

செங்குட்டுவனது வருகை சேரநாட்டில் தெரிந்தவுடன் அரசபரிவாரங்களும், நகரமாந்தர்களும் மிக்க களிப்பெய்தினர். சந்திரனது உதயத்தைப் பெற்ற அலைகடல் போல அந்நாடு மிக்க ஆரவாரத்தை யடைந்தது. அரமனையும் நகரவீதிகளும் நன்றாய் அலங்கரிக்கப்பட்டன. தெருக்களில் பழமணல் மாற்றிப் புதுமணல் பரப்பப்பெற்றது. காய்க் குலைக் கமுகும் கதலியும் நாட்டப்பெற்றன. மகர தோரணங்கள் கட்டப்பெற்றன. பூரண கும

பங்களும் பொற்பாலிகைகளும் பாவைவிளக்கும் பலஇடங் களிலும் வைக்கப்பெற்றன. இங்ஙனம் அலங்கரிக்கப்பெற்ற நகரில் வடதிசைச் சென்று வெற்றியுடன் திரும்பும் செங் குட்டுவன் வெற்றி முரசும் மங்கலமுரசும் கலந்தொலிக்க அரச குமாரும் பரிவாரங்களும் தன்னைச் சூழ்ந்து வரப் புக்கனன்.

புக்கபின், சேரன் செங்குட்டுவன் தான் இமயத்தி னின்றும் கொணர்ந்த கல்லில் அந்தணர், புரோஹிதன், நிமித்திகன் சிற்பாசாரிகள் முதலியவர்களைக்கொண்டு பத் தினியின் உருவத்தைத் தீட்டி, அதற்கு அணிகலன்களெல் லாம் பூட்டி யலங்கரித்து, அவ்வுருவத்தைப் பிரதிஷ்டை செய்வதற்கென்று உண்டாக்கப்பட்ட கோயிலுள்ளே வேதபாரகர் வேதங்களைக்கூற ஆகமம் வல்லவர்கள் அதிற் கூறிய முறைப்படி அப்படிமத்திற்குச் செய்ய வேண்டிய வற்றைச் செய்து, மங்கல முரசம வார்கடலொலியின் விம் மப் பத்தினிக்கடவுளைப் பிரதிஷ்டை செய்வித்தனன். அப்பிரதிஷ்டை நடக்கும காலத்தில் செங்குட்டுவன் தன் னால் சிறை கொணரப்பட்ட கனக விசயர்களையும், மற்றும் சிறைக் கோட்டத்திலிருப்பவர்களையும் சிறை வீடுசெய்து, தத்தமிடங்களுக்குச் செல்லுமாறு கட்டளையிட்டனன். அன்றியும் அக்கண்ணகியின் கோயில் படித்தரங்களுக்கு வேண்டிய விளைநிலங்க ளளித்துப் பூசனைகளெல்லாம இனிதே நடந்தேறிவரும்படி செய்தனன்.

பின்னர்ச் செங்குட்டுவனுடன் பிரதிஷ்டைக்கு வந் திருந்த இலங்கையரசன் கயவாகு என்பவனும், பாண்டி யன் வெற்றிவேறசெழியனும், கொங்கிளங்கோசரும், சோ ழன் பெருங்கிள்ளியும் பத்தினிக்கடவுளைத் தொழுது, தங் கள் நாட்டகத்தும் கோயில்கொண்டு வீற்றிருந்து தங்களை

யும் தங்கள் நாட்டையும் வாழ்த்தும்படி வேண்டிக்கொண்டனர். அங்ஙனம் அவர்கள் வேண்டி நின்ற பொழுது 'தந்தேன்வரம்' என்று ஒரு தெய்வவாக்கு யாவரும் கேட்ப ஆங்கெழுந்தது. அதனால் யாவரும் மகிழ்வெய்தினர். பின்னர்ச் செங்குட்டுவன் அரசரெல்லாம் தன்னடி வணங்கியேத்த மறையவர்களுடன் பத்தினிக்கோட்டத்து யாகசாலையினுள்ளே பிரவேசித்து, எல்லாவற்றையும் இனிதே முற்றுறும்படி செய்து இன்புற்றிருந்தனன்.

இச்செங்குட்டுவனைப் பரணர் என்ற புலவர் பதிற்றுப் பத்துள் ஐந்தாம் பத்தால் பாடினார். பாடின அவருக்குச் செங்குட்டுவன் உம்பற் காட்டிலிருந்துவரும் வரும்படியையும் தன் மகன் குட்டுவஞ்சேரலையும் கொடுத்தான். தன் மகன் குட்டுவஞ்சேரலைக் கொடுத்ததன் கருத்தாவது, அவன் அவருக்கு உரிய பணிவிடைகளைச் செய்து அவரிடத்திலிருந்து கல்வி கற்றுக்கொள்ளவேண்டியே. இவ்வரசன் ஐம்பத்தையாண்டு சிம்மாசனத்தில் வீற்றிருந்து இவ்வுலகை யாண்டனன்.

"வடவ ருட்கும் வான்றோய் வெல்கொடிக்
குடவர் கோமா னெடுஞ்சேர லாதற்குச்
சோழன் மணக்கிள்ளி யீன்ற மகன்
கடவுட் பத்தினிக் கற்கோள் வேண்டிக்
கானவில் கானங் கணையிற் போகி
ஆரிய வண்ணலை வீட்டிப் பேரிசை
இன்ப லருவிக் கங்கை மண்ணி
இனந்தேரி பல்லான் கன்றொடு கொண்டு
மாறா வல்வி லிடும்பிற் புறத்திறுத்து
உறுபுலி யன்ன வயவர் வீழச்
சிறுகுரல் நெய்தல் வியலூர் நூறி

அக்கரை நண்ணிக் கொடுகூ ரெறிந்து
பழையன் காக்கும் கருஞ்சினை வேம்பின்
முரரை முழுமுதல் துமியப் பண்ணி
வாலிழை கழித்த நறுப்பல் பெண்டிர்
பல்லிருங் கூந்தன் முரற்சியால்
குஞ்சர வொழுகை பூட்டி வெந்திறல்
ஆராச் செருவிற் சோழர்குடிக் குரியோர்
ஒன்பதின்மர் வீழ வாயிற்புறத் திறுத்து
நிலைச்செருவி னாற்றலை யறுத்துக்
கெடலருந் தானையோடு
கடல்பிறக் கோட்டிய செங்குட்டுவன்''

---

# களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்

இவ் வரசன் செங்குட்டுவனுக்குத் தந்தையாகிய நெடுஞ்சேரலாதனுக்கு மற்றொரு மனைவியாகிய வேளாவிக் கோமான் பதுமன் என்பவனுடைய மகளிடத்தில் பிறந்தவன். கடம்பின் பெருவாயில் என்ற ஊருக்குரிய நன்னன் என்பவன் இச் சேரனுக்குப் பெரும்பகைவனாய்ச் சேரர்களுக் குரியதாகிய பூழி என்னும் நாட்டைக்கவர்ந்து, தன் வசம் வைத்துக்கொண் டிருந்தனன். அதனோடும் அந் நன்னன் கொடுங்கோலனாகவும் புலவர்க் கடைத்த வாயிலையுடையவனாகவும் இருந்தனன்.

அந் நன்னன் தனது சோலையின்கண் தான் நின்று மகிழ்தற்கென்றே சில மரங்களை வைத்து வளர்த்து வந்தனன். அவற்றுள் ஒரு மரத்தின் காய் ஒன்று அச்சோலைப் பக்கத்தே ஓடும் ஆற்றில் உதிர்ந்து அயலதாகிய துறை

யொன்றிற் சென்றுதங்கிற்று. அப்பொழுது அத்துறைக்கு நீராடச் சென்ற பெண்ணொருத்தி, அது அரசன் தின்பதற்குரிய காயென்றறியாது அதனையெடுத்துத்தின்று விட்டனள். அச் செய்தியைச் சோலை காவலராலறிந்த அந்நன்னன் பெருஞ்சினங்கொண்டவனாய்த் தான் தின்பதற்கென்றிருந்த அக்காயினை அப்பெண் தின்ற குற்றத்திற்காக அப்பெண்ணைக் கொலை புரிந்து விடும்படி கட்டளையிட்டனன். அது தெரிந்த அப்பெண்ணின் தந்தை தன் அருமை மகளுக்கு நேர்ந்த தண்டனையைக் கருதிக் கலங்கி, அரசனிடம் சென்று, "அரசே! எனது மகள் அக்காய் தமக்குரியதென்று அறிந்துவைத்துத் தின்றவ ளல்லள்; அவள் அறியாது தின்றுவிட்டாள். அதனைப் பொறுத்தருள்புரிய வேண்டுகிறேன். அவள் புரிந்த அக்குற்றத்திற்காக எண்பத்தொரு யானைகளையும் அவள் நிறையளவு பொன்னாற் செய்த பாவையையும் யான் தருவேன். விதித்த கொலைத் தண்டத்தை நீக்கி யருளவேண்டும்" என்று பிரார்த்தித்தான். அந்நன்னன் அவற்றைச் சிறிதும் செவிக்கொள்ளாமலும் அறத்தை நோக்காமலும், சிறிதும் இரக்கமற்றவனாய் அப்பெண்ணைக் கொலைபுரிந்தே தன் சினந் தவிர்ந்தனன்.

மேலேகூறிய வரலாறு அந்நன்னனது கொடுங்கோல் திறத்தை நன்குவிளக்கும். அத்தகைய நன்னனுடன் இவ்வரசன் மேற்றிசையிலுள்ள வாகைப் பெருந்துறை யென்னுமிடத்தில் போர்செய்து அவனைக்கொன்று, அவன் வயமாயிருந்த பூழிநாட்டைத் தன்னதாக்கிக்கொண்டனன்.

இவ்வரசன் முடிசூடுவதற்கென்று அமைக்கப்பட்டிருந்த கண்ணியும் முடியும் பகைவரால் அபகரிக்கப்பட்டு, அம்முடிசூடும் வேளைக்கு உதவாமையால் அம்முகூர்த்தம்

தவறாமல் முடிசூடவேண்டுமென்று கருதி உடனேகளங்கா யால் கண்ணியையும் நாரால் முடியையும் செய்துகொண்டு, முடிசூடுதலை நிறைவேற்றினமையால், இவனுக்கு அவ்வர லாறுபற்றிக் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் என்னும் பெயர் வழங்குவதாயிற்று.

இவ்வரசனைக் காப்பியாற்றுக் காப்பியனார் என்னும் புலவர் பதிற்றுப்பத்துள் நான்காம் பத்தாற் பாடினார். பாடிய அவருக்குப் பரிசிலாக நாற்பது நூறாயிரம் பொன் ஒருங்கு கொடுத்துத் தான் ஆள்வதிற் பாகமுங் கொடுத் தான் அக்கோ. இக் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல் இருபத்தையாண்டு அரசாட்சிச் செல்வத்தில் வீற்றிருந் தான்.

"ஆராத் திருவிற் சேர லாதற்கு
வேளாவிக் கோமான்
பதுமன் றேவி யீன்ற மகன்முனை
பனிப்பப் பிறந்து பல்புகழ் வளர்த்
தூழி ளுகிய வுயர்பெருஞ் சிறப்பிற்
பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ
உருள்பூங் கடம்பின் பெருவாயில் நன்னனை
நிலைச்செருவி ளுற்றலை யறுத்தவன்
பொன்படு வாகை முழுமுதல் தடிந்து
குருதிச் செம்புனல் குஞ்சர மீர்ப்பச்
செருப்பல செய்து செங்களம் வேட்டுத்
துளங்குகுடி திருத்திய வளம்படு வென்றிக்
களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்"

---

# ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்.

இவ்வரசன், முன்னர்க் கூறிய களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலின் உடன் பிறந்தவன். எனவே, நெடுஞ் சேரலாதனுக்கு, வேளாவிக்கோமானுன பதுமன் என்பவனுடைய மகளிடத்துப் பிறந்தவனுவன். இவன் மற்றைச் சேரவரசர்கள் போலவே செங்கோலாற் சிறந்தவன். இவன் தன்னுட்டிலுள்ள வருடையை (மலையாடுகளை) ஆரியாவர்த்தத்தை யடுத்துள்ள தண்டாரணியம் அல்லது தண்டகநாட்டில் வாழ்வார், கவர்ந்துகொண்டு செல்ல, இவன் படையெடுத்துச் சென்று, அவர்களை வென்று அவ்வருடையைத் தொண்டி யென்னும் தன் நகரத்திற்குத் திருப்பிக்கொண்டு மீண்ட வீரம்பொருந்தியவன். அதுபற்றி இவன் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்று பெயர் வழங்கப்பெற்றுன். இவ்வரசன் நான்மறையாளர்களுக்குப் பசுக்களையும் குடநாட்டின் கண்ணுள்ள ஒரூரையும் தானம்செய்து களித்தவன். தாயர் தம் குழந்தைகளைக் காப்பதுபோலத் தன்னுட்டுக்குடிகளைக் காத்தவன்.

இவ்வரசனைக் காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்னும் பெண்பாற் புலவர் பதிற்றுப்பத்துள் ஆறும்பத்தால் பாடியுள்ளார். அங்ஙனம் அவர் பாடியதற்குப் பரிசிலாக அப்பெண்பாற் புலவர் ஆபரணம் செய்வித்து, அணிந்துகொள்வதற்காக ஒன்பது கா (ஒரு பழைய நிறையளவுப்பெயர்)ப் பொன்னும் நூறுயிரம் காணமும் (பொற்காசு) கொடுத்ததுமன்றி அவரைத் தன் பக்கத்தில் வீற்றிருக்கவென்று கூறித் தனக்குச்சரியான ஆசன

மும் கொடுத்தான். இவ்வாடுகோட்பாட்டுச் சேரலாதன், முப்பத்தெட்டு யாண்டு அரசு வீற்றிருந்தான்.

"குடக்கோ நெடுஞ்சேர லாதற்கு வேளள்
ஆவிக் கோமான் தேவி யீன்றமகன்
தண்டா ரணியத்துக் கோட்பட்ட வருடையைத்
தொண்டியுட் டந்து கொடுப்பித்துப் பார்ப்பார்க்குக்
கபிலையொடு குடநாட் டோரூ ரீத்து
வானவ ரம்பனெனப் பேரினிது விளக்கி
ஏனை மழவரைச் செருவிற் சுருக்கி
மன்னரை யோட்டிக்
குழவி கொள்வாரிற் குடிபுறந் தந்து
நாடல் சான்ற நயனுடை நெஞ்சின்
ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்"

---

# செல்வக்கடுங்கோ வாழியாதன்.

——(*)——

இவ்வரசன் அந்துவஞ்சேரல் இரும்பொறை என்னும் சேரவரசனுக்குப் பொறையன் பெருந்தேவி என்னும் மனைவியிடத்துப் பிறந்தவன். இவன் வேளாவிக்கோமான் பதுமன் என்பவனுடைய மற்றொருமகளை மணஞ்செய்து கொண்டவன். எனவே, இவனும் நெடுஞ்சேரலாதனும் சகல முறையுள்ளவராக ஆகவேண்டும்.

இவன் பாரி யென்பவனைப் போலவே பெருங்கொடையாளனாய் விளங்கினவன். பாரியிறந்த பிறகு அவனுடைய மகளிரைக் கபிலர் என்னும் புலவர், அழைத்துக்கொண்டு சென்று பார்ப்பார் சிலரிடத்து அடைக்கல

மாக ஒப்பித்துவிட்டுப் பாரியின் குணங்களனைத்தும் இச் செல்வக்கடுங்கோவிடம் விளங்குகின்றது என்று கேள்வியுற்று, அவனை யடைந்தனர். அவன் அவருக்கு வேண்டிய சிறப்புக்களைச்செய்து, தன்னிடம் வைத்துக்கொண்டனன். அப்பொழுது அக்கபிலர் பதிற்றுப்பத்துள் ஏழாம் பத்தை அவன்மேற் பாடினர். அங்ஙனம் பாடிய அவருக்குத் தனக்குரிய நாடு நகரம் முதலிய எல்லாவற்றையும் கொடுத்தாலும் தகுந்த கொடையாகாது, ஆயினும் ஏதோ சிறிது கொடுத்ததாக இருக்கட்டும் என்று கருதிச் சிறுகொடையாக நூறாயிரம் காணம் கொடுத்ததோடு நன்றா என்று பெயர்வாய்ந்த மலையின்மேல் அவனும் புலவரும் ஏறி நின்று கண்ணிற்கண்ட நாடெல்லாம் புலவர்க்குக் காட்டிக் கொள்க எனக்கொடுத்தான். இங்ஙனம் அவன் ஏறி நாட்டைக்கண்ட அம்மலைக்கு நாடுகாண் நெடுவரை என்று பெயர் வழங்குவதாயிற்று.

இங்ஙனம் செல்வக் கடுங்கோ பெருங் கொடையாளனாக விளங்கியதோடு, மிக்க வீரமுடையவனாகவும், பல வேள்விகளைச் செய்தவனாகவும், மிக்க அறமுடையவனாகவும் விளங்கினன். இவன் திருமால் பக்தியிற் சிறந்தவன். இவன் திருமால் கைங்கரியங்கள் செவ்வனே நடைபெறுவதற்காக ஓகந்தூர் என்ற ஓரூரை மானியமாக விட்டனன். இச்செல்வக் கடுங்கோ வாழியாதன் இருபத்தைந்தாண்டுகள் அரசாண்டனன்.

"மடியா வுள்ளமொடு மாற்றோர்ப் பிணித்த
நெடுநுண் கேள்வி யந்துவற் கொருதந்தை
ஈன்றமகள் பொறையன் பெருந்தேவி யீன்றமகன்
நாடு பதிபடுத்து நண்ணா ரோட்டி
வெருவரு தானைகொடு செருப்பல கடந்து

ஏத்தல் சான்ற இடனுடை வேள்வி
யாக்கிய பொழுதி னறத்துறை போகி
மாய வண்ணனை மன்னுறப் பெற்றவற்
கோத்திர நெல்லின் ஒகந்தூ ரீத்துப்
புரோசு மயக்கி
மல்ல லுள்ளமோடு மாசற விளங்கிய
செல்வக்கடுங்கோ வாழியாதன்"

# பெருஞ்சேர லிரும் பொறை.

—(*)—

இவ்வரசன் மேலே கூறிய செல்வக் கடுங்கோவுக்கு வேளாவிக் கோமான் பதுமன் என்பவனுடைய மகளிடத்துப் பிறந்தவன். இவன் தாயாரும், களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆகிய இவ்விருவருடைய தாயாரும் உடன்வயிற் றுதித்தோராவர்.

இவ்வரசன், தகடூர் என்ற ஊரிலிருந்து அரசாண்ட அதியமான்நெடுமான் அஞ்சிமேற் படையெடுத்துச்சென்று, அவனது தகடூரை எறிந்து கைக்கொண்டனன். கடையெழுவள்ளல்களி லொருவனாகிய எழினியென்பவன் அவ்வதியமானே. அவ்வதியமான் தமிழ்நாட்டு மூவேந்தரையும் மற்றைச் சிற்றரசர்களையும் வென்று புகழ்படைத்தவன். இவனை ஔவையார் பரணர் முதலிய புலவர் பெருமக்கள் புகழ்ந்து பாடியுள்ளார்கள். இத்தகைய புகழ்வாய்ந்தவனைப் பெருஞ்சேர லிரும்பொறை வென்று தொலைத்து, அவனது தகடூரைக் கைப்பற்றினன் என்றால் இவ

னது வீரத்தை விளம்பயாவரால் முடியும்? இத் தகடூர்ப் போரைப்பற்றிக் கூறும் நூலே தகடூர் யாத்திரை யென்பதாம். இவ்விரும் பொறையினது படை மிக்க பெருமை வாய்ந்தது என்று புலவர்கள் பாராட்டிக் கூறியுள்ளார்கள். அப்பாடல்,

"எனைப்பெரும் படையனோ சினப்போர்ப் பொறையன்
என்றனி ராயி னறுசெல் வம்பலிர்
மன்பதை பெயர வரசுகளத் தொழியக்
கொன்றுதோ ளோச்சிய வென்றாடு துணங்கை
மீபிணத் துருண்ட தேயா வாழியிற்
பண்ணமை தேரு மாவு மாக்களும்
எண்ணற் கருமைய னெண்ணின் றேவிலனே
கந்துகோ ளீயாது காழ்பல முருக்கி
யுகக்கும் பருந்தி னிலத்துநிழல் சாடிச்
சேணபரன் முரம்பி னீர்ம்படைக் கொங்கர்
ஆபரந் தன்ன செலவிற்பல்
யானை காண்பலவன் றானையானே"

என்பதாம். இதன் கருத்தாவது—"வம்பலிர் பொறையன் எனைப்பெரும் படையன் என்றனிராயின், அவன் தானையிடத்துத் தேரும் மாவும் மாக்களும் எண்ணற்கருமையின் எண்ணிற்றிலன்; ஆயின், அவன் தானையின் யானைதான் எண்ணினையோ எனின், அதுவும் எண்ணினே னல்லேன்; கட்புலனுக்கு வரையறைப்பட்டது போல ஆபரந்தாலொத்த செலவிற்பல யானையை அவன் தானையானே காண்பல்" என்பதாம்.

இன்னும் பெருஞ்சாரணெய்திய கழுவுள் என்று பெயர் வாய்ந்த சிற்றரசனொருவன் இடையர்களுக்குத் தலைவனாய்

இவ்வரசனுக்குப் பகைவனாயிருந்தனன். அவன் இவனுக்குத் திறைகொடாமலேயிருந்தனன். அதனால் இவன் அக்கழுவுள் என்பவன் மேல் வெகுண்டு சென்று அவனைத் தொலைத்தனன். இங்கே கூறிவருகின்ற சேரவரசர்கள் யாவருமே வீரம்பொருந்தியவர்களாகக் கூறப்பட்டாலும், இவனும் செங்குட்டுவனுமே மிக்க வீரம் பொருந்தியவர்களாகப் புகழ்ந்து கூறப்பட்டுள்ளார்கள்.

அரசர்களுக்கு வீரமுரசம் கொடைமுரசம் மணமுரசம் என மூவகை முரசங்களுண்டு. அம்முரசங்களை அததற்குரிய காலங்களில் முழக்குவது வழக்கம். அம்முரசங்களுக்கு என்று தனித்தனியாக இடமமைத்து அவ் விடங்களில் ஆசனங்களையிட்டு அவற்றின் மேல் அம்முரசங்களை வைத்து அரசர்கள் போற்றிவருவார்கள். அங்ஙனமே இப்பெருஞ்சேரலிரும்பொறையும் தான் சென்று பொருதபல போர்களிலும் முழக்கப்பட்டுத் தனக்கு வெற்றியளித்த தனது வீரமுரசத்தினைச் சிறப்புச் செய்வதற்காக அது வைக்கப்பட்டிருந்த கட்டிலிலிருந்து அதனை யெடுத்துப் போய் நீராட்டிவருமாறு ஏவல்வினையருக்குக் கட்டளை யிட்டனன். அவர்கள் அங்ஙனமே அதனை நீராட்டிவர எடுத்துப் போயினர். அவ்வேளை அவ்வரசனிடம் வந்திருந்த மோசுகீரனார் என்னும் புலவர், அம்முரசம் வைத்திருந்த கட்டிலை முரசுகட்டில் என்று அறியாது அதன்மேல் ஏறிப் படுத்து உறங்கிவிட்டனர். அவர் உறங்கிய சிறிது பொழுது கழித்து அவ்விடம் சென்ற பெருஞ்சேரலிரும் பொறை, புலவர் அயர்ந்து உறங்குவதுகண்டு, அவர் வீரமுரசம் ஏற்றுவதற்குரிய கட்டிலின்கண் உறங்குகின்றாரே என்று அவரிடம் சினம்கொள்ளாமல் மகிழ்ந்து, அத்தகைய தமிழ்ப்புலவர்க்குத் தான் ஏதாவது தொண்டு

செய்யவேண்டும் என்று கருதிச் சாமரையை எடுத்து வந்து அவர் துயிலெழுந்துணையும் வீசிக்கொண்டிருந்தனன். அப்பொழுது புலவர் விழித்தெழுந்து தம்மருகில் நின்று அரசன் வீசுவதையும், தாம் முரசு கட்டிலென்று அறியாது ஏறித்துயின்றமையையும் கருதி வருந்திக் கீழே இறங்கி அரசனுக்குத் தமிழின்மீதுள்ள ஆர்வத்தைப் பாராட்டி அவனை நோக்கிக் "குற்றந்தீர வலித்துப்பிணித்த வாரப்பட்ட வாரையுடைய கருமரத்தாற் செய்தலான் இருட்சி பொருந்திய பக்கம் பொலிவுபெற மயிலினது தழைத்த நெடிய பீலியால்தொடுக்கப்பட்ட ஒள்ளிய பொறியை யுடைத்தாகிய நீலமணி போலும் நிறத்தையுடையதாரைப் பொற்றளிரையுடைய உழிஞையுடனே பொலியச் சூட்டப்பட்டுக் குருதிப் பலிகொள்ளும் விருப்பத்தையுடைய உட்குப் பொருந்திய வீரமுரசம் நீராடி வருவதன் முன்னே எண்ணெயினது நுரையை முகந்தாற் போன்ற மெல்லிய பூவையுடைய கட்டிற் கண்ணே, இதனை முரசு கட்டிலென்பது அறியாது ஏறிக்கிடந்த என்னை வெகுட்சிதோன்ற இருகூறுக்கும் நின்னுடைய வாளை வாயை மாற்றியதாகிய அதுவும் அமையும், நல்ல தமிழ் முழுதும் அறிந்தமைக்கு; அவ்வெகுட்சியொழிந்து அதனானும் அமையாதே குறுகவந்து நினது வலியையுடைய முழவுபோலும் தோளையெடுத்துச் சாமரத்தால் குளிர வீசினாய்; இவ் வகன்ற உலகத்தின் கண்ணே பரக்கும் பரிசு இவ்வுலகைத்துப் புகழுடையோர்க் கல்லது அவ்விடத்ததாகிய உயர்ந்த நிலைமையையுடைய உலகத்தின்கண் உறைதலில்லைமையைத் தெரியக்கேட்ட பரிசாலேயோ? வெற்றி பொருந்தப்பட்ட தலைவா, நீ இவ்விடத்து இச் சாமரையை வீசுதல் அதற்குக் காரணம் சொல்லுவாயாக" என்று புகழ்ந்து கூறினார்.

இங்ஙனம் இவன் தனது முரசுகட்டிலேறிய புலவரிடத்து அளிசுரந்தது ஒரு வியப்பன்று; தனது அரசு கட்டிலேயே (சிங்காதனம்) மற்றொரு புலவர்க்கு வழங்கிய பெருவள்ளலன்றோ இவன். அவ்வரலாறு:— இப்பெருஞ்சேர லிரும்பொறையை அரிசில்கிழார் என்னும் புலவர் பதிற்றுப்பத்துள் எட்டாம் பத்தால் பாடியுள்ளார். அங்ஙனம் பாடிய அவருக்கு அவ்வரசன் தானும், தன்னரமனையிலுள்ள பரிவாரங்களும் வெளியில் வந்து நின்று கொண்டு, அரிசில்கிழாரை நோக்கிப் புலவரே! அரமனையிலுள்ள வெல்லாம் நீர்கொள்க; என்றுகூறி ஒன்பது நூறுயிரம் பொற்காசு கொடுத்ததோடு, தனது சிங்காதனமாகிய அரசுகட்டிலையும் அவருக்குக்கொடுத்து அதில் அவர் வீற்றிருந்து அரசாளுமாறும் வேண்டினன். அவற்றையெல்லாம் ஏற்றுக்கொண்ட அப்புலவர் அரசுகட்டிலே மட்டுப் ஏற்றுக்கொள்ளாமல், அதில் அரசன் வீற்றிருந்து அரசாளவேண்டும் என்று மிகவும் இரந்து வேண்டிக் கொண்டார். அவர் மிகவும் இரந்து வேண்டிக்கொண்டதால் அரசன் அரசுகட்டிலைப்பெற்று அரசாண்டனன். அவ்வரசனுக்கு அரிசில்கிழார் அமைச்சராக அமர்ந்து விளங்கி ஆராய்ச்சித் துணைவராயிருந்தனர். தகடூர் எறிந்த இப்பெருஞ் சேரலிரும்பொறை பதினேழு யாண்டு அரசாண்டனன்.

"பொய்யில் செல்வக் கடுங்கோ வுக்கு
வேளாவிக் கோமான் பதுமன்றேவி யீன்றமகன்
கொல்லிக் கூற்றத்து நீர்கூர் மீமிசைப்
பல்வேற்றானை யதிகமானேடு
இருபெரு வேந்தரையும் முடனிலை வென்று
முரசும் குடையும் கலனுங் கொண்டு

உரைசால் சிறப்பி னடுகளம் வேட்டுத்
துகடீர் மகளி ரிரங்கத் துப்பறுத்துத்
தகடூர் எறிந்து நொச்சிதந் தெய்திய
அருந்திற லொள்ளிசைப்
பெருஞ்சேர லிரும்பொறை"

---

# இளஞ்சேரலிரும்பொறை.

இவ்விளஞ்சேரலிரும்பொறை யென்னுமரசன் மேலே கூறிய தகடூர் எறிந்த பெருஞ் சேர லிரும்பொறைக்கு மையூர் கிழானது மகள் வேண்மாள் அந்துவஞ் செள்ளை யிடத்துப் பிறந்தவன். பொத்தியென்னும் ஊரிலிருந்து ஆண்ட கோப்பெருஞ்சோழனையும், வித்தை என்னும் ஊரையாண்ட இளம் பழையன்மாறன் என்பவனையும் இவ் வரசன் போரில் வென்றுள்ளான். அதுவுமன்றி வேறு சோழ பாண்டிய அரசர்களுடன் சேர்ந்துள்ள விச்சி என்னும் குறுநிலமன்னன் ஐந்து கோட்டைகளையுடையவனா யிருந்தான். அவ்விச்சி என்பவனையும் அவனுடன் சேர்ந்துள்ள இருபெரு வேந்தரையும் தொலைத்து, அவ்விச்சியினது ஐந்து எயில்களையும் எறிந்து நாசப்படுத்தினன்.

இவன் தனக்கு மகட் கொடுத்த மையூர்கிழானை அமைச்சனாகக்கொண்டு அவனைப் புரோகிதன் அறிந்துள்ள அறிநெறிகளையெல்லாம் அறிந்துகொள்ளும்படி செய்தான். சாஸ்திரங்களில் சொல்லியவண்ணம் தெய்வங்களைப் பேணியவன்.

இவனைப் பாடிப் பரிசில் பெறலாம் என்று பெருங் குன்றூர் கிழார் என்னும் புலவர் கருதி இவன்மேல் பதிற்றுப்பத்துள் ஒன்பதாம் பத்தைப் பாடினர். அதனைக் கேட்ட அரசன் அப்புலவருக்கு ஒன்றும் பரிசில் நல்காமலே நீடித்தநாள் தன சமஸ்தானத்தில் வைத்துக்கொண்டிருந்து அவர் அறியாமலே, அவருக்கென்று ஊரும் அதில் சிறந்த மனையும் மனைக்குத்தக்க வளங்களும், ஏரும், இன்பந்தரு பொருள்களும், எண்ணற்காகா அருங்கல வெறுக்கைகளும், இன்னும் வேண்டியவற்றை யெல்லாம் இயல்வரப் பரப்பி யமைத்து வைத்து, அவரைத் தன் சமஸ்தானத்திலிருந்து வறிதே செல்லுமாறு அனுப்பினன். அப்பொழுது புலவர் அவனை நோக்கி:—

"உயிர்ப் பன்மையைக் காக்கும் நினது உயர்ச்சியைப் பாராது, காதல் கண்மாறிய அறமில்லாத பார்வையுடனே கூடி நம்போல்வார் யாவரும் இதற்கொத்த அறிவையுடையவராய் அருள் மாறுவாராயின் எம்போல்வார் இவ்வுலகத்துப் பிறவா தொழியக்கடவர்; குற்றந்தீர்ந்த கற்பினையுடையளாய் எம்மை விரும்பிய காதலி இறந்துபடாது உயிர்வாழ்வுடையாளாகக்கூடின் எம்மிடத்து வினையாதிருத்தல் அரிது; அதனால், அறனில்லாத கூற்றம், திறப்பாடின்றி உயிர்கொளத்துணிய இறந்து பட்டான் கொல்லோ? என்னுயிர் கெடுவதாக வென்று சொல்லுதலுற்ற நோயையுடையாளாய்ப் பலபட வெறுத்துறையும் மனைவியது துன்பம் தீர்க்கவேண்டி இப்பொழுதே விடைகொண்டேன், வாழ்வாயாக; இறைவ, இதனைப் பாராய்; இன்னாமையையுடைய நெஞ்சத்துடனே போவேன், நின்னை வெகுண்டாரது அணுகுதற்கரிய காவலையுடைய முனை

யிடத்து அரணைப்போலப் பெரிய செயலற்ற எனது வறு மையை முன்போகவிட்டு"

என்னும் கருத்துள்ள செய்யுளைக் கூறிவிட்டுத் தம் மூர்நோக்கிச் சென்றனர். சென்றவர் தமக்காக அவ்விளஞ் சேரலிரும்பொறை என்னும் அரசன் அமைத்து வைத் துள்ள பலவகை வளங்களையும் கண்டு மிக்க மகிழ்ச்சி கொள்வாராயினர். இவருக்கு இன்னும் அவ்வரசன் "மரு ளில்லார்க்கு மருளக்கொடுக்க" என்று முப்பத்திராயிரம் காணமும் கொடுத்தான். இக்குடக்கோ இளஞ்சேரலிரும் பொறை பதினாறாண்டு அரசாட்சி செய்தனன்.

"குட்டுவ னிரும்பொறைக்கு மையூர் கிழாஅன்
வேண்மா ளந்துவஞ் செள்ளையீன்ற மகன்
வெருவரு தானையொடு வெய்துறச் செய்துசென்று
இருபெரு வேந்தரும் விச்சியும் வீழ
வருமிளைக் கல்லகத் தைந்தெயி லெறிந்து
பொத்தி யாண்ட பெருஞ்சோ ழனையும்
வித்தை யாண்ட விளம்பழையன் மாறனையும்
வைத்த வஞ்சினம் வாய்ப்ப வென்று
வஞ்சி மூதூர்த் தந்துபிறர்க் குதவி
மந்திர மரபிற் றெய்வம் பேணி
மெய்யூ ரமைச்சியன் மையூர் கிழானைப்
புரையறு கேள்விப் புரோசு மயக்கி
அருந்திறன் மரபிற் பெருஞ்சதுக் கமர்ந்த
வெந்திறற் பூதரைத் தந்திவண் நிறீஇ
யாய்ந்த மரபிற் சாந்தி வேட்டு
மன்னுயிர் காத்த மறுவில் செங்கோல்
இன்னிசை முரசினிளஞ்சேர லிரும்பொறை.

# தொண்டைமான் இளந்திரையன்.

"கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றாய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்—வெஞ்சினவேல்
கான்பயந்த கண்ணிக் கடுமான் திரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு"

சேர பாண்டிய சோழவரசர்களும் மற்றச் சிற்றரசர்களும் இதற்குமுன் கூறப்பட்டது போலத் தமிழ் நாட்டின் (சோழநாட்டின்) மற்றொரு பகுதியாக விளங்கிய தொண்டைநாட்டரசன் சரிதம் இதில் கூறப்படுகின்றது.

மேலே காட்டப்பட்டுள்ள பாடலில் திரையன் என்னும் அரசனைக் கடல் தான் பெற்றெடுத்த களிப்பால் இரவும் பகலும் உறங்காமல் ஆர்ப்பெடுத்துக் கொண்டிருக்கிறது என்று குறிக்கப்பட்டுள்ளது. அதாவது தொண்டைமானிளந்திரையன் கடலிலிருந்து தோன்றினன் என்பது அதன் கருத்தாம். அவன் கடலிற் றோன்றிய வரலாறு:—

"சோழநாட்டைக் கரிகாலனுக்குப் பின்னர் ஆண்டவன் நெடுமுடிக்கிள்ளி என்பவன் ஆம். அவன், ஒருகால் இளவேனில் பருவத்தில் கடற்கரைச் சோலையை யடைந்து வெயிலின் கொடுமையைத் தணித்துக் கொள்வானாயினன். அங்ஙனம் அவன் அங்கே தங்கியிருக்குங்காலை அவ்விடத்திலுள்ள பூஞ்சோலையில் தமியளாகப் பெண்ணொருத்தி நிற்கக்கண்டு, அவளை இன்னள் என்று அறியாமல் அரசன் அவளழகில் ஈடுபட்டு, அவளிடத்து இச்சை கொண்டனன். அவளும் அரசனிடத்து ஈடுபட்டுத் தான் இன்னள் என்று தெரிவிக்காமலே அவன் கருத்திற்கு

இணங்கினள். அவ்விருவரும் அச்சோலையில் ஒருமாதம் வரையிலும் இன்பமனுபவித்தனர். பின்னர் ஒருநாள் அப் பெண்மணி அரசனுக்கு அறிவிக்காமலே அவனைவிட்டகன் றனள். தன்னை விட்டு நீங்கிய அவ்வணங்கை நெடுமுடிக் கிள்ளி பலநாளளவும், அச்சோலையிலும் அதன் புறங்களி லும் தேடிக்கொண்டிருந்தனன். அப்பொழுது ஆகாயவழி யே திரியும் சாரணன் ஒருவன் தோன்ற அவனை அரசன் வணங்கி, "அடிகளே! என்னோடு ஒரு மாதம் வரையும் சேர்ந்திருந்து இப்பொழுது என்னைவிட்டு நீங்கிய பெண் கள் நாயகத்தைத் தேவரீர் கண்டதுண்டா" என்று வினவினன்.

அதனைக்கேட்ட அச்சாரணன், "மன்னவனே! இப்பொ ழுது அப்பெண்ணைக் காணேனாயினும், அவளை நான் முன் னரேயறிந்துள்ளேன். நீ அவள் வரலாற்றைக்கேட்பாயாக:-

அவள் நாகநாட்டை நடுக்கின்றி யாள்பவனாகிய வளை வணன் என்னும் அரசனுக்கு அவன் மனைவி வாசமயிலை என்பவளிடத்தில் பிறந்தவள். அவ்வணங்கின் பெயர் பீலி வளை என்பதாம். அவள் பிறந்த காலத்து நாகநாட்டரச னாகிய வளைவணன் சோதிடர்களைக்கூவிப் பீலிவளைக்கு ஜாதகம் கணிக்குமாறு கூறினன். அவர்கள், அப்பெண் பிறந்த வேளையை நன்றாக ஆராய்ந்து பார்த்து வளைவணனை நோக்கி, 'அரசனே! இக்குழந்தை மங்கைப்பருவத்தை யடைந்தபிறகு, சூரியகுலத்தரசன் ஒருவனோடு சேர்ந்து, கருப்பமுற்றுத் திரும்பி இவ்விடம் வந்துசேருவாள். இவள் வயிற்றில் பிறக்கும் குழந்தை சூரியகுலத்தரசனாகி விளங்கு வான்' என்று எடுத்துரைத்தனர். அவ்வண்ணமே அவ்வளை வணன் புதல்வி பீலிவளை யென்பவள் நின்னோடு சேர்ந்தி ருந்து கருவுற்றுத் தன்னாடு சென்றனள். இனி அவள்

பெற்ற புதல்வன் வருவானேயன்றி அவள் வாராள்.'' என்று கூறிச் சென்றனன். பின்னர் நெடுமுடிக்கிள்ளி ஒருவாறு தேறிப் புதல்வன் வருதலில் புத்திசெலுத்தி யிருந்தனன்.

இஃதிங்ஙனமாக, நாகநாடு சென்ற பீலிவளை யென்பவள், கருப்பம் முதிர்ந்து கருவுயிர்த்தனள். அக்குழந்தையும் பிறைச்சந்திரன் போல வளர்ந்து தக்கபருவத்தை யடைந்தது. அதனைக்கண்ட பீலிவளை அப்புதல்வனைத் தந்தையிடம் சேர்க்கக் கருதியிருந்தனள்.

அங்ஙனம் கருதியிருந்தவள் ஒருநாள் நாகநாட்டிலிருந்து தன் புதல்வனுடன் மணிபல்லவத்தை யடைந்திருந்தனள். அப்பொழுது அங்கே கம்பளச்செட்டி என்பவன் தேசாந்தரங்களுக்கெல்லாம் தன் கப்பலுடன் சென்றிருந்து, காவிரிப்பூம் பட்டினத்திற்குச் செல்பவன், வந்தனன். பீலிவளை அவன் காவிரிப்பூம் பட்டினம் செல்பவன் என்றறிந்து, தன்னுடைய புதல்வனை அவனுக்குககாட்டி, ''செட்டியே! இவன் மன்னவன் மகனும்; இவனைக் காவிரிப்பூம் பட்டினத்தில் மன்னவனிடத்தில் சேர்த்துவிட வேண்டும்'' என்று கூற அவன் தனது மன்னவன் மகனை அழைத்துக்கொண்டு செல்லும்பேறு தனக்குக் கிடைத்ததே என்று உவகை யெய்தி அம்மகனையும் மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டு, மணிபல்லவத்திலிருந்து காவிரிப்பூம் பட்டினத்தை நோக்கிக் கலத்தைச் செலுத்தினன். கலம் புறப்பட்ட அன்றை யிரவு அது பெரும்பாலும் காவிரிப்பூம் பட்டினத்தை நெருங்கின வளவில் யாது காரணத்தாலோ அக் கலம் சிதைவுற்றது. அப்பொழுது அதிலிருந்தாரிற் பலர் நீரில் மூழ்கி யிறந்தனர். சிலர் மரத்துண்டுகளைப் பற்றி நீந்திக் கரையேறினர்.

அங்ஙனம் கரையேறியவர்கள் அரசனையணுகி, அவனுடைய மகன் கம்பளச்செட்டி கலத்தில் வந்ததும் கலம் சிதைவுற்றதும், மன்னவன் மகன் காணுமற் போனதும் ஆகிய வரலாற்றைக் கூறினர். அதுகேட்ட மன்னவன் தன் மகனுற்றதற்குப் பொருமல் அம்மகனைக் கானலும் கடலும் கரையும் முதலிய விடங்களில் தேடத்தொடங்கினன்'' என்பது வரை மணிமேகலையில் கூறப்பட்டுள்ளது. பெரும் பாணாற்றுப் படையில்,

“இருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் புறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபின் உரவோ னும்பல்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கும்
முரசு முழங்கு தானை மூவருள்ளும்
இலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பின்
அல்லது கடிந்த அறம்புரி செங்கோல்
பல்வேல் திரையன்”

என்னும் அடிகளுக்கு “அகன்ற இடத்தையுடைய உலகத்தில் நிலைபெற்ற உயிர்களைப்புரக்கும் முரசு முழங்குகின்ற நாற்படையினையுமுடைய சேர சோழ பாண்டியர் என்னும் மூவரினும், விளங்குகின்ற நீரையுடைய கடலிடத்துப் பிறந்த சங்கில் மேலாக உலகம் கூறும் வலம்புரிச் சங்கையொத்த குற்றம் நீங்கும் தலைமையினையும், மறத்தைப்போக்கின அறத்தை விரும்பின செங்கோலினையுமுடைய பெரிய நிலத்தையளந்த திருவாகிய மறுவையணிந்த மார்பினையுடைய கடல்போலும் நிறத்தையுடையவன் பின்னிடத்தோனாகிய சோழன் குடியிற்பிறந்தோன்; அக்கடலின் திரைகொண்டுவந்து ஏறவிட்ட மரபால் பல

வேற்படையினையுடைய திரையன் என்னும் பெயரையுடையவன்'' என்று நச்சினார்க்கினியர் உரையெழுதித் திரையன் என்பதற்கு 'நாகப்பட்டினத்துச் சோழன் பிலத்து வாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த காலத்து அவள் யான் பெற்ற புதல்வனை என் செய்வேன் என்ற பொழுது, தொண்டையை (ஆதொண்டைச் செடி) அடையாளமாகக் கட்டிக்கடலிலேவிட அவன் வந்து கரை பேறின் அவற்கு யான் அரசவுரிமையை யெய்துவித்து நாடாட்சி கொடுப்பல் என்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின், திரையன் என்று பெயர் பெற்றகதை கூறினார்'' என்று விசேடவுரை யெழுதியுள்ளார்.

மணிமேகலையில் கூறப்பட்டதையும் நச்சினார்க்கினியர் திரையன் என்பதற்கெழுதிய விசேடவுரையையும் ஒத்திட்டுப் பார்த்தால், "சோழவரசனொருவன் நாககன்னிகையோடு சேர்ந்த காலத்து அவள் யான் பெறும் புதல்வனுக்கு அரசாட்சியுரிமை தரவேண்டும் என்று கேட்ப, அவன் அடையாளமாகத் தொண்டைக்கொடியை அம் மகனுக்கு அணிந்துவிட்டால் அவனை என்மகன் என்று கண்டு அவனுக்கு உரிமை நல்குவேன் என்று கூறிய சங்கேதப்படி அவள் தான்பெற்ற புதல்வனுக்கு அக்கொடியை யணிந்து, மரக்கலத்தில் ஏற்றியனுப்ப, மரக்கலம் சிதைந்து அதிலுள்ளார் பலவாறு சென்று கரையேறினர். அவர்கள் அரசகுமரனைக் காணவில்லை. இது அரசனுக்குத் தெரியவர அவன் தன் மகனைக் கடற்கரை சென்று தேடுவானாயினன். அப்பொழுது மகன் காணப்படாமல், சின்னாளுக்கெல்லாம் அவன் தொண்டைக் கொடியுடன் தோன்றிக் கப்பல் சிதைவுற்ற பிறகு தான்

அலையால் ஒதுக்கப்பட்டுக் கரையேறித் தப்பிப்பிழைத்து வந்தமையைக் கூறினன். அதுபற்றி அரசன், தன் மகன் கலத்தால் தரப்படாமல் திரையால் தரப்பட்டமையால் திரையன் என்றும் தொண்டைக்கொடி யணிந்திருந்தமை யால் தொண்டைமான் என்றும் பெயர்வைத்து, அவனுக்குத் தன் நாட்டின் வடபாற் பகுதியை யளித்து, ஆண்டுவருமாறு கட்டளையிட்டனன். தொண்டைமான் ஆண்டமையால் அம்மண்டலத்திற்குத் தொண்டைமண்டலம் என்று பெயர் வழங்குவதாயிற்று. இவனும் தொண்டைமானிளந்திரையன் என்றும் பெயர் பெற்றனன்" என்று கருதவேண்டி வருகின்றது.

இத்தொண்டைமானிளந்திரையன், மிக்க வீரம் பொருந்தியவன். புலவர் பாடும் புகழுடையோன். இவன்மேல், கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படை பாடியுள்ளார். இவன் பாடுதலில் வல்லவன். உலகாளு முறையை நன்கறிந்தவன். அம்முறையை யாவர்க்கும் புலப்படுத்த வேண்டி, அதனைச் செய்யுளிலமைத்துப் பாடியுள்ளான். அப்பாடல்:—

"கால்பார் கோத்து ஞாலத் தியக்கும்
காவாற் சாகா டுகைப்போன் மாணின்
ஊறின் றாகி யாறினிது படுமே
உய்த்தல் தேற்றா னாயின் வைகலும்
பகைக்கூ ழள்ளற் பட்டு
மிகபஃ றீநோய் தலைத்தலைத் தருமே"

என்பதாம். இதன் பொருள்; "உருளையையும் பாரையும்கோத்து உலகின்கண்ணே செலுத்தும் காப்புடைய சகடந் தான் அதனைச்செலுத்துவோன் மாட்சிமைப்படின் ஊறுபாடில்லையாய் வழியே யினிதாகச் செல்லும்; அவன்

அதனை இனிதாகச் செலுத்துதலைத் தெளியமாட்டானு யின், அது நாடோறும் பகையாகிய செறிந்த சேற்றிலே யழுந்தி மிகப் பல தீயதுன்பத்தை மேலுமேலு முண்டாக்கும்" என்பதாம். இதனால் இவன் அரசாட்சியின் செவ்வி விளங்கும்.

——(*)——

# சோழன் செங்கணன்.

"தளவ ழிக்குநகை யாளிழி பிலத்தின் வழியே
தனிந டந்துரகர் தங்கண்மணி கொண்ட வவனும்
களவ ழிக்கவிதை பொய்கையுரை செய்ய வுதியன்
காலவ ழித்தளையை வெட்டியர சிட்ட வவனும்"

இச்செய்யுள், மேலே கூறிய வரலாற்றையும் இனிக் கூறப்படும் வரலாற்றையும் தழுவிக்கொண்டு இடைநிலைத் தீவகமாக நிற்கின்றது.

சோழன் செங்கணன் என்பவன், உறையூரையாண்ட செங்கோற்சோழனுகிய சுபதேவனுக்குக் கமலவதி வயிற்றில் பிறந்தவன். கமலவதி தேவியானவள் இவனைக் கருப்பத்தில் கொண்டு கருவுயிர்க்கும் காலத்தில், சோதிடர்கள் 'இன்னும் ஒரு முகூர்த்தம் கழித்துக் குழந்தை பிறக்குமாயின், இவ்வுலகத்தை யெல்லாம் தன்னொரு குடைநீழலில் ஆளும்' என்று கூறினர். அதனைக்கேட்ட கமலவதி தன் வயிற்றுதிக்கும் குழந்தை இவ்வுலக முழுதும் ஆளவேண்டும் என்னும் அவாவால் அந்நன்முகூர்த்தம் வருமளவும் தான் கருவுயிர்க்காம லிருப்பதற்காகத் தன் கால்களை உயரத்தூக்கிக் கட்டிவிடுமாறு கூறினள். ஏவற் பெண்டிரும் அங்ஙனமே செய்தனர்.

181896

பின்னர்ச் சோதிடர்கள் கூறிய நன்முகூர்த்தம் வந்தவுடன் கமலவதியின் கால்களை யவிழ்த்துவிட்டனர். அவளுக்கு உடனே ஓராண்மகனும் பிறந்தனன். பிறந்த அம்மகன், பிறக்கவேண்டிய காலத்துப் பிறவாமல் சிறிதுபொழுது கருப்பையில் இருக்க நேர்ந்தமையால், கண்கள் மிகவும் சிவந்து பிறந்தனன். அதனைக்கண்ட அவன் தாய், இவன் என் கோச்செங்கணனே என்றுகூறி, எடுத்துத் தழுவிக்கொண்டனள். அதுபற்றி அவன் கோச்செங்கணான் என்று பெயர் குறிக்கப்படுவானாயினான். கமலவதியும் அகாலப் பிரசவத்தினால், மிகுந்த நோவுற்று இவ்வுலக வாழ்வை நீத்தனள். பின்னர்க்கோச்செங்கணான், தன் பிதாவினால் வளர்க்கப்பட்டுத் தக்கபருவத்தில் செங்கோல் கைக்கொண்டு சோழராச்சியத்தை யாளத்தொடங்கினன்.

இவ்வரசன் முன் பிறவியில் ஒரு சிலம்பியாகப் பிறந்திருந்தான். அச்சிலம்பி திருவானைக்காவில் வெள்ளைநாவல் மரத்தின்கீழ் எழுந்தருளியுள்ள சிவலிங்கத்தினிடத்து அன்புபூண்டு, அவ்விலிங்கத்தின்மேற் சூரிய கிரணங்கள் படாமைத் தனது வாய்நூலினால் மேலே கோயிலமைத்து வணங்கி வழிபட்டுவந்தது. அவ்விதமே அவ்விலிங்கத்தினிடத்தில் அன்புகொண்டுள்ள ஒரு யானையும் அவ்விலிங்கத்தை யடைந்து, இலிங்கத்தின் மேலேயுள்ள சிலம்பிநூல் தூய்மையற்றது: அது சுவாமிமேல் இருத்தல்கூடாது என்றுகருதிச் சிலம்பியமைத்தகோயிலைச் சிதைத்துத்தான் தன் மனத்தின்படி இலிங்கத்தை வழிபட்டு வந்தது.

இங்ஙனம் சிலம்பி கோயிலமைக்கவமைக்க யானை யதனைச் சிதைத்துவந்தது. அதனால் சிலம்பி சினம்கொண்டு, நானமைக்கும் கோயிலைச் சிதைப்பவர் யாவராயினும் அவருக்குத் தீங்கிழைக்கவேண்டும் என்று கருதியிருக்கையில்

ஒருநாள் யானை தான் வழிபடுவதற்காகச் சிலம்பியின் கோயிலைக் கலைத்தது. அதனைக்கண்ணுற்ற சிலம்பி யானையின் துதிக்கைப்புழையில் நுழைந்து மேலேயேறி அதனை வெடுக்கென்று கடித்தது. யானை அது கடித்த துன்பம் பொறுக்கமுடியாமல் கையைக் கீழே யறைந்தது. அவ்வறையின் அதிர்ச்சியால் சிலம்பியிறந்தது. சிலம்பி கடித்தமையால், யானையும் இறந்தது. யானைக்கு ஈசுவரன் சிவபதவிதந்தருளினார். யானையால் வழிபடப்பட்டமையின் அவ்விடம் யானைக்கா என்று அழைக்கப்படுகின்றது. சிலம்பி ஈசுவரனுக்குக் கோயிலமைத்த நல்வினையின் பயனால் சுபதேவனிடத்தில் கோச்செங்கணான் என்னும் பெயருடன் சோழவரசனாக வந்து பிறந்தது.

கோச்செங்கணான் முன்னைப்பிறவியின் தொடர்பால் யானைக்காவிறைக்கு அன்புபூண்டு ஒழுகி, அவருக்கு உகப்பான பணிவிடைகள் எல்லாம் செய்து, அரசாண்டு வந்தனன். அதுவுமன்றித் தன் தேயத்தின்கண் கோச்செங்கணான் எழுபது சிவன்கோயில்கள் எடுப்பித்துள்ளான். இதனை "எண்டோளீசற் கெழின்மாட மெழுபதுசெய் துலகம் ஆண்ட திருக்குலத்து வளச்சோழன்" என்று திருமங்கை மன்னன் கூறியுள்ளார். (இவனுக்கு முன்பிறவியில் யானை பகையாயிருந்தமையால், இப்பிறவியில் அவன் கட்டிய கோயில்களின் கர்ப்பக்கிரஹம் யானைகள் உட்புகாவாறு கட்டப்பட்டுள்ளதாம்.) இவன் பரமசிவபக்தனாகக் கொண்டாடப்பட்டு, அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவனாகக் கூறப்பட்டுள்ளான் "தென்னவனாயுலகாண்ட செங்கணாற்கடியேன்" என்பது சுந்தரமூர்த்தி சுவாமியின் வாக்காகும். சைவர்கள் இவனைக் கோச்செங்கட்சோழ நாயனார் என்று அழைப்பார்கள். அங்ஙனம் இவன் சிவ

பக்தனாக இருந்தாலும், ஸ்ரீவைஷ்ணவ ஆழ்வார்களில் ஒருவராகிய திருமங்கையர்கோன், இக்கோச்செங்கட் சோழனும், அவனது தந்தையாகிய செங்கோற்சோழனும் திருநறையூர் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள திருமாலை வணங்கி வழிபட்டனர் என்று குறித்துள்ளார். அங்ஙனம் அவர் குறித்தவை, "செங்கோல் வளவன் தான் பணிந் தேத்தித்திகழூர் நங்கோன் நறையூர்" "செம்பியன் கோச்செங்கணான் சேர்ந்தகோயில் திருநறையூர்" "செங்கணான் கோச்சோழன் சேர்ந்தகோயில் திருநறையூர்" இவை முதலியனவாம்.

இக்கோச்செங்கணான் தெய்வபக்தி மிக்கவனா யிருந்தமையே போல மிக்க வீரம் பொருந்தியவனாகவும், புலவர்களிடத்து அன்பு மிக்கு அவர்கள் வேண்டியவற்றைச் செய்பவனாகவும் விளங்கினான்.

இச்சோழனுக்கும் சேரமான் கணைக்காலிரும்பொறை யென்னும் சேரவரசனுக்கும் போருண்டாயிற்று. அப்போரில் இருவரும் தங்கள் தங்கள் வீரங்களைக் காட்டினர். வெற்றி தோல்விகள் அறியப்படவில்லை. இவர் போருடற்றிய களத்தில், தாளற்றனவாகவும் உடலற்றனவாகவும் தலையற்றனவாகவும், கையற்றனவாகவும், யானைகளும், குதிரைகளும், காலாட்களும் ஆயின. கவந்தங்கள் நின்று கூத்தாடின. இரத்த வெள்ளம் பெருக்கெடுத்தோடிற்று. அக்களத்தில் காளிகளும கூளிகளும் பிணங்களின் நிணங்களைத்தின்று களித்து விளையாடின. அக்கடும்போரினிறுதியில், சேரமான் கணைக்காலிரும்பொறை, கோச்செங்கணானிடத்தில் அகப்பட்டுக் கொண்டனன், பிடிபட்ட அவனைக் கோச்செங்கணான் காலில் தளை பூட்டிக் குடவாயிற் கோட்டம் என்னுமிடத்தில் சிறை வைத்தனன்.

இக்கணைக்காலிரும் பொறைக்குத் தோழராகப் பொய்கையார் என்னும் புலவர் ஒருவரிருந்தனர். அவர் தம் நண்பினனுக்கு நேர்ந்த விபத்தையறிந்து, தாம் நேரே கோச்செங்கணானிடம் சென்று, அவன் கணைக்காலிரும் பொறையோடு களத்தில் கொண்ட வெற்றியைப் புகழ்ந்து பாடுவாராய் நாற்பது வெண்பாப் பாடல்களால் களவழி நாற்பது என்று ஒரு பிரபந்தம் பாடினர். அப்பாடல்களைக்கேட்ட கோச்செங்கணான், புலவரை நோக்கிப் "பெரியோரே! நீர் வேண்டுவனவற்றை என்னிடத்தில் கேட்டுப் பெற்றுக்கொள்க" என்று கூறினன். அப்பொழுது புலவர், "அரசனே! உன்னாற் குடவாயிற் கோட்டத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள எனக்கு நண்பனான கணைக்காலிரும் பொறையைச் சிறை வீடு செய்யவேண்டும்" என்று கேட்டனர்.

கோச் செங்கணான் அதனைக்கேட்டுப் புலவரது உண்மை நட்பிற்கு வியந்து, கணைக்காலிரும் பொறையினது கால்விழித் தளையைவெட்டி அவனுக்குப் பண்டையரசவுரிமைகளையுமீந்து சிறை வீடுசெய்து அவனதூருக்கு அனுப்பினான். இவ் வரலாறு இங்ஙனமாக—

சிறைக் கோட்டத்திருந்த கணைக்காலிரும்பொறை தனக்கு நீர் வேட்கை யுண்டானமையால் அதனை தீர்த்துக் கொளவதற்குச் சிறைக் காவலரிடத்து நீர் வேண்டினான். அவர்கள் அவன் வேண்டிய அப்பொழுதே கொடாது சிறிது தாழ்த்துக் கொணர்ந்து கொடுத்தனர். இரும்பொறை யதனைப்பெற்றுப் பருகாமல் கையில் வைத்துக் கொண்டே, "பிள்ளை இறந்து பிறப்பினும் தசைத்தடியாகிய மணை பிறப்பினும் அவற்றையும் ஆளல்லவென்று கருதாது வாளோச்சுதலில் தவிரார் அரசராயிருக்கப் பகைவர்

வாளாற்படாது, சங்கிலியாற் பிணிக்கப்பட்ட நாய்போலப் பிணித்துத் துன்பத்தைச் செய்து இருத்திய கேளல்லாத கேளிருடைய உபகாரத்தான் வந்த தண்ணீரை இரந்துண்ணக்கடவே மல்லேம் என்னும் மனவலியின்றி வயிற்றின் கண் தீயை மாற்ற வேண்டித் தாமே யிரந்துண்ணும் அளவினையுடையாரை அவ் வரசர் பெறுவார்களோ இவ்வுலகத்தின் கண்" என்னும் பொருளமைந்த பின்வரும் பாடலைக் கூறிவிட்டுத் துஞ்சினன். அவன் கூறியபாட்டு—

"குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளீர் வேளாண் சிறுபதம்
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே"

என்பதாம்.

இவ் வரலாறு புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது. முன்னைய வரலாறு, செங்கணன், கணைக்காலிரும் பொறையைச் சிறைவீடு செய்து பண்டுபோலரசாள வைத்துளான் என்றுள்ளது. பின்னையது இரும்பொறை சிறைக்கோட்டத்திலேயே உயிர் மாய்ந்தனன் என்று கூறியுள்ளது. இரண்டும் முடிவில் மாறுபட்டுள்ளனவாயினும் கணைக்காலிரும் பொறையைச் சிறைசெய்த விஷயத்தில் இரண்டும் ஒற்றுமையாயுள்ளன.

இக் கோச்செங்கணன் தமிழ் நாடு முழுதும் தன்னடிப்படித்து ஆண்டுள்ளான். இதனைத் "தென்னவனாயுலகாண்ட செங்கணான்" என்பது முதலியவற்றால் அறியலாம்.

# சோழன் கரிகாலன்.

இவன் உறையூரிலிருந்த பராந்தகச் சோழன் மகன். சாரமாமுனிவர், செவ்வந்தீசரை அருச்சித்து வணங்குவதற்காக நந்தவன மொன்றுபண்ணி அதில் நாகலோகத்திருந்து பூஞ்செடிகளைக்கொண்டு வந்து வைத்து வளர்த்து வந்தார். பராந்தகச்சோழன் மனைவி, ஏவலர்களால் நந்தவனத்திலிருந்து பூக்களைக் கொணர்வித்துத் தன்னையலங்கரித்துக்கொள்வாள். இதனை முனிவர் அரசனிடத்து அறிவித்தும் அவன் மனைவியிடத்து வைத்த காதலால் வாளாவிருந்தனன். முனிவர் இறுதியில் பொறுக்க முடியாமல் இவ்வநியாயத்தைச் செவ்வந்தீசரிடம் முறையிட்டுக்கொண்டார். அவர், "முனிவரே! இவ்வுறையூரும் அரசனும் சிலநாளைக்குள் மண்மாரியால் அழிவெய்துவது திண்ணம்" என்று கூறினர்.

அவ்வண்ணம் அவர் கூறியவாறே சிலநாள் பொறுத்து, உறையூரில் மண்மாரி பெய்யத் தொடங்கிற்று. அதனையறிந்த அரசன் அம்மாரிக்குத் தப்பவேண்டும் என்று கருதித் தானும் தன் மனைவியுமாகக் குதிரையொன்றன் மேலேறிக்கொண்டு அவ்வூரின் எல்லையைக் கடந்து செல்லத்தொடங்கினன். அம்மண்மாரி அவன் போகுமிடமெல்லாம் தொடர்ந்து அவன்மேல் மிகவும் பெய்து அவன் புதையுண்டிறக்கும்படி செய்தது. மனைவியோ மண்மாரிக்குப்பயந்து விரைந்து சென்றனள். நடுவில் ஆறொன்று குறுக்கிட அவள் அதனைக் கடக்க முடியாமல் ஆற்றின் வெள்ளத்திலகப்பட்டு, அதன் வழியே சென்று, அருகிலுள்ள ஓர் பாளையத்தில் தங்கியிருந்தாள். அப்பொழுது

அவள் கருப்பமுதிர்ந்தவளா யிருந்தனள். அவளை அவ்விடத்திலிருந்த முனிவர் தமது ஆச்சிரமத்தில் வைத்து ஆதரித்து வந்தனர்.

அவள் அம்முனிவ ராச்சிரமத்தில் ஓராண் மகனைப் பெற்று எடுத்து வளர்த்து வருவாளாயினள். இஃதிங்ஙனமிருக்க உறையூரிலுள்ளவர்கள் தங்களுக்கு அரசனில்லாமையால் பட்டத்து யானையை யலங்காரம் பண்ணித் தங்களுக்கு அரசனைக் கொணரவேண்டும் என்று கூறி விடுத்தனர். அவ்யானையும் அங்ஙனமே புறப்பட்டுச்சென்று அருகிலுள்ள பாளையத்தை யடைந்து, முனிவ ராச்சிரமத்திலுள்ள சோழர் குடியிலுதித்த குழந்தையையே தூக்கிச் செல்லவந்தது. அப்பொழுது அக்குழந்தை ஆச்சிரம வெளியில்விளையாடிக்கொண்டிருந்தது. யானை அக் குழந்தையைக் கையால் தூக்கிப்பார்த்தும் அசைக்க முடியவில்லை. முனிவர் இவன் அரசனாக வேண்டியவன் என்று கருதி அவன் தாயை யழைத்து இக் குழந்தையின் காலில் கரியால் கோடுகிழிக்க என்று கூறினார். அவள் அங்ஙனமேசெய்ய யானை குழந்தையைத் தூக்குவது எளிதாயிற்று. பின்னர் யானை குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய்ப் பட்டத்தில் வைத்தது. கரியால் காலில் கோடுகிழிக்கப்பட்டமையால் கரிகாலன் என்று பெயர் பெற்றனன் என்பார் ஒருசாரார்.

இவன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியின் புதல்வன் என்று சங்கநூல்கள்கூறும். இவன் சிறுவனாக இருக்கும் காலத்தில் இவனிடத்துப் பகைகொண்டார் சிலர் இவன் அரசாட்சியை யெய்தக்கூடாது என்று கருதி இவன் தங்கியிருந்த வீட்டைத் தீக்கொளுவுவாராயினர். அத்தீயினுக்குத் தப்புவதற்கு இவன் அவ்

வீட்டினின்றும் வெளியேறுங்காலை இவன் காலில் தீத் தாக்கிக் கால் கரிந்துவிட்டது. அது பற்றியே இவன் கரி காலன் என்று பெயர் வழங்கப்பட்டனன் என்பர் மற் றொரு சாரார். இவர்கள் இதற்குமேற்கோளாக:—

"முச்சக் கரமு மளப்பதற்கு நீட்டியகால்
இச்சக் கரமே யளந்ததால்—செய்ச்செய்
அரிகான்மேற் றேன்தொடுக்கு மாய்புனனீர் நாடன்
கரிகாலன் கால்நெருப் புற்று"
"சுடப்பட் டுயிருய்ந்த சோழன் மகனும்
பிடர்த்தலைப் போரானைப் பெற்ற—கடைக்கால்
செயிரறு செங்கோல் செலீஇயினு னில்லை
உயிருடையா ரெய்தா வினை"

என்னும் வெண்பாக்களைக் காட்டுவார்கள்

இவன் சிறு பிராயத்திலேயே அரசாட்சியைக் கைக் கொண்டு ஆளத்தொடங்கினமையால் தனக்கு ஆராய்ச் சித் துணைவராகத் தன் அம்மானுகிய இரும்பிடர்த்தலை யார் என்னும் புலவரைக் கொண்டிருந்தனன். இதனை மேலே காட்டியுள்ள இரண்டாவது வெண்பாவாலறிக.

இவன் இளம்பிராயத்தினனாய்ச் சிம்மாசனத்தில் வீற் றிருந்து செங்கோல் செலுத்துங்கால், இரண்டு முதியவர் கள் தம்முள் மாறுபட்டு நியாயம் பெறுவதற்காக இவ னது அவைக்களம் புகுவாராயினர். புகுந்த அவர் இவ னது இளமை கருதி இவனால் தங்களுக்கு நியாயம் கிடையாது என்று மனத்தில் நினைத்து வெளிப்புகுவாரா யினர். அவர்கள் கருத்தைக் குறிப்பானறிந்த கரிகாலன் அரியணையிருந்து இழிந்து, உள்ளேசென்று நரைமுடித்து முதுமை யெய்திக் கிழப்பருவ முடையவனாக அம்முதிய

வர்கள் காணுமாறு அரியணையில் வந்தமர்ந்தான். அவர்கள், இவன் முதியவனே, நாம் முதலில் கருதியது தவறு என்று நினைத்து, இவனை யடைந்து தங்களுடைய வழக்கை அறிவித்தனர். அவ்வழக்கைக் கேட்ட கரிகாலன் அவர்களிருவரும் உவக்குமாறு வழக்குத் தீர்ப்புக் கூறினன். அதனைக்கேட்ட அவர்கள் மனவமைதியோடு சென்றனர். இதனை:—

"இளமை நாணி முதுமை யெய்தி
உரைமுடிவு காட்டிய வுரவோன்"
"உரைமுடிவு காணா னிளமையோ னென்ற
நரைமுது மக்க ளுவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் குலவிச்சை
கல்லாமற் பாகம் படும்"

என வருவனவற்றாலும், "தம்முள் மறுதலையாயினார் இருவர் தமக்கு முறைசெய்ய வேண்டி வந்து, சிலசொன்னால் அச்சொன் முடிவு கண்டே ஆராய்ந்து முறைசெய்ய அறிவு நிரம்பாத இளமைப் பருவத்தானென் றிகழ்ந்த நரைமுது மக்களுவக்கும் வகை நரை முடித்து வந்து முறைவேண்டி வந்த இருதிறத்தாரும் சொல்லிய சொற்கொண்டே ஆராய்ந்தறிந்து முறைசெய்தான் கரிகாற்பெருவளத்தானென்னும் சோழன்; ஆதலால், தத்தம் குலத்துக்குத் தக்க விச்சைகள் கற்பதற்கு முன்னே செம்பாக முளவாம" என்னும் மேலே காட்டிய வெண்பாவினுரையாலும் நனகுணரலாம்.

இவன், சேரனொருவனையும் பாண்டியனொருவனையும வெண்ணில் என்னும ஊரிடத்துப் பொருது, வென்றனன என்று பொருநராற்றுப் படையடிகளால் அறியக்கிடக்கின்றது. அவ்வடிகள்:—

"இரும்பனம் போந்தைத் தோடுங் கருஞ்சினை
அரவாய் வேம்பி னங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணிற் றாக்கிய வெருவரு நோன்றாள்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவன்"

என்பனவாம்.

இவ்வெண்ணிப் பறந்தலையில் இவ்வரசனோடு எதிர்த்த சேரன் பெருஞ்சேரலாதன் எனப்படுவான். அவன், சோழனால் எறியப்பட்டவேல் மார்பிற்றைத்து ஊடுருவி முதுகிற் புண் செய்துகொண்டு போனமையால், சுத்தவீரர்கள் போரில் முதுகிற்புண் உண்டாகப் பொறாராதலின் அச்சேரனும் பொறாமல் அப் புண்ணுண்டானமைக்கு நாணி வடக்கிருந்தனன்.

இவ்வெண்ணிப் போரை உடனிருந்து கண்ட வெண்ணிக்குயத்தியார் என்பவர், "நீர் செறிந்த பெரிய கடலின் கண்ணே மரக்கலத்தை யோட்டிப் போர் செய்தற்குக் காற்றின்றி நாவாய் ஓடாதாக ஆண்டு வளிச்செல்வனை யழைத்து ஏவல்கொண்ட வலியோன் மரபினுள்ளானே, மதம்பொருந்திய யானையையுடைய கரிகால்வளவ, மேற்சென்று போரை எதிர்நின்று கொன்ற நினது வலிதோற்ற வென்றவனே, நின்னினும் நல்லனல்லவே? தழைத்தலைக் கொண்ட புதுவருவாயையுடைய வெண்ணி யென்னும் ஊர்ப்புறத்துப் போர்க்களத்தின்கண் மிகப்புகழை உலகத்துப் பொருந்திப் புறப்புண்ணிற்கு நாணி வடக்கிருந்தோன்" என்னும் பொருளமைந்த பாடலைக் கரிகாலனை நோக்கிக் கூறியுள்ளார்.

இக்கரிகாலன் காவேரிக்குக் கரை வகுத்தனன். அதற்காக அவன் தன் கீழுள்ள சிற்றரசர்களுக்கு இடத்தை யளந்துவிட்டு அவ்விடத்தில் அவர்களைக் கரையெடுக்கும் வண்ணம் கட்டளையிட்டனன் இதனை, "கரிகாலன் தன் பாத கமலங்களிற் பொருந்திய கண்களையுடையவரான திரிலோசனன் முதலிய அரசரைக்கொண்டு காவேரிக்குக்கரை கட்டுவித்தனன்" என்று கூறும் கல்வெட்டினால் அறியலாம். மேலே கூறிய திரிலோசனன் என்பவன் பல்லவ அரசனாய் ஆந்திர நாட்டிலிருந்து அரசாண்டவன். அவன் கரிகாலனுக்கு முக்கிய சேனாதிபதியாக இருந்தனன், என்பர். இங்ஙனம் காவேரிக் கரைகட்டும் காலத்தில் ஒரு சிற்றரசன தனக்காக விடப்பட்டுள்ள இடத்தில் கரைகட்ட வாராமல் இருந்தனன். அதனால் சினமடைந்த கரிகாலன் அவ்வரசனது கண்ணைப் பிடுங்கியெறிந்தனன். இதனை:—

தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற்
றொடர வந்திடா முகரி யைப் படத்து
எழுது கென்றுகண் டிவைமி கைக்க ணென்று
இங்க ழிக்கவே யங்க ழிந்ததும்

என்னும் பரணியாலுணரலாம்.

இக்கரிகாலன், தமிழ்நாட் டெல்லையுள் தன்னோடு எதிர்த்துப் பொரும் அரசரைப் பொருமையால் வடதிசை பெருந்திசையாதலின் அவ்விடத்து அரசர்களுடன் போருடற்றலாம் என்று தனக்குப் போருடற்றுதலின் கண்ணுள்ள பேராசையால் கருதித் தன் வழிபடு தெய்வத்தை மனத்தான் வணங்கி, அவ்வடதிசையை நோக்கிச் சென்றனன். அங்ஙனம் செல்கின்ற அவன், காஞ்சி நகரத்தில் காமக்கோட்டத்தைக் காவல் செய்து, அங்கே தங்கியிருக்கின்ற சாத்தன் என்னும் தெய்வத்தினால் கொடுக்கப்பட்ட

செண்டு என்னும் ஆயுதத்தைப்பெற்றிருந்தமையால் நேரே இமயமலை சென்று 'இம்மலை எனக்குப் பகையாகக் குறுக்கிட்டு, என்னுடைய போக்கைத் தடை செய்தது' என்று முனிந்து, தான் பெற்றுள்ள செண்டினால் அதனை யடித்துத் திரித்துப் பின் அம்மலை பண்டுநின்றபடி நிற்கட்டும் என்று அதன் முதுகின்மேல் தனது அடையாளமாகிய புலி முத்திரையைச் சார்த்தித் தன் முனிவு ஆறித் திரும்பினன். இதனை:—

"கச்சி வளைக்கைச்சி காமக்கோட் டங்காவன்
மேச்சி யினித்திருக்கும் மெய்ச்சாத்தான்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளத்தான்
சோம்போற் கிரிதிரித்த செண்டு"

"செண்டு கோண்டுகரி காலனொரு காலி னிமயச்
சிமய மால்வரை திரித்தருளி மீள வதனைப்
பண்டு நின்றபடி நிற்கவிது வென்று முதுகிற்
பாய்பு லிக்குறி பொறித்தது மறித்த பொழுதே"

எனவரும் பாடல்களாலறியலாம்.

அங்ஙனம் செய்துவிட்டு, இவன் திரும்புங்கால், வச்சிர நாட்டரசன் இவனுக்கு உதாசீனன் ஆகையால், தான் இவனுக்குக்கொடுக்கவேண்டிய முறைப்படி திறையாகமுத்தின் பந்தரைக் கொடுத்தனன். மகதநாட்டரசன் இக்கரிகாலனுடன் போர்தொடங்கி,இறுதியில் அப்போரைத்தாங்கமாட்டாமல் தோற்றுத் தன்னிடத்துள்ள வித்யா மண்டபத்தைத்தான் தோற்றதற் கறிகுறியாகக் கொடுத்தனன். பின்னர், அவந்திநாட்டுவேந்தன் இவனுக்கு நட்பினன் ஆதலின் அந்நட்புமுறை கருதித் தன்னிடத்துள்ள வாயிற்றோரணத்தை இவனுக்குக் கொடுத்தனன். இங்ஙனம் மேலேகூறிய

பந்தரும், மண்டபமும், தோரணமுமென்னுமிவை, பொன்னுனும் மணியானும் செய்யப்பட்டனவாயினும், நுண்ணிய தொழிலவல்ல கம்மியராற் பண்ணப்படாதன; ஆயின், இவை யாராற் பண்ணப்பட்டனவெனின், இவற்றை அக்காலத்துக் கொடுத்த அம்மூவருடைய தொல்லோர் ஒரோர் காலத்து ஒரோவிடத்துச் செய்த உதவிக்குக் கைம்மாருக மயனுல் நிருமித்துக் கொடுக்கப்பட்டனவாகும். இவை ஒன்றற்கொன்று சேய்நாட்டனவாய்த் தம்மில்கூடாதிருந்தன. இப்போது இக் கரிகாலன் ஆணையால் ஒரு நாட்டு ஒருரின்கண்ணே கூடினவாயின. இவ்வரலாறு சிலப்பதிகாரத்தில் காணக்கிடப்பது.

இவன் புலவர்களைப் போற்றுபவன் என்பதைத் தன் மேல் பட்டினப் பாலை என்பதைப் பாடிய கடியலூர் உருத்திரங்கண்ணனருக்குப் பதினறுஇலட்சம்பொன்பரிசளித்து மகிழ்ந்தனன் என்பதனுல் அறியலாம். இவ்வரலாறு:—

“தத்து நீர்வராற் குருமி வென்றதும்
தழுவு செந்தமிழ்ப் பரிசில் வாணர்பொன்
பத்தோ டாறுநூ றுயிரம்பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்”

எனவரும் கலிங்கத்துப்பரணிச் செய்யுளில் கூறப்பட்டுள்ளது. முடத்தாமக் கண்ணியார் என்னும் புலவர் பாடிய பொருநராற்றுப் படைக்கும் இவனே தலைவனுவான்.

# பாண்டியன் மாகீர்த்தி.

இவன் கபாடபுரத்தைத் தலைநகராகக்கொண்டு, தென்னாட்டையாண்ட பாண்டிய மன்னனாவன். இவன் காலத்தே இவன்நாடு பெரும்பிரளயத்தால் அழிவுற்றது. இதனை அடியார்க்கு நல்லார் "முதலூழி இறுதிக் கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையு முள்ளிட்டவற்றைப் புணர்ந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீஇயினார் காய்சின வழுதிமுதற் கடுங்கோன் ஈறாயுள்ளார் எண்பத்தொன்பதின்மர்; அவருள் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி என்னும் ஆற்றிற்கும் குமரியென்னுமாற்றிற்கு மிடையே எழுநூற்றுக்காவதவாறும் இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ்மதுரை நாடும் ஏழ்முன்பாலை நாடும் ஏழ் பின்பாலைநாடும் ஏழ்குன்றநாடும் ஏழ்குணகாரைநாடும் ஏழ்குறும்பனைநாடும் என்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி கொல்லம முதலிய பன்மலைநாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க்குமரி வட பெருங் கோட்டின்காறும் கடல் கொண்டொழிந்தது" என்று கூறியிருப்பதால் அறிந்து கொள்ளலாம்.

மேலே அடியார்க்கு நல்லார் கூறியவற்ருல் முதலூழியில் முதற்சங்க மிருந்ததென்றும், அம் முதலூழி யிறுதியில் அச் சங்கம் முடிவடைந்தது என்றும், அச் சங்கத்தில் கவியரங்கேறிய பாண்டியர்கள் எழுவரென்றும், அவருள் சயமாகீர்த்தி என்பவனும் ஒருவன் என்றும், அச் சயமாகீர்த்தியே முதற் சங்கத்தின் முடிவில் பெரும் பிரளயமுண்டான காலத்து இருந்தவன் என்றும், விளங்குகின்றன.

பாண்டிநாடு கடல் கொள்ளப்பட்ட வரலாறு வேம்பத்தூரார் திருவிளையாடலிலும் பரஞ்சோதியார் திருவிளையாடலிலும் அடியில் வருமாறு கூறப்பட்டுள்ளது:—

"ஒரு காலத்தில் பழ மதுரையை நோக்கிப் பெருங் கடல், பொங்கியழிக்கப் போதலைப் பாண்டியன்கனவில் ஆலவாயடிகள் முன்னதாகக் கூறி, அக்கடல் வலியை ஒரு வேலையெறிந்து அடக்கும்படி அருளிச்செய்து மறையப் பாண்டியன் துயிலுணர்ந்ததும் அவ்வாறே கடல் பொங்கியழிக்க வருதலையறிந்து, சினந்து தன் கைவேலையெறிதலும் அக்கடல் தன் ஆரவாரமடங்கி அவன்கால் விளிம்பை யலம்பிப் பணிவுடன் சென்றது. ஆழி யவன் கால் விளிம்பை யலம்பின காரணத்தால் அப்பாண்டியன் ஆழி வடிம் பலம்பநின்ருன் என்று அழைக்கப்படுவானுயினன்" என்று கூறப்பட்டிருப்பதோடு பரஞ்சோதியார் திருவிளையாடலில் அதுகீர்த்தி பாண்டியன் என்னும் அரசன் காலத்தில் உண்டானதாகக் கூறப்பட்டுள்ளது. இதனை:—

"வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடு கோடுங்கடல் கோள்ள"

என்று சிலப்பதிகாரம் காடுகாண் காதையில் கூறியிருக்கின்றது.

பின்னர் மாகீர்த்தி, தன்னாட்டின் பெரும் பாகம் கடல் கொள்ளப்பட்ட காரணத்தால் பாண்டியர்களின் பழைய இராசதானியாக இருந்த பழமதுரையை நீத்துக் கபாடபுரம் என்னும் இடத்தில் தலைநகரை உண்டாக்கிக் கொண்டு, அரசாளத் தொடங்கி, முதற் சங்கமும் பிரளயத்தில் மூழ்கிப்போனமையால், அறிவுடைய பெரியோர்களை ஒன்று சேர்த்துக் கபாடபுரத்தில் வேறொரு சங்கத்தை உண்டாக்கினன். இதனை அடியார்க்கு நல்லாரே தமது உரைப்பாயிரத்தில் "இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்துத் தொல்காப்பியம் புலப்படுத்திய மாகீர்த்தியாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் அவைக்களத்து அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழிமோசியாரும் வெள்ளூர்க்காப்பியனாரும் சிறுபாண்டரங்கனாரும் மதுரை யாசிரியன் மாறனாரும் துவரைக்கோமானும் கீரந்தையாரும் என்றித் தொடக்கத்தார்" எனக் கூறியுள்ளார்.

அகத்தியருடைய தலைமை மாணாக்கராக விளங்கிய திரணதூமாக்னி என்று பெயர் வாய்ந்த தொல்காப்பியனார், தமிழ் மொழியின் இயற்கையையும், தமிழர்களின் ஒழுக்க வழக்கங்களையும் நன்குணர்ந்து கொண்டு, தமிழ் மொழிக்கே முதல் நூலாகவும் பேரிலக்கணமாகவும் விளங்கிக்கொண்டிருக்கின்ற தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலைச் செய்து இச்சயமாகீர்த்தியின் அவையில் அரங்கேற்ற எண்ணினர். இவ்வரசன் தொல்காப்பியரைத் தமிழிற்கு இலக்கணநூல் செய்துதருக என்று கேட்டதாகவும் தெரியவருகின்றது.

தொல்காப்பியர் தாம் செய்த நூலை இவ்வரசன் சபையில் வந்து கேட்கவேண்டும் என்று நுண்ணறிவுடையோராகிய அதங்கோட்டாசான் என்பவரை அழைத்தனர். இவ்வதங்கோட்டாசான் அகத்தியருடைய மாணக்கராய்த் தொல்காப்பியருடன்பயின்றவர். தமக்கும் தொல்காப்பியருக்கும் உள்ள பகைமையால், அகத்தியர் அதங்கோட்டாசானை நோக்கி, நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க என்றனர். ஒருவர் ஆசிரியர் ஒருவர் உடன் பயின்றோர். இருவருக்கும் பொதுவில் அதங்கோட்டாசான், தொல்காப்பியன் செய்த நூலில் குற்றங்கூறி, அதனை இகழ்ந்து தள்ளிவிடுவேன் என்று அகத்தியரிடம் கூறிச் சயமாகீர்த்தியின் அவையை யடைந்து, தொல்காப்பியர் செய்த நூலைக்கேட்டுப் பல இடங்களில் குற்றம் கூற அவற்றிற்கெல்லாம் தொல்காப்பியர் தக்கவிடை கூறி, நிலை நாட்டினர். தொல்காப்பியர் நூல் குற்றமற்ற நூல் என்று அதங்கோட்டாசான் ஒப்புக்கொண்டனர். தொல்காப்பியருக்கும் அகத்தியனாருக்கும் பகைநேர்ந்த வரலாறு:—"தேவரெல்லாருங் கூடி யாம் சேர இருத்தலின் மேருத்தாழ்ந்து தென்றிசை யுயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற் குரியவர் என்று அவரை வேண்டிக்கொள்ள, அவரும் தென்றிசைக்கண் போதுகின்றவர் கங்கையாருழைச்சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு, பின்னர், யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு புலத்தியனாருழைச்சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப் பெயர்ந்து துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்

குடி வேளிருள்ளிட்டாரையும்; அருவாளரையும் கொண்டு போந்து காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின் கண்ணிருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி, நீ சென்று குமரியாரைக் கொண்டுவருக எனக்கூற, அவரும் எம்பெருமாட்டியை எங்ஙனம் கொண்டுவருவல் என்றார்க்கு, முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகல நின்றுகொண்டு வருக, என, அவரும் அங்ஙனம் கொண்டு வருவழி, வையைநீர் கடுகிக் குமரியாரை ஈர்த்துக்கொண்டு போகத் தொல்காப்பியனார் கட்டளையிறந்து சென்று ஓர் வெதிர்ங்கோலை முறித்து நீட்ட அதுபற்றி யேறினார்; அது குற்றம் என்று அகத்தியனார், குமரியாரையும் தொல்காப்பியனாரையும் சுவர்க்கம் புகாப்பிர் எனச் சபித்தார். யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பிர், என அவர் அகத்தியனாரைச் சபித்தார்" அதனால் அவர் இருவருக்கும் பகை நேர்ந்தது என்பது தொல்காப்பியப் பாயிரச்சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் எழுதிய விசேடவுரையா லறியலாம். தொல்காப்பியப் பாயிரச்சூத்திரம்:—

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடைத், தமிழ்கூறும் நல்லுலகத்து
வழக்கும் செய்யுளு மாயிரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்
நிலந்தரு திருவிற் பாண்டிய னவையத்து

அறங்கறை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பி னைந்திர நிறைந்த
தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே''

என்பதாம். இது தொல்காப்பியருடன்பயின்றவரா கிய பனம்பாரனார் என்பவரால் செய்யப்பட்டது.

முன்னொருகால் தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் கடும் போர் ஒன்று நடந்தது. அப்போர் நீடித்தநாள் நடந்தமை யால் எல்லா உலகங்களும் அதனால் வருந்தத் தொடங் கின. இச்சயமாகீர்த்தி என்பான் அக்காலத்துயாவரினும் மேம்பட்ட பலமுடையவனா யிருந்தமையால் அவன் ஒரு வனால்தான் அப்போரினை ஒழிக்கமுடியும். அப்போர் ஒழிந்தால் தேவரும் யாவரும் நன்மை எய்துவர். இன் னும் சிறிது நாள் நீட்டித்து நடந்தால் அசுரர் வலி பெரு கித் தேவர்களை யழித்து விடுவார். இவற்றையெல்லாம் மா கீர்த்தி என்பான் நன்குணர்ந்துநீள்விசும்பு சென்று, தேவர் களையும் அசுரர்களையும் நோக்கி, 'நீங்கள் இப்பொழுதே போரினை நிறுத்திவிடவேண்டும். அங்ஙனம் நிறுத்தாமல் நான் கூறுவதை மீறி யாவரொருவர் போரை நடத்திச் செல்கின்றரோ அவர்களை நான் ஒறுப்பேன்' என்று கூறி னன். அவன் கூறுவது தேவர்களுக்கு உடம்பாடானமை யால் அவன் கூறிய வண்ணமே போரை நிறுத்தினர். அசு ரர்களுக்கு நிறுத்த மனமில்லாது போயினும் மாகீர்த்தி யின் வீரத்தினை நினைந்து நிறுத்த வேண்டியதாக ஆயிற்று. இருவரும் மாகீர்த்தியால் போரை நிறுத்தினர். யாவரும்

நன்மை யெய்தினர். இதனால் சயமாகீர்த்தியின் வீரம் நன்கு புலனாகும். இறையனார் களவியல் "ஓதல் காவல்" என்னும் 36-ம் சூத்திரவுரையில் "தேவரும் அசுரரும் அமர்செய்தகாலத்துத் தேவர்களையும் அசுரர்களையும் ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஒறுப்பல் யான் எனப் பாண்டியன் மாகீர்த்தி சந்து செய்வித்ததுபோல இருவரின் மிக்குச் செய்தீரை ஒறுப்பல் என்று சந்து செய்வித்தலும் ஒன்று; இருவரையும் ஒறுக்குந்துணை யாற்றலுடைய னாகலான்" எனவரும் வாக்கியம் இங்கே கவனித்தற்குரியது.

முற்றிற்று.

181894

ாம்.

ா நூல்கள்.

ளில் கற்கும்
ல கற்றனர்
எழுதப்பெற
அறிவை
றவு
0

ஆதி, ... சாலைக ... வகுப்புக்களில் கற்கும் மாணவர் பொருட்டு எழுதப்பெற்றது. இதி ... பல நீதிகளை விளக்கி, அந்நீதிகளுக்குக் கதைகளும் எழுதப்பட்டுள்ளன. இதனைக் கற்பதால் மாணவர்களுக்கு ஒழுக்கம் திருத்த மடையும். மாணவர்களிடத்தில் கவலையுள்ள ஆசிரியர்களும், பெற்றோர்களும் இத்தகைய நூலை மாணவர்கள் கற்குமாறு செய்தல்நலமாம். இது சிறுவர்களும் எளிதில் உணர்ந்து கொள்ளுமாறு தெளிவான நடையில் எழுதப்பெற்றுள்ளது.

இதன் விலை 0 6 0

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புக்ஷாப், புதுமண்டபம்,
மதுரை.